
கல்கி



KALKI 27-12-70 40 காசு



உங்கள் குழந்தை நலமாய் வாழ...
நல்ல கண்பார்வை
விடமின் ஏ நல்ல கண்பார்வை தருகிறது. 1 டீஸ்பூன் ஸிரப் மினடெக்ஸில் போதுமான அளவு விடமின் ஏ உள்ளது.
ஆரோக்கியமான இரத்தம்
ஸிரப் மினடெக்ஸில் ஆரோக்கியமான இரத்தம் பெறுவதற்குப் போதுமான இரும்புச் சத்து உள்ளது. இது வளரும் பெண்ணுக்கு அத்தியாவசியமானது.
உறுதியான எலும்புகள்
விடமின் டி எலும்புகள் உறுதியடைய அவசியம். 1 டீஸ்பூன் ஸிரப் மினடெக்ஸில் போதுமான அளவு விடமின் டி உள்ளது.
MINADEX
170 ml
SYRUP
MINADEX
Tonic syrup vitamins A & D with minerals
குறைந்த விலை— நிறைந்த ஆரோக்கியம்
உங்கள் குழந்தைக்குத் தருவீர்
ஸிரப் மினடெக்ஸ்®
மூப்பயன் அளிக்கும் டானிக்— க்ளாக்ஸோ தயாரிப்பு!
நினைவிருக்கட்டும், நாள்தோறும் 1 டீஸ்பூன் ஆரஞ்சு சுவையுள்ள ஸிரப் மினடெக்ஸ் உங்கள் குழந்தைக்குத்தந்தால், மூன்று விதங்களில் ஆரோக்கியப் பாதுகாப்பு கிடைக்கும்.
170 மி.லி....ரூ. 3.63
340 மி.லி....ரூ. 6.27
வரிகள் தனி
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
க்ளாக்ஸோ
CMGM-2-172 Tam

அழகினுக்கு
உயிரூட்டும் பணியில்...

லக்ஷ்மியின்

கோட்டா

வாயில் புடவைகள்

மாதரின் அழகு மேலும் பரிமளிக்க...
எழிலுக்கு எழில் செய்ய...
இதோ லக்ஷ்மியின் கோட்டா
புடவைகள் கண்கவர் புடவைகள்,
மெல்லியவை, பல வண்ணங்கள்,
எவருக்கும் ஏற்ற டிசைன்கள்
மேலும் நீடித்து உழைக்கக்கூடியது.

விற்பனை ஏஜெண்டுகள் :
ராம்கோ கடேசிஸ், கோயம்புத்தூர்-1.
வெங்கடேஷ் வஸ்திராலயா, சென்னை-1.
எமது ஷோரூம்கள் :
17/93, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர்.
387, மெயின் ரோடு. கோவில்பட்டி.
பிரத்தியேக விற்பனை நிலையம் :
எஸ்பி. எஸ் எஸ். கிளாத் ஷாப்.
11-12, கிழக்குச் சித்திரை வீதி. மதுரை.



ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

| உயர்வின் சின்னம் |

ESTD: 6-1-1947

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
திருநெல்வேலி - 6 போன்: 274

மத்திய அலுவலகமும், முதலீடுகள் பெற்றுக்கொள்ளுமிடமும்:
"S.V.C.F." பில்டிங், 36-B, மவுண்ட் ரோடு, சென்னை-2
(ஸ்பென்ஸர் & கம்பெனி எதிரில்) போன்: 84244

31-3-70ல் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5 லட்சம். மொத்த ஆஸ்திகள் ரூ. 2.34 கோடிக்குமேல். சீட்டில் ஈடுபடுத்திய தொகை 4.58 கோடிக்குமேல். செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வும் 1.76 லட்சம்.

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29-10-66-ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC I/ED (S) 66 பாரா 2 (i) (f)ன் ஸப்கிளாஸ் (x)ன்படி

எமது கம்பெனியின் ஒரு டைரக்டரால் காரண்டி செய்த லோன் வாங்கப்படுகிறது

தவணை	வட்டி விகிதம் ரூ. 300லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000-க்கு மேல்
ஒரு வருடம்	$8\frac{1}{2}$% P. A.	9% P. A.
இரண்டு வருடம்	9% P. A.	$9\frac{1}{2}$% P. A.

6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செக்குகள் அனுப்பப்படுகின்றன. அவைகளை எங்கள் எந்தக் கிளையிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் விபரம்:

தமிழ்நாடு, பாண்டிச்சேரியிலும் (அந்தந்த மாநில சிட் பண்ட்ஸ் ஆக்ட் பிரகாரமும்) பெங்களூரிலும் (சிட் பண்ட்ஸ் ஆக்ட் அமுலில் இல்லாத பிரதேசம்) பிரதி மாதம், மாதம் மும்முறை. தினசரி உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல். ரூ. 10,000 வரை மதிப்புள்ள ஏலச் சீட்டுகள் எங்கள் 38 ஆபீஸ்களிலும் நடத்தப்படுகின்றன.

அலுவலக நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர்:
ஸ்ரீ AR. ராமசாமி

டைரக்டர்கள்:
ஸ்ரீ RM. அருணாசலம்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

மத்திய அலுவலக மானேஜர்:
ஸ்ரீ K. A. ராம், B.A., B.L.

கடந்த மூன்று வருடங்களின் ஆதாயமும் டிவிடெண்டும்

வருடம்	வரி கொடுப்பதற்குமுன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்ட் விகிதம்
1967-68	89,468-58	28,468-58	17%
1968-69	98,125-26	34,125-26	17%
1969-70	100,582-77	34,582-77	17%

பொறுப்புகள் 31-3-1970

செலுத்தப்பட்ட மூதலனம் & ரிசர்வ் நிதி	ரூ.	1,75,608
காரண்டி செய்த லோன்ஸ்	ரூ.	46,35,729
தாற்காலிகக் கடன்	ரூ.	2,34,989
சீட்டு இதர பொறுப்பு வகைகள்	ரூ.	1,83,79,227
மொத்தம்	ரூ.	2,34,25,553

புதிய M குரூப் ரூ. 25,000 மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 12 கிலேதார் தெரு, திருச்சி போன்: 4275) யிலும், 43, விஸ்வநாத ராவ் ரோடு, மாதவநகர், பெங்களூர்-1. (போன்: 75955)யிலும், 13 வடக்கு வெளி வீதி, மதுரை. (போன்: 4880)யிலும், 36-B, மவுண்ட் ரோடு, சென்னை-2. (போன்: 84244)லும் நடைபெறும்.

ஆடிட் செய்த பாலன்ஸ் ஷீட்டுகள் வேண்டுபவருக்கு அனுப்பப்படும்

K. A. ராம், பி.ஏ., பி.எல்.
மத்திய அலுவலக மானேஜர்

V. மல்லையா எம்.ஏ., பி.எல்.
பொதுஜனத் தொடர்பு அதிகாரி

AR. ராமசாமி
மானேஜிங் டைரக்டர்

அனுமதித்த தேதி: 7-4-70

குளிர்காலத்திலும் சரி,
கோடைகாலத்திலும் சரி—
மார்கோசோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை—
சருமத்தை பாதுகாக்கிறது.

ஏனெனில் மார்கோவில் மட்டுமே வேப்பெண்ணெய் சேர்ந்துள்ளது.



மார்கோ சோப்

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCM-4183-A (Rev)



B. Dattaram-GSF-5

கல்கி

பொருளடக்கம்

சிறுகதைச் சிறப்பிதழ்

சாதாரண, மார்கழி 12 — டிசம்பர் 27, 1970

அட்டைப்படம்: கிறிஸ்துமஸ் காட்சி - ரவீந்திரபெல்லா.

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



மலர் 30

இதழ் 22

தேச கௌரவம் பிழைத்தது!

(யதேச்சாதிகாரத்துக்கு ஒரு செம்மையான அடி! சட்டத்துக்கிசைந்த ஜனநாயக வாழ்வுக்கு ஒரு புதிய உற்சாகம்! முன்னாள் மன்னர்களின் ராஜமானியத்தை நிறுத்தியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியதையே குறிப்பிடுகிறோம். இது குறித்த ராஜாஜியின் அரிய ஆங்கிலக் கட்டுரையைத் தமிழாக்கி வெளியிடுகிறோம்.

இந்தக் கட்டுரையில் 'ஹாமலின் நகர் ஊதுகுழலோன்' (Pied Piper of Hamelin) என்ற ஆங்கிலக் கவிதை பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ராபர்ட் ப்ரௌனிங் என்ற கவி குழந்தைகளுக்காக எழுதிய இக்கவிதையின் கருப்பொருளை வாசகர் அறிவது நலம் :

ஹாமலின் என்ற ஜெர்மானிய நகரத்தில் எலி உபத்திரவம் சொல்லவொண்ணாத இன்னலைத் தருகிறது. எலிகளைப் பிடித்து விரட்ட எந்த உபாயமும் எடுபடவில்லை. நகரத்தின் மேயர், மக்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் அவஸ்தைப்படுகிறார். இச்சமயத்தில் ஒரு விந்தை மனிதர் மேயரிடம் வருகிறார். அவர் ஓர் ஊதுகுழல் வித்தகராம். அவரது ஊதுகுழல் இசைக்கு ஒரு மந்திர சக்தி உண்டாம். அந்தச் சக்தியைப் பயன்படுத்தி எலிகளையெல்லாம் வசியப்படுத்தி, அப்புறப்படுத்தி விடுவதாகத் தெரிவிக்கிறார். இதற்குச் சம்மானமாக ஆயிரம் தங்கக் காசு கேட்கிறார். எலி உபத்திரவம் எப்படித் தீரும் என்று தவித்த மேயர் 'ஆயிரம்தானா, ஐம்பதாயிரம் காசுகூடத் தரலாமே' என்று கூறி, விந்தைக் குழலாரின் ஷரத்துக்கு ஒப்புகிறார்.

குழல்காரர் தமது ஊதுகுழலை ஊதுகிறார். அவ்வளவுதான். எலிப் பட்டாளம் முழுவதும் அந்த இசையில் இழுக்கப்படுகிறது. அவரைச் சூழ்ந்து கொள்கின்றன, அத்தனை எலிகளும். அவர் ஊதுகுழல் வாசித்தபடியே வேஸர் நதியை நோக்கிச் செல்கிறார். மந்திரத்தில் கட்டுப்பட்டாற் போல் அத்தனை எலிகளும் அவரைத் தொடர்கின்றன. அப்படியே நதியில் மூழ்கி விடுகின்றன.

அவர் மேயரிடம் வருகிறார். சம்மானம் கேட்கிறார். இப்போது மேயரின் போக்கே மாறிவிடுகிறது. முன்பு கொடுத்த வாக்கை மறுக்கிறார். 'அது ஒன்றும் வாக்குப் பிரமாணம் அல்ல; வெறும் தமாஷ்தான். ஐம்பது காசு வேண்டுமானால் தருகிறேன், அதற்கு மேல் தம்படி பெயராது' என்று மூர்க்கத்தனமாகச் சொல்லி விடுகிறார்.

மந்திரக் குழலார் வெளியேறுகிறார். மீண்டும் ஊதுகுழலை இசைக்கிறார். ஆகா என்ன விபரீதம்! இம்முறை ஹாமலின் நகரத்தின் குழந்தைகள் அனைத்தும் அதில் வசமாகி அவரைத் தொடர்கின்றன. மேயரும் மற்றவர்களும் இதைக் கண்கொண்டு பார்த்தாலும், மந்திர ஜால சக்தியில் அவர்கள் கட்டுண்டு கிடப்பதால் அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. குழலிசை வித்தகர் குழந்தைகளையெல்லாம் மலைக்கு அப்பாலுள்ள ஒரு மாயா லோகத்துக்குத் திரும்பி வராத பயணமாக அழைத்துப் போய் விடுகிறார்.)

ராஜமானிய தாவாவில் மன்னர்களின் சார்பில் வழக்காடிய ஸ்ரீ என்.ஏ. பால்கிவாலாவுக்கு 1970ம் ஆண்டு நவம்பர் 22ந் தேதி நான் பின்வருமாறு எழுதினேன் :

''ஒருவழியாக (சர்க்கார் தரப்பின்) அட்டர்னி — ஜெனரலுடைய சொற்சிலம்பம் முடிந்து விட்டது. இந்தச் சமயத்தில் நான் அகஸ்மாத்தாக 'Pied Piper of Hamelin' என்ற கவிதையைப் படிக்க நேர்ந்தது. ஆங்கிலம் அறிந்த நாடுகளில் எல்லாம் மெத்த விரும்பப்படும் கவிதை இது. நகரசபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி ஊதுகுழல்காரர் தம் பணியைச் செய்த பின், அந்த உடன்படிக்கையின் மறு தரப்பான மேயர், அதை வெறும் தமாஷாகக் கருதி, சம்மானம் தர மறுப்பதை பிரௌனிங் இணையற்ற நகைச்சுவையுடன் எளிமையாகப் பாடியிருக்கிறார். வாக்குறுதியை முறிப்பதன்

விளைவுகள் எப்படிப்பட்டன என்பதை அறிவுறுத்திக் கவிதை பின்வருமாறு முடிகிறது:

"ஆகையினால் பாலகனே,
நீயும்சரி, நானும்சரி
உலகத்தில் வாழ்கின்ற
உயிர்கள் அனைத்திடமும்
(ஊதுகுழல்காரர்களை
முக்கியமாய்ச் சொல்லிடுவேன்)
பாக்கிசாக்கி இல்லாமல்
பழங்கடனைத் தீர்த்திடுவோம்
சின்னஞ்சிறு எலிகளையோ,
பெத்த பெருச்சாளியையோ
இன்னிசையினால் கவர்ந்து
இன்னல்களைத் தீர்ப்போர்க்கு
முன்னம் கொடுத்துள்ள
வாக்கும் பிரமாணங்களை
என்னதான் நேர்ந்திடினும்
எந்நாளும் காத்திடுவோம்

"உலகப் புகழ் கொண்ட இக்கவிதை என்னை ஆகர்ஷித்துவிட்டது. அதைப் பற்றி இவ்வாரமே எழுத ஒரு சபலம் உண்டாயிற்று. ஆனால் இது கோர்ட் அவமதிப்பு என்று கூறி என்மீது அட்டர்னி-ஜெனரல் ஸம்மன் பிறப்பித்துவிடப் போகிறாரே என்று அஞ்சிப் பேசாதிருந்து விட்டேன்!"


இப்போது ஸுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வந்து விட்டதால் அந்தக் கவிதையை மேற்கோள் காட்டி எழுதுகிறேன். 'ஹாமலின் நகரத்து ஊதுகுழலோன்' என்ற பாட்டின் முடிவான தீர்ப்பையே ஸுப்ரீம் கோர்ட்டின் நீதிபதிகளும் ஏகமனதாகவெளியிட்டுள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் மன்னர்கள் விஷயமாக ஸ்ரீமதி இந்திரா காந்தி என்ன செய்வார் என்று தீர்க்கதிருஷ்டியில் கண்டது போலவே பிரௌனிங் கற்பனை செய்து பாடியிருப்பது ஆச்சரியம்! இந்த மடமையை அற்புதமான கவிதை ரூபத்தில் கண்டித்து விட்டார். எதிராளியிடமிருந்து ஒப்பந்தத்தின் பயனைப் பூரணமாகப் பெற்ற பின், தன் தரப்புக் கடமையை ஆற்ற மறுப்பது அவிவேகமும், மானக்கேடும் ஆகும். குழந்தைகளுக்கான நாட்டுப் பாடலாக இக்கவிதையை பிரௌனிங் இயற்றினார். இதுபோன்ற பாடல்கள் முதற் பார்வைக்கு வெறும் வேடிக்கையாகத் தான் தோன்றும். ஆனால் உண்மைக் கவி எழுதுவது எதனுள்ளும் ஒரு பெரிய இலட்சியம் இல்லாமல் போகாது. சம்ஸ்கிருதத்தில் 'கவி' என்றால் செய்யுள் செய்பவர் என்று மட்டும் பொருளல்ல; 'கவி' என்பது ஞானியையும் குறிக்கும்.

ஸுப்ரீம் கோர்ட் என்று ஒன்று இருப்பது எவ்வளவு அவசியம் என்று இந்தத் தீர்ப்பு நிரூபித்து விட்டது என்பதைப் பணிவுடன் தெரிவிக்கிறேன். இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றிவிட்டது நமது ஸுப்ரீம் கோர்ட். ஸர்தார் வல்லப பாய், ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு, (இன்றும் ஜீவியவந்தர்களாக உள்ள) இரண்டு கவர்னர் – ஜெனரல்கள், அரசியல் சாஸன சபைத் தலைவராக இருந்த பாபு ராஜேந்திர பிரசாத் ஆகிய எல்லோருடைய கௌரவத்தையும் காப்பாற்றிவிட்டது. மன்னர்கள் பல நூற்றாண்டுகளாக வம்சவாரியாக அநுபவித்து வந்த ஆட்சியுரிமையை விட்டுக் கொடுத்தால், அவர்களுக்கு வருஷாந்தர மானியமும், சலுகைகளும் தரப்படும் என்று இந்திய சர்க்காரின் சார்பில் அதிகாரபூர்வமாகப் பிரதிக்ஞை தந்ததில் இவர்கள் அனைவரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்கள்.

இந்த வாக்குப் பிரமாணம் அரசியல் சாஸனத்திலும் உள்ளடக்கப்பட்டது. மன்னர்களின் வருஷாந்தர மானியத்தொகை பற்றி பார்லிமென்டில் விவாதமும் வாக்கெடுப்பும் இல்லாதவாறு, அது இந்திய சர்க்காரின் செலவுக் கணக்கில் வைக்கப்பட்டது. அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் இந்த மானியமும் சலுகையும் உண்டு என்று சாஸனத்தில் உறுதிப் படுத்தப்பட்டது. இந்த அடிப்படையிலேயே வாரிசுகள் நியமனம் பற்றியும் 366(22) என்ற ஷரத்துச் சேர்க்கப்பட்டது. அதாவது வாக்குறுதி சகல விதங்களிலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இதுபோல் உலக சரித்திரத்திலேயே எந்த ஒரு சர்க்காரின் வாக்குப் பிரமாணத்துக்கும் இத்தனை காப்பு முடிச்சுக்கள் போட்டுக் கட்டியதில்லை.

மன்னர்களின் சம்ஸ்தானங்கள் இந்திய அரசின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் ஆட்சி உரிமை இந்திய சர்க்காருடையதாயிற்று. இவ்வளவும் நடந்தபின் இவ்வருடம் இந்திய சர்க்கார் தன் கடமையிலிருந்து வழுவ முயற்சி செய்தது. ஒப்பந்தத்தை மதித்துத் தங்கள் ஆட்சியுரிமையை விட்டுக் கொடுத்து, சாதாரண இந்தியப் பிரஜையாகிவிட்ட மன்னர்களை ஏமாற்றுவதற்குச் சர்க்கார் முற்பட்ட முறைகேட்டை எவ்வளவு கடுமையாகக் கண்டித்தாலும் தகும். இது உடன்படிக்கைச் சட்டத்தையே புறக்கணிக்க முற்பட்டதாகும். மன்னர்களும் மத்திய சர்க்காரும் செய்து கொண்ட உடன்



படிக்கைக்கு நிரந்தரமாக உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே அது அரசியல் சாஸனத்திலும் அங்கமாக்கப் பட்டது. இந்த நோக்கத்துக்கு நேர் எதிராக உடன்படிக்கைபடி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கடமைகளையே முறிப்பதற்கு அந்த சாஸனத்தைப் பிரயோகிக்க முற்பட்டது சர்க்கார். தனிமனிதர்களைப் பாதிக்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்குமுன் கடைபிடிக்கப் படும் நியதிகளையும் மறந்து, கேலிக்கிடமான வகையில் உத்தரவு போட்டது. வாக்குப் பிரமாணத்தை மீறிய குற்றத்துக்குத் தன் பிதா ஆளாகக்கூடாது என்பதற்காக ஸ்ரீ ராமசந்திரன் அயோத்தியிலிருந்து காட்டுக்குப் போனான்; அன்றிலிருந்து இந்தியாவில் நிலைத்துவிட்ட மரபைக் குப்பைக் கூடையில் எறியப் பார்த்தது இன்றைய அரசாங்கம். "ஒப்பந்த முறிப்பு கோர்ட்டின் ஆணை எல்லைக்கு உட்படாத ஆட்சி பீடச் செயல்" என்று அட்டர்னி – ஜெனரல் வாதாடிப் பார்த்தார். ஆனால் இது தர்மப்படி சற்றும் செல்லாது என்பது போலவே சட்டப்படியும் செல்லவில்லை.

ஒரே பிடிவாதமாக, முரட்டுத்தனத்துடன் தேசிய மானபங்கத்தை உண்டாக்க முனைந்தது இந்திய சர்க்கார். அந்தத் தேசிய மானபங்கம் நேராமல் காத்துவிட்டது ஸுப்ரீம் கோர்ட்.

'விதேச்சாதிகாரத்திலிருந்து நீதியையும், ஜனநாயகத்தையும் காக்கும் சக்தி வாய்ந்த ஒரு கோட்டை நமது ஸுப்ரீம் கோர்ட்' என்ற மக்களின் நம்பிக்கையை ஸுப்ரீம் கோர்ட் மெய்ப்பித்து விட்டது.

ராஷ்டிரபதியின் உத்தரவு செல்லத்தக்கதல்ல என ஸுப்ரீம் கோர்ட் எந்தக் காரணங்களைக் கொண்டு முடிவு செய்துள்ளதோ, அதே காரணங்களுக்காக, மானியத்தை நிறுத்துவதற்கு இசைவாக இனி சாஸனத்தைத் திருத்துவதும் சட்டவிரோதம் என்றே ஆகும். ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் இது உட்கிடக்கையாக உள்ளது.

ஒப்பந்தக் கடமையை மறுக்கும் உத்தரவில் கையொப்பமிட்ட ராஷ்டிரபதி, தம் கடமையை ஆற்றத் தவறிய கடுமையான பிழையைச் செய்தவராவார். அசாதாரணமான ஒரு நடவடிக்கை எடுக்குமாறு அவருக்குப் பிரதமரிடமிருந்தும், சட்ட அமைச்சகத்திலிருந்தும் யோசனை சொல்லப்படும்போது, அவர் உடனே இவ்விஷயத்தில் ஸுப்ரீம் கோர்ட்டின் கருத்தை அறிய அதிகாரம் பெற்றிருக்கிறார். அரசியல் சாஸனமே இந்த அதிகாரத்தை அவருக்குக் குறிப்பிட்டு வழங்குகிறது. பிரஸ்தாப சந்தர்ப்பத்தில் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது ராஷ்டிரபதியின் கடமையாகவே ஆயிற்று. நடுநிலை ஸ்தானம் வகிக்கும் ஒருவருக்கு அளிக்கப்படும் அதிகாரத்தை உரிய சந்தர்ப்பத்தில் அவர் பயன்படுத்தியே ஆகவேண்டும். ஆனால் அதைச் செய்ய ராஷ்டிரபதி தவறிவிட்டார்.

ராஜாஜியின் கருத்துக்கள்

நம்முடைய பிரச்னைகளில் மிகவும் ஜீவாதாரமான ஒன்றைப் பற்றி மீண்டும் எழுதுகிறேன். இந்தியாவும் பாகிஸ்தானும் நடத்தி வரும் ஆயுதப் போட்டிதான் இந்தப் பிரச்னை. இரு நாடுகளும் சுயமான நிதி வசதி இல்லாமலே, வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கியும், அந்நிய வல்லரசுகளுக்கு ஏராளமாகக் கடன்பட்டும் இவ்விதம் போட்டி நடத்துவது விந்தை!

இந்தியா – பாகிஸ்தானின் இந்தத் துர்ப்பாக்கியத்துக்கான தீர்வு காச்மீரத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மையைக் காணாமல் கண்ணை மூடிக் கொண்டிருப்பது நல்லதல்ல. காச்மீர விஷயத்தைத் தீர்த்துக் கொண்டபின்தான் இருநாடுகளின் நல்லுறவுக்கும் வழி காண முடியும் என்று பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால் இதை இந்தியா ஒப்புக்கொள்ள மறுக்கிறது. இப்படி மறுத்துக் கொண்டே இருந்தால், காலம் போகப் போகத் தானாகப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள் போலும்! ஆனால் காலம் போகப் போகக் கடன் சுமைதான் ஏறிக் கொண்டே வரும்; பிரச்னை தீர்ந்து விடாது.

ஒரு குறுகிய கால அளவுக்குக் காச்மீரத்தை வல்லரசுகளுடைய தர்மகர்த்தா ஆட்சியின் கீழ் வைக்க வேண்டும்; அப்போது காச்மீர மக்களின் அபிப்பிராயத்தை வாக்கெடுப்பின் மூலம் அறிந்து, அதன்படி அவர்களுக்கான ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் – இது என் யோசனை. இதனை முன்பே வெளியிட்டிருக்கிறேன். ஆனால் இந்திய சர்க்கார் இதனை ஏற்கவில்லை. இவ்விதம் காச்மீரத்தைத் தர்மகர்த்தா நிர்வாகத்தின் கீழ் ஒரு காப்பு நாடாக்கி, அம்மக்களின் கருத்துப்படி ஆட்சியை ஏற்படுத்துவதற்கும், அதன் முடிவை ஏற்பதற்கும் பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் தெளிவாகச் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

"காச்மீரம் இந்தியாவுக்கு மிகவும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. எனவே காச்மீரத்தை யார் ஆளுவர், எப்படி ஆளுவர் என்ற விஷயத்தில் சாதக – பாதகங்களை ஏற்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு நாம் உடன்படுவதற்கில்லை" என்று கூறி, என் யோசனையை ஏற்க மறுக்கிறது இந்திய சர்க்கார். ராணுவ முக்கியத்துவம் பற்றிய வாதம் வெறும் பிரமை. பிரதேசம் நம்முடையதாக இருந்தால் மட்டும் போதாது; அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களும் நம் சார்பாக இருக்க வேண்டும் என்ற கசப்பான உண்மையைப் புறக்கணித்துவிட்டு, பிரதேசத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகிறார்கள்.

எனக்குச் சுய பிரதாபம் அடித்துக்கொள்ளும் வியாதி இல்லை. இருந்தாலும் விஷயங்களின் உள்ளே புகுந்து பார்க்கும் பார்வை எனக்குச் சிறிதே இருப்பதாக எண்ணுகிறேன். அந்த முறையில் காச்மீரம் விஷயமாக நான் சொன்ன யோசனை ஒன்றே இந்த மகத்தான, துர்ப்பாக்கியவசமான சிக்கலிலிருந்து மீள வழி என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை.

அமெரிக்காவும் ருஷியாவும் தங்கள் கருத்தை விளக்காவிடினும், என் யோசனைக்கு

அவ்விரு நாடுகளும் மகிழ்ச்சியுடன் பூரணமாக ஆதரவு தரும் என்பது தெளிவு.

என் யோசனையைத் தள்ளி விட்டால், முன்னேற்றமும், சுபிட்சமும் காண்கிற வாய்ப்பு நலிவுற்றே தீரும். நம் தேசியப் பிரச்னைகளில் மிக முக்கியமான இவ்விஷயத்தைத் தீர்வு காணமல் வெறுமே தள்ளிப் போட்டுக் கொண்டே இருப்பதற்கில்லை. இதே நிலை நீடித்தால் நாம் பிறரிடம் கடன் வாங்கிக் கொண்டேதான் இருக்க வேண்டும்; கடுமையான வரிகளைச் செலுத்தும் ஏழை நாடாக, தொழில் அபிவிருத்தி காணமலேதான் இருக்க வேண்டும். மாறாக இந்தச் சிக்கலிலிருந்து விடுபட்டு விட்டாலோ, முன்னேற்றமும், சுபிட்சமும், மகிழ்ச்சியும் காண்பதற்குரிய ஏராளமான பொருள் வசதி நம்மிடம் இருக்கும்.

★

ஸ்ரீ குண்டப்பா அவர்கள் தமது "Public Affairs" சஞ்சிகையில் கூறியிருப்பதை முதல் முறை படித்தவுடன் 'பிற்போக்குவாத'மாகத் தோன்றக்கூடும். இருப்பினும் அது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஸ்ரீ குண்டப்பா எழுதுவதாவது :

> இந்தியாவில் சர்க்கார்களை நடத்துவோருக்கு மதத்தைப் பற்றியும், மதத்திலுள்ள அறிவுக்கெட்டாத மர்மங்கள் பற்றியும் ஏதுமே தெரியாது என்பது தெள்ளத் தெளிவான உண்மை. தங்களுக்கு மத விஷயங்கள் பற்றி எதுவும் தெரியாது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லையோ என்ற ஐயம் எழுகிறது. சமயம் என்பது பௌதிக விஞ்ஞானமோ, இயந்திர இயலோ அல்ல. மனிதனும் அதை அளவிடவோ, இயக்கி வைக்கவோ முடியாது. எனவே, அறிவுடைமைக்கு அடையாளம், அரசாங்கம் இந்த அம்சத்தில் தலையிடாமல் இருப்பதுதான். நீண்ட காலமாகக் கோயில்களும், மசூதிகளும், சர்ச்சுகளும் தமது விஷயத்தில் பெற்றுள்ள சுயநிருவாக உரிமையை அவை தொடர்ந்து அநுபவிக்க அரசாங்கம் அநுமதிக்கவேண்டும். பொதுச் சுகாதாரத்துக்கும், பொதுப் பாதுகாப்புக்கும் தனியார் ஊறு விளைவிக்கும்போது மட்டுமே தனியார் சுதந்திரத்தில் சர்க்கார் தலையிட உரிமை பெற்றுள்ளது. இந்தச் சுதந்திரமும், உரிமையும் சமய நிறுவனங்களுக்கும் இருக்க வேண்டும். நீண்ட காலமாக நிலைப்பட்ட மத நிறுவனங்கள், சம்பிரதாயபூர்வமாக வந்துள்ள சமுதாயத்தின் சமயப் பிரிவுகள் ஆகியவைவற்றில் தலையிடுவதைத் தமிழ் நாட்டு அரசாங்கம் சங்கற்பம் செய்து கொண்டு விஷ வித்துக்களை ஊன்றி வருகிறது.

எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி மக்கள் அனைவரும் வழிபடுவதற்காக ஆலயங்களைத் திறந்து விடுவது வேறு விஷயம்; ஆலயங்களில் புரிய வேண்டிய பணிகளில் சமூக உட்பிரிவுகளைக் குறித்த சம்பிரதாயத் தொழில்முறை வேறு விஷயம்.

★

ராஜமானிய நிறுத்த உத்தரவுத் தீர்ப்பில் மாறுபட்ட கருத்துத் தெரிவித்த இரு நீதிபதிகளில் ஒருவர் ஜஸ்டிஸ் மித்தர். ஸுப்ரீம் கோர்ட் இவ்விஷயத்தில் பிரவேசிக்க அதிகாரம் பெற்றுள்ளதா என்பது குறித்து சித்தாந்த ரீதியில் அவர் மாறுபாடு கொண்டுள்ளார்; ஆனால் அவரும் ராஷ்டிரபதியின் செயல், நீதிக்கு ஒவ்வாதது என்ற கருத்தையே தெளிவாகத் தெரிவித்துள்ளார். சர்க்கார் விரும்பியபடி உத்தரவில் கையெழுத்திடுமுன் ராஷ்டிரபதி, ஸுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனையைக் கோருவதற்கு மிகவும் அத்தியாவசியம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட சமயத்தில் அவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தாதது கடமையில் தவறியதாகும் என்று அவர் கூறியிருப்பது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது.


ஸுப்ரீம் கோர்ட்டின் முடிவு — குறிப்பாக நீதிபதி மித்தரின் கருத்து — ராஷ்டிரபதி மீது கண்டனம் தெரிவிப்பதற்கு ஒப்பேயாகும். இதில் சிறிதும் ஐயமில்லை. இந்தக் கண்டனத்தின் தொடர்ச்சியாக நடக்க வேண்டியது என்ன என்பது ராஷ்டிரபதி பவனத்தில் நிலவும் உணர்ச்சி நுட்பத்தைப் பொறுத்த விஷயம். பிரதமர் விரும்பியதால்தான் உத்தரவில் ராஷ்டிரபதி கையெழுத்திட்டார் என்பது வாஸ்தவம். எனினும் சட்டரீதியிலும், தார்மிக ரீதியிலும் இது குறித்த பொறுப்பு ராஷ்டிரபதியுடையதே. ■



புதிய ஷெரீப்

புகழ்கொண்ட டி. வி. எஸ். ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களின் குமாரர் ஸ்ரீ ஆர். ரத்தினம் அவர்கள் தொழிலறிவாற்றலைப் பிதுரார்ஜிதமாகப் பெற்றிருப்பவர். ஐகாஸ் டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் இணை டைரக்டரான ஸ்ரீ ரத்தினம் பல கம்பெனிகளுடன் பொறுப்புள்ள ரீதியில் தொடர்பு கொண்டவர். தொழிற் கல்வியில் விசேஷத் தேர்ச்சியும், நிருவாகத்தில் சிறப்புத் திறனும் படைத்தவர். ரோடரி, நிலச்சிறுவை போன்ற பொது நிறுவனங்களில் ஈடுபாடு கொண்டவர். ஸிம்ஸன் ஸ்ரீ சிவசைலம் அவர்களை அடுத்து சென்னை நகர ஷெரீப்பாக ஸ்ரீ ரத்தினம் நியமனம் பெற்றிருப்பதை மனமார வரவேற்கிறோம். அவருக்கு நம் நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.





சேலம் மகாநாடு

★





டிசம்பர் 12, 13 தேதிகளில், சேலத்தில் தமிழக சுதந்திரக் கட்சியின் மாநில மகாநாடு தமிழக சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு ஜி. கே. சுந்தரம் எம். பி. அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுதந்திரக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் திரு எம்..ஆர். மசானி மகாநாட்டைத் தொடங்கி வைத்தார். நாடு இன்றுள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு வழிகாட்டும் வகையில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த முக்கியமான மகாநாட்டின் சில படங்களை இங்கே காணலாம். (1) முகப்புத் தோற்றம். (2) திரு மசானி உரையாற்றுகிறார். (3) தலைவர் திரு ஜி. கே. சுந்தரம் பேசுகிறார். (4) மகாநாட்டின் வெற்றிக்குக் காரண புருஷரான செயலாளர் ஸ்ரீ டி. டி. சீனிவாசன் பி.ஏ.,பி.எல். (5) பிரதிநிதிகள் கூட்டம்.

★★★





மகாத்மா காந்தி

ரகுபதி ராகவ

தமிழாக்கம்: ராஜாஜி

56

கீதையின் உபதேசத்தில் அஹிம்ஸையும் ஒரு பாகமாக இருப்பின் ஏன் யுத்தத்தை வைத்து உபதேசம் எழுதப்பட்டிருக்கிறது என்கிற கேள்வி கேட்கலாம். அந்தக் காலத்தில் அஹிம்ஸா தர்மம் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் யுத்தம் தர்மத்தினின்று விலக்கப்படவில்லை. க்ஷத்திரிய கடமைகளுக்கும் அஹிம்ஸைக்கும் விரோதம் அந்தக் காலத்தில் பெரியோர்கள் காணவில்லை. கீதையின் நோக்கம் அஹிம்ஸா முறையை ஊர்ஜிதப் படுத்துவதற்கல்ல என்பதை ஒப்புக் கொள்கிறேன். பயனைத் துறத்தல் என்கிற மார்க்கத்தைக் காட்டுவதற்காகவே கீதை தோன்றியது. இரண்டாவது அத்தியாயத்திலேயே இது மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. ஓர் உண்மையை உபதேசிக்கும் போது அதனுடைய எல்லா முடிவுகளையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்பது அவசியமில்லை. 'பயனைத் துறந்து கடமைகளைச் செய்' என்பது கீதையின் உபதேசம். இந்த உபதேசம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் எங்கெங்கே கொண்டு போய் விடும் என்பதைப் பற்றியெல்லாம் கீதையில் விவரிக்கவில்லை. முனிவர்களுடைய பெருமை என்னவென்றால் அவர்களுடைய உபதேசம் சுருக்கமாக இருக்கும். அது காலத்துக்கு ஏற்றபடி பலவித நற்பயன்களைத் தரும். அந்தக் காலத்தில் எதிர்பாராத பொருளும்கூடப் பிற்காலத்தில் அதனின்று தோன்றும்.

யாகங்கள் கீதைக்கு முந்திய காலத்தில் செய்யப்பட்டு வந்தன. வேள்விகளில் பிராணிகளை வதை செய்தும் வந்தார்கள். ஆனபோதிலும் யாகமென்று கீதையில் பல இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் பிராணஹிம்ஸை கலந்த யாகம் அதில் காணப்படவேயில்லை. கீதையில் கூறப்பட்டிருக்கும் வேள்விகளுக்குள் ஜபயக்ஞம் என்பதே சிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவனை ஏகாக்கிர சித்தத்துடன் தியானிப்பதே சிறந்த வேள்வி என்பதைக் காண்கிறோம். மூன்றாவது அத்தியாயத்தில் தேக சிரமத்தைச் செலுத்திப் பணி செய்வதும் ஒரு வேள்வியாகச் சொல்லப்படுகிறது. மூன்றாவது நான்காவது அத்தியாயங்களைச் சேர்த்துப் படித்தால் வேள்வி என்பதற்குப் பலவேறு பொருள்கள் காண்கிறோம். கீதையில் பல வேள்விகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் பிராணிகளைக் கொல்லும் வேள்விகள் அவற்றில் காணப்படவில்லை. யக்ஞம் என்கிற பழைய சொல்லுக்குப் புதுப் பொருள்கள் கீதையில் தோன்றிவிட்டன.

இப்படியே சந்நியாசம் என்கிற சொல்லும் கீதையில் பொருள் மாறிவிட்டிருக்கிறது. எவ்விதக் காரியமும் செய்யாமல் இருக்கும் நிலை கீதையில் சொல்லப்பட்ட சந்நியாசம் ஆகாது. கீதையில் சொல்லப்பட்ட சந்நியாசத்தில் எல்லா வேலையும் செய்ய வேண்டியதே. செய்த போதிலும் செய்யும் முறையில் செய்தால் அது செய்யாமை அதாவது சந்நியாசமேயாகும். பயனைக் கருதாது செய்யப்பட்ட கர்மம் அகர்மமாகும். ஆசையை மனத்தில் வைத்துக் கொண்டு வெளிப்படையாக ஆசையைப் பூர்த்தி செய்யாமல் இருந்தாலும் அது கர்மமாகும்.

கீதையில் யுத்தத்தை விலக்கவில்லை என்பது உண்மையாயினும், நாற்பது ஆண்டுகள் கீதா உபதேசத்தின்படி வாழ்க்கையை நடத்த முயற்சி செய்து வந்ததில் நான் கண்ட உண்மை என்னவென்றால் — இதை மிக அடக்கத்துடன் சொல்லுகிறேன் — பற்றுக்களை அறவே நீக்க வேண்டுமானால் அஹிம்ஸை இல்லாமல் முடியாது. கீதை உபதேசத்தை முற்றிலும் நிறைவேற்றினால் யுத்தத்தை விலக்க வேண்டியதாகிறது.

பகவத் கீதையானது சுருக்கமான சூத்திரங்கள் கொண்ட நூல் அல்ல. அதில் மூழ்க மூழ்க ஆழ்ந்த பல கருத்துக்களைக் காணலாம். சாதாரண மக்களுக்கென்று தோன்றிய நூலானபடியினால் கூறியதையே திரும்பத் திரும்ப இனிய முறையில் கூறுகிறது. படிக்கும் போது அது குற்றமாகத் தோன்றாது. நாள் செல்லச் செல்லக் கால பேதத்தினால் சொற்களின் பொருள் விரிவடையும். ஆயினும் அதனுடைய நடுநாயக உபதேசம் மாறுபடாது. பக்தர்கள், கீதையினின்று வெவ்வேறு ரத்தினம் போன்ற பொருள்களை அடைவார்கள். பக்தர்களுடைய கருத்துக்களும் கொள்கைகளும் வெவ்வேறுவிதமாக இருக்கலாம். ஆயினும் முக்கிய உபதேசத்தை ஒன்றாகவே கண்டு ஒப்புக் கொள்வார்கள்.

செய்ய வேண்டியதும் விலக்கப்பட வேண்டியதுமான ஒரு பட்டியல் கீதையில் கொடுக்கப்படவில்லை. ஒருவனுக்கு ஒன்றைச் செய்ய வேண்டியது தர்மமாகும். மற்றொருவனுக்கு அது அதர்மமேயாகும். ஒரு காலத்தில் ஒன்றைச் செய்வதில் தவறில்லை. அதே செயல் மற்றொரு காலத்திலும் இடத்திலும் செய்யப்பட்டால் தவறாகும். எது தர்மம் எது அதர்மம் என்று முடிவு கட்டுவதற்கு உரைகல் ஒன்றே. லாபத்தை விரும்பாமல் செய்யப்பட்ட செயலா என்பதே அது. அதுதான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்டுப்படுத்தும் நிபந்தனை.

ஞானத்தைப் பற்றி மிக மேன்மைப் படுத்தியே கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கீதையில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஞானம் மூளையை மட்டும் சார்ந்ததல்ல. இதயத்தைச் சார்ந்தது. அறிவு மட்டும் ஞானமாகாது. ஆனபடியால் பக்தி இல்லாதவர்களுக்குக் கீதை பயன்படாது. இதனால்தான் கண்ணன் முடிவில் சொல்கிறான் :

''இந்த உபதேசத்தை வேள்வியற்றவனுக்குச் சொல்லாதே. சிரத்தையில்லாதவனுக்குச் சொல்லாதே. உபதேசத்தை விரும்பாதவனுக்குச் சொல்லாதே. என்னை மறுப்பவனுக்குச் சொல்லாதே. இந்த உபதேசத்தைப் பக்தர்களுக்கு எடுத்துச் சொல்கிறவன் பெரும் புண்ணியம் செய்தவனாவான். அவன் என்னையே அடைவான். அசூயையில்லாமல் இந்த உபதேசத்தைப் பக்தியோடு ஒப்புக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறவர்கள் வீடு பெறுவார்கள்.''

(யங் இந்தியா 6-8-31)


சக்திக்கும், வளர்ச்சிக்கும்
பிரிட்டானியா
ஹார்லிக்ஸ்
பிஸ்கட்டுகளை
அவர்களுக்கு
தாருங்கள்
BRITANNIA
Horlicks
BRITANNIA
குழந்தைகளின் அதிக சக்திக்கு, பிரிட்டானியா ஹார்லிக்ஸ் பிஸ்கெட்டுகளையே அனுபவமுள்ள தாய்மார்கள் கொடுக்கின்றனர். நல்ல சுவையும், ஊட்டமும் உள்ள அவை பள்ளிக்கு எடுத்துச்செல்லவும், வீட்டிலே உண்ணவும் பொருத்தமான சிற்றுண்டியாகும்.
பிரிட்டானியா என்றாலே உயர் தரம்
BBC-1368



நாற்பத்தாறும் அத்தியாயம்

படகு நகர்ந்தது!

வந்தியத்தேவன் ஒரு பக்கத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தான்.

மற்றொரு புறத்தில் மணிமேகலை, "அக்கா! உணவு சித்தமாயிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தாள்.

கரிகாலர் இருபுறமும் பார்த்துவிட்டு, "நந்தினி! என்னைக் கடம்பூர் மாளிகைக்கு வரவேண்டாம் என்று தடுக்க வந்தியத் தேவன் மட்டும் முயலவில்லை. ஆழ்வார்க்கடியான் என்னும் வைஷ்ணவனும் அதேமாதிரி செய்தியைக் கொண்டு வந்தானே ?என் ; தந்தையின் உயிர் நண்பரும் என் பக்திக்கு உரியவருமான முதன் மந்திரி அநிருத்தரும் சொல்லி அனுப்பினாரே?" என்றார்.

"முதன்மந்திரி அநிருத்தர்! தங்கள் தந்தையின் பிராண சிநேகிதர்! ஆகையினால் தங்கள் தந்தையின் பிராணனைத் தாமே அபகரிக்கப் பார்க்கிறார். தங்களுடைய பக்திக்கு உரியவர்! ஆகையால் தங்களுக்கு அடுத்த பட்டம் இல்லாமல் செய்யப் பார்க்கிறார்....."

"ஏன்? ஏன்?"

"தாங்கள் வெறி பிடித்தவர் என்றும், தெய்வ பக்தி இல்லாதவர் என்றும் அவ



ருக்கு எண்ணம். தங்கள் தம்பிக்குப் பட்டம் கட்டி வைத்து அவனை வீர வைஷ்ணவனாக்கி இந்தச் சோழ நாட்டையே வைஷ்ணவ நாடாக்கிவிட வேண்டுமென்பது அவருடைய விருப்பம். தங்களுடைய தம்பி நடுக்கடலில் காணாமற் போனபோது அவருடைய எண்ணத்திலே மண் விழுந்தது !''

''அதற்காக என்னைக் கடம்பூர் வராமல் தடுக்க வேண்டிய அவசியம் என்ன ?''

'' அவர்களுடைய அந்தரங்கத்தையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடலாம் அல்லவா ?''



''உனக்கு எப்படி அவர்களின் அந்தரங்கம் தெரியும்?''

''ஐயா! அந்த வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியான் சகோதரி நான் என்பதை மறந்து விட்டீர்கள்....''

''உண்மையாக நீ அவனுக்கு உடன் பிறந்த சகோதரியா? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறாயா?''

''நானும் அந்தக் கதையை நம்பவில்லை. தங்களை நம்புமாறு சொல்லவும் இல்லை. அவனுடைய தந்தையின் வீட்டில் நான் வளர்ந்து வந்தேன். ஆகையால் என்னைச் சகோதரி என்று அழைத்து வந்தான். என்னை ஆண்டாளின் அவதாரம் என்று அந்த வைஷ்ணவன் சொல்வது வழக்கம். ஊர் ஊராக அவனுடன் நான் சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பரப்ப வேண்டும் என்பது அவனுடைய ஆசை.''

'' புத்த சந்நியாசினிகளைப் போல் உன்னையும் வைஷ்ணவ சந்நியாசினியாக்க விரும்பினானா?'' என்று ஆதித்த கரிகாலர் கேட்டார்.

'' அப்படி ஒன்றுமில்லை. நான் அவனைக்

கலியாணம் செய்து கொண்டு தம்பதிகளாகப் பாசுரம் பாடிக்கொண்டு ஊர் ஊராகப் போக வேண்டும் என்பது அவன் ஆசை. வைஷ்ணவத்தைப் பிரசாரம் செய்ய நான் பல குழந்தைகளைப் பெற்று அளிக்கவேண்டும் என்பதும் அவன் விருப்பம்.''

''சீச்சீ! அந்தக் குரங்கு மூஞ்சித் திருமலை எங்கே? நீ எங்கே? உன்னை அவன் தனக்கு மனைவியாக்கிக்கொள்ள விரும்பினானா?....''

''ஐயா! என் துரதிர்ஷ்டம் அது! நான் பிறந்த வேளை அப்படி! என்னை நெருங்கி வரும் ஆண்பிள்ளைகள் எல்லாரும் துர் எண்ணத்துடனேயே என்னை நெருங்குகிறார்கள்....''

''கிழவன் பழுவேட்டரையனுடைய புத்தி போனபாட்டில் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?''

''கோமகனே! பழுவேட்டரையரைப் பற்றி என் காதில்படத் தூஷணையாக எதுவும் சொல்ல வேண்டாம். அவர் என்னிடம் ஆசை கொண்டார். என்னை உலகமறிய மணந்து கொண்டார். அநாதைப் பெண்ணாயிருந்த என்னை அவருடைய திருமாளிகையில் பட்டத்து ராணியாக்கிப் பெருமைப்படுத்தினார்.''

''ஆனால் உன்னுடைய விருப்பம் என்ன, நந்தினி? நீ அவரை உண்மையிலேயே உன் பதியாகக் கொண்டு பூஜிக்கிறாயா? அப்படியானால்....''

''இல்லை, இல்லை. அவரிடம் நான் அளவில்லா நன்றியுடையவள். ஆனால் அவருடன் நான் மனை வாழ்க்கை நடத்தவில்லை. அவரும் என்னை வற்புறுத்தவில்லை. ஐயா! நான் ஏழைக் குடியில் பிறந்தவள்; பிறந்தவுடனே கைவிடப்பட்டவள். ஆயினும் என்னுடைய நெஞ்சை ஒரே ஒருவருக்குத்தான் அர்ப்பணம் செய்தேன். அதை ஒரு நாளும் மாற்றிக் கொண்டதில்லை....''

''நந்தினி! அந்தப் பாக்கியசாலி யார்? வேண்டாம்; அதைச் சொல்ல வேண்டாம். நீ யார்? உண்மையைச் சொல்! நீ என் தந்தையின் மகள் இல்லாவிடில், என் சகோதரி இல்லாவிடில், ஆழ்வார்க்கடியானுடன் கூடப் பிறந்தவளும் இல்லை என்றால், பிறகு நீ யார்? அதை மட்டும் சொல்லிவிடு, நந்தினி! அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்குப் பைத்தியம் உண்மையிலேயே பிடித்துவிடும்!'' என்றார் கரிகாலர்.

''அதைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன். ஆனால் தங்களுடைய தோழரும் என்னுடைய தோழியும் இதோ நெருங்கி வந்துவிட்டார்கள். மறுபடியும் சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவசியம் சொல்லுகிறேன்'' என்றாள் நந்தினி.

* * *

மிகச் சமீபத்தில் வந்துவிட்ட வல்லவரையனைப் பார்த்துப் பழுவூர் ராணி, ''ஐயா! இது என்ன வெறுங் கையுடனே திரும்பி வந்திருக்கிறீர்கள்? புலியின் தலை எங்கே?'' என்று கேட்டாள்.

''தேவி! புலியின் தலையைக் கொண்டு வந்து தங்கள் காலடியில் சமர்ப்பிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

''ஆகா! இவ்வளவுதானா உமது வீரம்? உமது முன்னோர்களின் வீரத்தைப் பற்றிப் பாட்டுகள் எல்லாம் சொன்னீரே? மூன்று குலத்து வேந்தர்களின் தலைகளைப் பறித்துக் கழனியில் நடவு நட்டார்கள் என்று சொன்னீரே!''

''அது என்ன அப்படிப்பட்ட பாடல்?'' என்று கரிகாலர் கேட்டார்.

''ஐயா! நீர் சொல்லுகிறீரா? நான் சொல்லட்டுமா?'' என்று நந்தினி வந்தியத்தேவனைப் பார்த்து வினவினாள்.

''ராணி! அப்படி ஒரு பாடல் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லையே?'' என்றான் வந்தியத்தேவன்.

''உமக்கு ஞாபகம் இல்லை. ஆனால் எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. நான்சொல்லுகிறேன் கேளுங்கள் ஐயா!

சேனை தலையாகச் செங்குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில் - மான பரன்
பாவேந்தர் தம்வேந்தன் வாணன்
பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி!

எப்படியிருக்கிறது பாட்டு! கோமகனே! தாங்கள் பாண்டியன் ஒருவனுடைய தலையை மட்டுமே கொண்டீர்கள். இந்த வீரருடைய முன்னோர்கள், சேர சோழ பாண்டியர்களுடைய தலைகளைப் பறித்துக் கொண்டு வந்து கழனியில் நடவு நட்டார்களாம்....!''

கரிகாலருடைய முகத்தில் அருவருப்பும் குரோதமும் தாண்டவம் ஆடின.

''நல்ல உழவு! நல்ல நடவு!'' என்று சொல்லிவிட்டு அவர் இடி இடி என்று வாய் விட்டுச் சிரித்தார்.

வந்தியத்தேவன் கரிகாலருடைய முகத்தையே ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. அவன் தட்டுத் தடுமாறி, ''தேவி! இத்தகைய பாடல் ஒன்றைத் தங்களிடம் நான் சொல்லவே யில்லையே?'' என்றான்.

''அதனால் என்ன? ஏற்கனவே தெரிந்து கொண்டிரா விட்டால் உமது

குலத்தின் பெருமையை இப்போதாவது தெரிந்து கொள்ளும்! அவ்வாறு மூக் குலத்து வேந்தர்களின் முடிகளைப் பறித்து நட்ட வம்சத்தில் பிறந்தவர் கேவலம் காயம்பட்ட புலி ஒன்றின் தலையைக் கொண்டு வர முடியவில்லையே?'' என்றாள்.

''தேவி! காயம் பட்ட அந்தப் புலி செத்துத் தொலைந்து போய்விட்டது. செத்த புலியின் தலையை வெட்ட நான் விரும்பவில்லை.''

''அது எப்படி? புலி தத்தித் தத்திப் படகில் ஏறியதை நான் பார்த்தேனே?'' என்றார் கரிகாலர்.

''நான்தான் அந்தக் காட்சியைத் தங்களுக்குக் காட்டினேன். படகில் ஏறிப் படுத்துக் கொண்ட பிறகு அது செத்துப் போயிருக்கிறது. பழுவூர் இளையராணியின் திருமேனியைக் காயப் படுத்தி விட்டோமே என்ற பச்சாத் தாபத்தினால் அது பிராணனை விட்டு விட்டதோ, என்னவோ?'' என்றான் வந்தியத்தேவன்.

கரிகாலரின் முகத்தில் கடுகடுப்புச் சிறிது தணிந்து புன்னகை அரும்பியது.

''ஆனால் அது தண்ணீரிலேயே செத்துப் போயிருக்கலாமே? படகில் ஏறிச் 'சாக வேண்டியதில்லையே?'' என்றார் கரிகாலர்.

''என்னைப் போல் அதற்கும் தண்ணீரைக் கண்டால் பிடிப்பதில்லை போலிருக்கிறது. எல்லாச் சாவுகளிலும் தண்ணீரிலே சாவதுதான் எனக்குப் பயமளிக்கிறது!'' என்றான் வந்தியத்தேவன்.


''ஆயினும் சற்று முன்னால் தைரியமாகத் தண்ணீரில் குதித்துவிட்டீரே? இந்தப் பேதைப் பெண்களின் பேரில் அவ்வளவு கருணை போலிருக்கிறது!''

''தேவி! தண்ணீரைக் காட்டிலும் எனக்குப் பெண்களைக் கண்டால் அதிக பயம் உண்டாகிறது. இளவரசருடைய வற்புறுத்தலுக்காகத்தான் குதித்தேன். உண்மையில் அப்படிக் குதித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று இப்போது தெரிகிறது!'' என்றான் வல்லவரையன்.

''ஆம், ஆம்! நீர் தண்ணீரில் விழுந்து சாவது பற்றித்தான் உமக்குப் பயம். பிறரை மூழ்க அடித்துச் சாகச் செய்வது பற்றி உமக்குப் பயமே இல்லை!'' என்றாள் நந்தினி.

இந்தப் பேச்சுக்கள் ஒன்றும் மணிமேகலைக்குப் பிடிக்கவில்லை என்பது அவளுடைய முக பாவத்திலிருந்து நன்கு வெளியாயிற்று.

''அக்கா! சமைத்த உணவு ஆறிப் போய்விடும். வாருங்கள், போகலாம்!'' என்றாள்.



மேலே உள்ள இரு பெண்களுக்கும் பரத நாட்டியத்துக்கென அலங்காரம் பண்ணிப் பார்த்தால் எப்படி இருக்கும்?

(25ம் பக்கம் பார்க்க)

நால்வரும் பளிங்கு மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். அப்போது இடையிடையே மணிமேகலை வந்தியத்தேவனை நோக்கினாள். அவனுடைய மனத்தில் ஏதோ சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இளவரசரும் நந்தினியும் அவருக்கு ஏதோ தொல்லை கொடுக்கிறார்கள் என்றும் அவள் தன் உள்ளுணர்ச்சியால் அறிந்தாள். ''யார் தங்களுக்கு எதிரியானாலும் நான் தங்களுடைய கட்சியில் இருப்பேன்; கவலைப் பட வேண்டாம்!'' என்று நயனபாஷையின் மூலம் வந்தியத்தேவனுக்கு ஆறுதல் கூற முயன்றாள். ஆனால் வந்தியத்தேவனோ அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவன் கவலைக் கடலில் அடியோடு மூழ்கிப் போனவனாகக் காணப்பட்டான்.

* * *

நந்தினிதேவியின் வஞ்சக வார்த்தைகளும் வந்தியத்தேவன் மீது அவள் சுமத்திய பயங்கரமான பழியும் இந்தக் கதையைத் தொடர்ந்து படித்து வரும் நேயர்களுக்கு அருவருப்பை அளித்திருக்கக்கூடியது இயல்பேயாகும்.

எனினும், நாம் அறிந்துள்ள வரையில் அவளுடைய பிறப்பையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நினைவுகூர்ந்தால் அவ்வளவாக வியப்பு அடைய மாட்டோம்.

மனிதர்களின் குணாதிசயங்கள் பரம்பரை காரணமாக இரத்தத்தில் ஊறியுள்ள இயல்புகளினால் அமைகின்றன; சூழ்நிலையினாலும் பழக்க வழக்கங்களினாலும் வாழ்க்கை அநுபவங்களினாலும் மாறுதல் அடைகின்றன.

ஊமையும் செவிடுமானி! மந்தாகினி காட்டிலே பெரும்பாலும் வாழ்ந்திருந்தவள். வன விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள அவள் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருந்தது. தான் உயிர் தப்புவதற்காகச் சில சமயம் அந்த மிருகங்களைக் கொடூரமாகக் கொல்லவேண்டியும் நேர்ந்தது.

வெகு காலம் வரையில் பால் போல் தூய்மையாக இருந்த அவள் உள்ளத்தில் ஒரு சமயம் அன்பு என்னும் அமுத ஊற்றுச் சுரந்தது. விரைவில், அந்த ஊற்று வறண்டு அவளுடைய நெஞ்சத்தை வறண்ட பாலைவனம் ஆக்கியது. விதியின் விளையாட்டு அவளை ஒரு பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி விட்டது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி! அவளுடைய புத்தியே பேதலித்துப் போகும்படி செய்து விட்டது. எனினும், நாளடைவில் அவளுடைய நெஞ்சின் காயம் ஆறியது. அன்பாகிய அமுத ஊற்று மீண்டும் சுரந்தது. சுந்தர சோழரின் மீது கொண்ட காதலையெல்லாம் அவருடைய அருமைப் புதல்வனாகிய அருள்மொழிச் செல்வனிடம் பிள்ளைப் பிரேமையாக மாற்றிக் கொண்டாள்.

மந்தாகினியின் புதல்வியாகிய நந்தினியிடம் தாயின் குணாதிசயங்கள் பல இயற்கையில் தோன்றியிருந்தன. ஆனால் தாயை உலகம் வஞ்சித்ததைக் காட்டிலும் மகளை அதிகமாக வஞ்சித்தது. பெற்ற தாயினாலும் கைவிடப்பட்டாள். பிறர் வீட்டில் வளர்ந்தாள். காட்டு மிருகங்களினால் அன்னைக்கு ஏற்பட்ட தொல்லைகளைக் காட்டிலும் நாட்டு மனிதர்களால் மகள் அதிக கொடுமைகளுக்கு உள்ளானாள். இளம் பிராயத்தில் அரச குலத்தினரால் அவமதிக்கப்பட்டதெல்லாம் அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்து நிலைத்து விஷத்திலும் கொடிய துவேஷமாக மாறியது. துவேஷத்துக்கு மாற்று அளிக்கக்கூடிய அன்பு என்னும் அமுதம் அவளுக்குக் கிட்டவில்லை. அவள் யார் யாரிடம் அன்பு வைத்தாளோ அவர்கள் ஒன்று அவளை அலட்சியம் செய்து புறக்கணித்தார்கள்; அல்லது துரதிர்ஷ்டத்துக்கு உள்ளாகி மாண்டு போனார்கள். அவளை அவமதித்தவர்களும் அவளால் வெறுக்கப்பட்டவர்களும் மேன்மையுடன் வாழ்ந்தார்கள். ஒரு பெண்ணின் உள்ளத்தை நஞ்சினும் கொடியதாக்குவதற்கு வேறு என்ன காரணங்கள் வேண்டும்? தன்னை வஞ்சித்தவர்களையும் அவமதித்தவர்களையும் பழி வாங்குவதைத் தவிர அவளுடைய உள்ளத்தில் வேறு எதற்கும் இடம் இருக்கவில்லை. அதற்கு வேண்டிய சூழ்ச்சித் திறன்கள் அன்னையின் கர்ப்பத்தில் இருந்த நாளிலேயே அவளுடைய இரத்தத்தில் சேர்ந்திருந்தன. வாழ்க்கையில் அவள் பட்ட அல்லல்களும் ஏமாற்றங்களும் பயங்கர அநுபவங்களும் அவளுடைய உள்ளத்திலிருந்து இரக்கம், அன்பு முதலிய மிருதுவான பண்புகளை அடியோடு துடைத்து இரும்பினும் கடினமாக்கி யிருந்தன.

இக்கதையில் இனி வரப் போகும் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்தக் குணாதிசய விளக்கத்தை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதி எழுதினோம்.


* * *

உணவருந்தும் வேளையிலும் அவர்களுக்குள் உற்சாகமான பேச்சு எதுவும் நடைபெறவில்லை. நந்தினியும், கரிகாலரும், வந்தியத்தேவனும் அவரவர்களுடைய கவலையிலே ஆழ்ந்திருந்தார்கள். இதனால் மணிமேகலைக்குத்தான் மிக்க ஆதங்கமாயிருந்தது. பழுவூர் ராணியுடன் உல்லாசமாகப் பேசி உற்சாகமாகப் பொழுதுபோக்கும் எண்ணத்துடன் அவள் அன்று நீர் விளையாடலுக்கும் வன போஜனத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தாள். இளவரசரும் வந்தியத்தேவனும் எதிர்பாராமல் வந்து சேர்ந்து கொண்டவுடன் அவளுடைய உற்சாகம் அதிகமாயிற்று. ஆனால் அதற்குப் பிறகு மற்ற மூவரும் பேசிய வார்த்தைகளும் நடந்து கொண்ட விதமும் அவளுக்குச் சிறிதும் திருப்தி அளிக்கவில்லை. நந்தினியையும் வந்தியத்தேவனையும் சேர்த்துப் பார்த்தபோது ஏற்பட்ட வேதனையை அவளுடைய குழந்தை உள்ளம் உடனே மறந்துவிட்டது. அதைப் பற்றித் தவறாக எண்ணி அசூயைக்கு இடங் கொடுத்தது தன்னுடைய தவறு என்று எண்ணித் தேறினாள். அதற்குப் பிறகு மற்ற மூன்று பேரும் கலகலப்பில்லாமல் சிடுசிடுவென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்ததும் கபடமாகப் பேசி வந்ததும் அவளுக்கு விளங்கவும் இல்லை; பிடிக்கவும் இல்லை.

எனவே, உணவருந்திச் சிறிது நேரம் ஆனதும் மணிமேகலை, "அக்கா! நாம் திரும்பிப் பிரயாணப்படலாமா? படகைக் கொண்டு வரச் சொல்லட்டுமா? இவர்கள் இருவரும் நம்முடன் வருகிறார்களா? அல்லது குதிரை மீது வந்த வழியே போகிறார்களா?" என்று கேட்டாள்.

அப்போதுதான் கரிகாலர் சிந்தனை உலகத்திலிருந்து வெளி உலகத்துக்கு வந்தார். "ஆ! ஆ! இந்தப் பெண்ணின் யாழிசையைக் கேட்காமல் திரும்புவதா?

கீதைக் கதைகள்



"....ஆனால், பக்தி என்ற தீயும் சேரும் பொழுது தான் விளக்கினால் ஒளி பரப்ப முடியும்...."

21. மறை

அறையின் இருளைப் பிளந்து பேச்சுக் குரல் கேட்டது.

அவிந்து கிடந்த விளக்கின் திரியும், எண்ணெயுமே உரையாடலில் ஈடுபட்டிருந்தன.

"நான் ஞானத்துக்குச் சமமானவன்! நான் இல்லாவிட்டால், இந்த விளக்கிலே ஒளி பிறக்கமாட்டாது. எனவே, ஒளியின் ஆதாரமே நான்தான்" என்றது எண்ணெய்.

"நான் அற்பமாகத் தோன்றலாம். ஆனால், உன்னையும் தீயையும் இணைக்கும் கர்மத்தை இயற்றுபவன் நான். கர்மம் ஞானத்தின் நிமித்தமாக இருப்பதினால், 'கர்மம் ஞானத்தின் திரிவாகும்' என அறிந்தோர் என் புகழ் சாற்றுவர்" எனத் திரி தன் கட்சியைப் பேசியது.

எண்ணெயும் திரியும் தத்தமது பெருமைகளை இருளிலிருந்து தாம் பேசுவதை மறந்து விட்டன.

ஈசன் தீயை எடுத்துத் திரியின் முனையிலே சுடரை ஏற்றினான்!

அறையிலே ஒளி பரவியது. அத்துடன் ஈசனின் சிரிப்பு அலைகளும் விரிந்தன.

"எண்ணெயும் தேவைதான்; திரியும் தேவைதான்! ஆனால், பக்தி என்ற தீயும் சேரும்பொழுது தான் விளக்கினால் ஒளி பரப்ப முடியும். இது விளக்குக்கும் பொருந்தும், மக்களின் பாவனைக்கும் பொருந்தும்" என்றான் ஈசன்.

"நான்?" எனக் கேட்டது விளக்கு.

"நீ உடல்!" என்றான் ஈசன்.

அறையில் பேச்சுக் குரல் கேட்கவில்லை.

— எஸ். பொன்னுத்துரை

ஒருநாளும் முடியாது. நந்தினி! மறந்து விட்டாயா, என்ன? மணிமேகலை! எங்களை ஏமாற்றி விடாதே!" என்றார்.

"அதை நான் மறக்கவில்லை. தங்களையும் தங்கள் சிநேகிதரையும் பார்த்தால் கானத்தைக் கேட்கக் கூடியவர்களாகத் தோன்றவில்லை. முள்ளின்மேல் நிற்பது போல் நிற்கிறீர்கள். ஆயினும் பாதகமில்லை. மணிமேகலை! எங்கே! யாழை எடுத்துக் கொண்டு வா!" என்றாள்.

"எதற்காக, அக்கா! விரும்பாதவர்களின் முன்னால், எதற்காக என்னை யாழ் வாசிக்கச் சொல்கிறீர்கள்?" என்று மணிமேகலை சிறிது பிராக்கி செய்தாள்.

"இல்லை, இல்லை! இளவரசர்தான் கேட்பதாகச் சொல்லுகிறாரே? அவருடைய நண்பருக்குப் பிடிக்காவிட்டால் காதைப் பொத்திக் கொள்ளட்டும்" என்றாள் நந்தினி.

"கடவுளே! அப்படியொன்றும் நான் இசைக் கலையின் விரோதி அல்ல! கோடிக்கரையில் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண்,

'அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?'

என்று ஒரு பாட்டுப் பாடினாள். அதை நினைத்தால் இப்போதும் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.


"சில பேருக்குச் சிலருடைய பாட்டுதான் பிடிக்கும். என்னுடைய பாட்டு உங்களுக்குப் பிடிக்குமோ என்னவோ!" என்றாள் மணிமேகலை.

"பிடிக்காமற் போனால் யார் விடுகிறார்கள்? அதற்கு நான் ஆயிற்று; நீ யாழை எடுத்துக் கொண்டு வா!" என்றார் கரிகாலர்.

மணிமேகலை யாழை எடுத்துக் கொண்டு வந்தாள். பளிங்கு மண்டபத்தின் படிக்கட்டில் மேற்படியிலே உட்கார்ந்துகொண்டாள். நரம்புகளை முறுக்கிச் சுருதி கூட்டினாள். ஏழு தந்திகள் கொண்ட யாழ் அது. ஒவ்வொரு தந்தியிலும் பாதி வரையில் ஒரு ஸ்வரமும் அதற்கு மேலே இன்னொரு ஸ்வரமும் பேசக்கூடியது.

சிறிது நேரம் யாழை மட்டும் வாசித்து இன்னிசையைப் பொழிந்தாள். கரிகாலரும் வந்தியத்தேவனும் உண்மையிலேயே மற்றக் கவலைகளையெல்லாம் மறந்து விட்டார்கள். யாழின் இசையில் உள்ளத்தைப் பறி கொடுத்துப் பரவசமானார்கள்.

பின்னர், மணிமேகலை யாழிசையுடன் குரலிசையையும் சேர்த்துப் பாடி



"இதென்ன! படுக்கையுடன் பள்ளிக் கூடத்துக்கு வந்து விட்டீர்கள்?"

"ஏழு மணிக்கே பள்ளிக்கூடங்களை ஆரம் பிக்கலாம்னு மந்திரி சொன்னாரே! பள்ளிக் கூடத்தில் முதல் நாளிரவே பள்ளி கொள்ள வந்தேன்!"

னாள். அப்பர், சம்பந்தர், சுந்தரரின் தெய்வீகமான பாசுரங்களைப் பாடினாள்.

சிறிது நேரமானதும் இளவரசர், "மணிமேகலை! உன்னுடைய கானம் அற்புதமாயிருக்கிறது. ஆனால் எல்லாம் பக்திமயமான பாடல்களையே பாடி வருகிறாய். அவ்வளவாக நான் பக்தியில் ஈடுபட்டவனல்ல. சிவ பக்தியையெல்லாம் மதுராந்தகனுக்கே உரிமையாக்கி விட்டேன். ஏதாவது காதல் பாட்டுப் பாடு!" என்று சொன்னார்.

மணிமேகலையின் அழகிய கன்னங்கள் நாணத்தினால் குழிந்தன. சிறிது தயக்கம் காட்டினாள்.

"பெண்ணே! ஏன் தயங்குகிறாய்? இங்கே நீ காதல் பாட்டுப் பாடினால் என்னை உத்தேசித்துப் பாடுகிறாய் என்று நான் எண்ணிக் கொள்ளமாட்டேன். என் சிநேகிதனும் எண்ணிக் கொள்ள மாட்டான். ஆகையால் தயக்கமின்றிப் பாடு!" என்றார் கரிகாலர்.

"அப்படி யாராவது எண்ணிக்கொண்டால் மணிமேகலை அதற்காகக் கவலைப் படவும் மாட்டாள்!" என்றாள் நந்தினி.

"போங்கள், அக்கா! இரண்டு புருஷர்கள் இருக்குமிடத்தில் இப்படிப் பரிகாசம் செய்யலாமா?" என்றாள் மணிமேகலை.

"இவர்கள் புருஷர்கள் என்று நீ நினைப்பதுதான் பிசகு. ஒரு செத்த புலியின் தலையைக் கொண்டு வர முடியாதவர்களை ஆண் பிள்ளைகள் என்று சொல்ல முடியுமா? முற்காலத்தில் தமிழ் நாட்டு வீர புருஷர்கள் உயிருடன் புலியைப் பிடித்து அதன் வாயைப் பிளந்து பற்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து தங்கள் நாயகிகளுக்கு ஆபரணமாகச் சூட்டுவார்களாம்! அந்தக் காலமெல்லாம் போய் விட்டது! போனால் போகட்டும்! நீ பாடு! அன்றைக்கு என்னிடம் பாடிக் காட்டினாயே? அந்த அழகான பாட்டைப் பாடு!" என்றாள் நந்தினி.

மணிமேகலை யாழ் வாசித்துக் கொண்டு பின்வரும் கீதத்தைப் பாடினாள். அது என்னமோ இத்தனை நேரம் பாடியதைக் காட்டிலும் இந்தப் பாட்டில் அவள் குரல் இணையற்ற இனிமையுடன் அமுத வெள்ளத்தைப் பொழிந்தது:—

"இனிய புனல் அருவி தவழ்
இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
கரம்பிடித்து உகந்ததெல்லாம்
கனவு தானோடி -- சகியே
நினைவு தானோடி!

* * *

"புன்னை மரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லி அவர்
கன்னல் மொழி பகர்ந்ததெல்லாம்
சொப்பனந்தானோடி - அந்த
அற்புதம் பொய்யோடி?

* * *

"கட்டுக்காவல் தான் கடந்து
கள்வரைப்போல் மெள்ளவந்து
மட்டில்லாத காதலுடன்
கட்டி முத்தம் தந்ததெல்லாம்
நிகழ்ந்ததுண்டோடி - நாங்கள்
மகிழ்ந்ததுண்டோடி!"

இவ்வாறு மேலும் மேலும் பல கண்ணிகளை மணிமேகலை வெவ்வேறு பண்களில் அமைத்துப் பாடி வந்தாள். அந்தக் கான வெள்ளத்தில் மற்ற மூவரும் மூழ்கிப் போனார்கள். பல காரணங்களினால் நெஞ்சைக் கல்லினும் இரும்பினும் கடினமாக்கிக் கொண்டிருந்த நந்தினியின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. ஆதித்த கரிகாலர் இந்த உலகத்தை அடியோடு மறந்துவிட்டார். வந்தியத்தேவன் அடிக்கடி இடுக்கிட்டு விழித்துக் கொண்டவன் போல் மணிமேகலையை நோக்கினான். அப்போதெல்

லாம் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது கண்டு அந்த வீர னுடைய உள்ளம் மேலும் நிடுக்கிட்டது. "ஐயோ! இந்தப் பெண்ணுக்கு நாம் என்ன தீங்கு செய்து விட்டோம்?" என்று அவன் நெஞ்சம் பதை பதைத்தது.

கான வெள்ளத்திலும் உணர்ச்சி வெள்ளத்திலும் மூழ்கியிருந்தவர்கள் வர வரக் காற்று கடுமையாகிக் கொண்டு வருவதைக் கவனிக்கவில்லை. ஏரியில் முதலில் சிறிய சிறிய அலைகள் கிளம்பி விழுந்ததையும் வரவர அவை பெரிதாகி வந்ததையும் கவனிக்க வில்லை. காற்று கடும் புயலாக மாறிக் காட்டு மரம் ஒன்றை அடியோடு பெயர்த்துத் தள்ளிய போதுதான் நால்வரும் விழித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தார்கள். கடுமையான புயல் காற்று அடிப்பதையும் ஏரி கொந் தளித்துப் பேரலைகள் 'ஓ' என்ற இரைச்சலுடன் எழுந்து விழுவதையும் பார்த்தார்கள்.

திடீரென்று நந்தினி, "ஐயோ! படகு எங்கே?" என்று அலறினாள்.

கட்டிப் போட்டிருந்த இடத்தில் பட கைக் காணவில்லை. உற்றுப் பார்த்த போது வெகுதூரத்தில் படகு அலைக ளால் மொத்துண்டு நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தது.

"ஐயோ! இப்போது என்ன செய் வது?" என்று நந்தினி அலறினாள்.

"உங்கள் இருவருக்கும் குதிரை ஏறத் தெரிந்தால் ஏறிப் போய் விடுங்கள். நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம்!" என்றான் வந்தியத் தேவன்.

"இந்தப் புயல் காற்றில் காட்டு மரங்கள் பெயர்ந்து விழுந்து எங்களைச் சாக அடிப்பதற்கு வழி செய்கிறீர் களா?" என்று நந்தினி கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டாம். புயலின் வேகம் தணியும் வரையில் இங்கேயே இருந்து விடுவோம். அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்? சமைய லுக்குப் பண்டங்கள் இருக்கின்றன; பாடுவதற்கு மணிமேகலை இருக்கிறாள். இவ்வளவு சந்தோஷமாகச் சமீபத்தில் நான் இருந்ததில்லை" என்றார் கரிகாலர்.



ஸுமிதாவும் ஸுசரிதாவும் பரத நாட்டிய உடையில் இப்படிக் காட்சியளிப்பது மட்டுமல்ல; நன்றாகப் பரதநாட்டியம் ஆடத் தெரிந்தவர்களும் கூட.

"இளவரசே! அது சரியல்ல! சம்பு வரையரும் கந்தமாறனும் என்ன நினைப் பார்கள்?" என்றான் வல்லவரையன்.

"இவரே புலியைத் தேடிச் சென்ற போது படகை அவிழ்த்துவிட்டுவிட்டார் போலிருக்கிறது!" என்றாள் நந்தினி.

"அக்கா! ஏன் வீண் பழி சொல்கி றீர்கள்? இவர் வந்தபோது படகு கரை யோரமாகத்தானே இருந்தது. யாரும் கவலைப்பட வேண்டாம். என் தந்தை இந்தப் புயல் காற்றைப் பார்த்ததும் நம் துணைக்குப் பெரிய படகுகளை அனுப்பி வைப்பார்!" என்றாள் மணிமேகலை.

அவள் கூறியது சற்று நேரத்துக் கெல்லாம் உண்மையாயிற்று. ஏறக் குறைய கப்பல் என்று சொல்லத்தக்க இருபெரும் படகுகள் அத்தீவை நோக்கி வந்தன. அவற்றில் ஒன்றில் பெரிய சம்புவரையரே இருந்தார். நாலு பேரும் பத்திரமாய் இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

அவர்களை ஏற்றிக் கொண்டு அலை கடல் போல் பொங்கிக் கொந்தளித்த ஏரியில் இரண்டு படகுகளும் திரும்பிச் சென்றன. சம்புவரையரைத் தவிர மற்ற நால்வரின் உள்ளங்களிலும் கடும் புயல் வீசிக் கொந்தளிப்பை உண்டாக் கிக் கொண்டிருந்தது.

★ நான்காம் பாகம் முடிவுற்றது ★

★ ஐந்தாம் பாகம் அடுத்த இதழில் தொடரும் ★



நமது மார்கழி நோன்பு

[இது மார்கழி மாதம். ஹிந்துக்கள் அனைவரும் அதிகாலையில் துயில் விட்டெழுந்து, மங்கள நீராடி, தூய்மையுடன் திருப்பாவையும், திருப்பள்ளி எழுச்சியும் பாடி நோன்பிருக்கும் மாதம். மாதங்களில் மார்கழியே மேலானதல்லவா? ஆகவே இக்கட்டுரையில் ராஜாஜி காட்டும் நோன்பை நாம மேற்கொள்வோம்.]

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்!
மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப்
போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்
கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய்!"

"மாமன்மகளே மணிக்கதவம் தாள் திறவாய்!
மாமீர் அவளை எழுப்பீரோ!
உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ?
அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?"

எங்கள் நோன்பு
இராட்டை நோன்பு

"வையத்து வாழ்வீர்காள்! நாமும்
நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ!
பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்
நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு
நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச்
சென்றோதோம்
ஐயமும் பிச்சையும்
ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி
உகந்தேலோ ரெம்பா
வாய்."

எங்கள் இராட்டை
நோன்பு
நிறைவே நிறைவு

"தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள்மும் மாரி பெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு;
கண் படுப்ப
தேங்காதே புக்கிருந்த சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல்
பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ
ரெம்பாவாய்."

வாழ்க! எங்கள்
இராட்டை வாழ்க!

"தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு
நின்று குடிகுடியாட் செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை
ஆயிரந்தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே."

"என்ன இவர்கள் கப்பா சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் — சுயராஜ்யம் வந்தபாடு ஒன்றும் காணோம்!"

" நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. அவர்கள் சொன்னதைச்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



செய்தால் அல்லவோ சுயராஜ்யம் வரும். கேட்ட விலையைக் கொடுத்தாலல்லவோ கைக்குச் சரக்கு வரும்.''

''ஆமாம்! சுயராஜ்யத்துக்கு என்ன விலை கேட்கிறார்கள்? சொல்லுங்கள், பார்க்கலாம்.''

''விலையைத்தான் காந்தி விளக்கமாய்ப் போட்டிருக்கிறாரே! கதரை விருத்தி செய்தால் சுயராஜ்யம் கிடைக்கும்.''

''சுயராஜ்யம் என்னவென்று தெரிந்து கொள்ளாமல் குழந்தைகள் போல் நாம் கூப்பாடு போடுகிறோம். சுயராஜ்யம் ஒரு மிட்டாய்க் கட்டியன்று. அது ஒரு பசுவைப் போன்றது. பசு வாங்கின பிறகு அதைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக உழைத்துத் தீனி சம்பாதித்துப் போட வேண்டும். நாம் சாப்பிடுவதில் ஒரு பங்கு அதற்கு எடுத்து வைக்க வேண்டும். இரவில் திருடன் வந்து அதைக் கொண்டு போகாமல் காவல் இருக்க வேண்டும். மிரண்டும் துள்ளியும், ஜனங்கள் மேல் பாயாமல் சாதுவாய்ப் பழக்கவும் வேண்டும். இதையெல்லாம் கவனித்துக் காப்பாற்றத் தயாராயிருந்தால்தான் பசுவை வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிடில் விலைக்குப் பால் வாங்கிக் கொண்டு நல்ல பாலோ, அழுக்குத் தண்ணீர் கலந்ததோ கண்ணை மூடிக் கொண்டு குடித்து வருவதுதான் நலம் — பொறுப்பும் பிரயாசையும் இல்லாதபோனால் சுயராஜ்யம் கிடையாது.''


''சுயராஜ்யம் என்றால் சர்க்கரைக் கட்டி என்று நினைத்தேன். நீர் சொல்லுவது இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. சுயராஜ்யம் வந்தால் பெருங் கஷ்டமாய் முடியும் போலிருக்கிறது.''

''ஆமாம். ஆனால் மானமாய்ப் பிழைக்க வேண்டுமானால், மாடும், மனைவியும், வீடும் இருக்க வேண்டும் அல்லவா?''

''உண்மை. மாடு வைத்துக் கொள்ளுவது கஷ்டம். மனைவியைக் காப்பாற்றுவதும் கஷ்டம். குடும்பமென்றால் ஓய்வில்லாத பாடுதான். அதைப் போலவே சுயராஜ்யம் என்றாலும் ஓய்வில்லாத ஒரு புதிய சம்சாரம்தான்.''

''ஸம்சார கஷ்டங்களைக் கண்டு பயந்து மனைவி வேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்? மாடு வேண்டாம், மனைவி வேண்டாம் என்று சொல்லுபவன் நாடோடி. சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லுகிறவன் மானமற்ற அடிமை. மானமாய்ப் பிழைக்க வேண்டுமானால் பாரம் சுமந்துதான் தீர வேண்டும்.''

1933ல் ''குடிநூல்'' என்னும் பத்திரிகைக்காக ராஜாஜி எழுதிய இக்கட்டுரை பின்னர் ''சுதந்திரச் சங்''கிலும் பிரசுரமாகியது.





அமுல் மில்க் பவுடர் கைவசம் இருந்தால் நல்ல பாலுக்குப் பஞ்சமே இல்லை

பருகி மகிழப் பால் பலவிதம்: சூடான பால். ஐஸ் பால். மால்டெட் பால். மில்க் ஷேக். தானியத்தில் பால். தேநீரில் பால். காபியில் பால். பாயசத்தில் பால். கீரிலே பால். கஸ்டர்டில் பால். கறிகளில் பால். தயிராகப் பால். மோராகப் பால்.

வீட்டிலேயே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு

அமுல் மில்க் பவுடர் உபயோகிக்க ஆரம்பித்த வீட்டினர்களாகும், இங்கள் வரை ஏன் கஷ்டப்பட்டோம் என்று வருந்துவீர்கள். நல்லபாலை நிச்சயமாகப் பெறும் வாய்ப்பு எவ்வளவு வசதியானது. உங்களுக்கோ பல்வேறு உபயோகங்களுக்கு நல்ல பால் தேவைப்படுகிறது. அமுல் மில்க் சுவையானது. தேநீர், காபி மற்றும் இதர பானங்களுடன் கலவுங்கள். உங்கள் இச்சைக் கினிய பால் இனிப்புக்களுக்கும், புட்டிங்குகளுக்கும் ஏற்றது. பிக்னிக், பிரயாணம், விடுமுறைகளின் போது சமய சஞ்சீவி!



கலக்க எளிதான அமுல் மில்க்: 10 டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை இளம் வெந்நீரில் விழுதாக்கிக் கொள்ளுங்கள். ஒரு லிட்டர் பாலாகும் வரை வெந்நீரைச் சேருங்கள். ஒரு கோப்பை பாலுக்கு 2½ டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் உபயோகியுங்கள்.

கெட்டியான ஆடைத் தயிர்: அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பாலைக்கொதிக்கும் வரை சூடாக்குங்கள். வெதுவெதுப்பு நிலைக்கு குளிர விடுங்கள். 1/2 அல்லது 1 டேபிள் ஸ்பூன் நல்ல தயிரை சேர்த்துக் கிளறுங்கள். அப்படியே தோய விடுங்கள்.

அமுல்

மில்க் பவுடர்—வீட்டிலேயே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு

ASP/AMP-7


இல்லங்களில் வளர் செல்லங்கள்

குரங்குக் குட்டியிடம் கொள்ளை ஆசை!



கிருஷ்ணா (ஆந்திரா) மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஜி. வெங்கடலக்ஷ்மி நாராயண சாஸ்திரி ஐந்து ஆண்டுகளாகச் சென்னை மாம்பலத்திலுள்ள கூச்சிபுடி ஆர்ட்ஸ் அகாதெமியில் சம்ஸ்கிருதம் போதிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். பரதம், கூச்சிபுடி ஆகிய நாட்டியங்களின் சாஸ்திரங்கள் எல்லாம் வடமொழியில் இருப்பதால் கூச்சிபுடி நாட்டியம் பயிலும் மாணவியர்க்கு சம்ஸ்கிருதமும் பயிலுவிக்கப்படுகிறது. கடந்த எட்டு மாதங்களாக இவர் ஒரு குரங்குக் குட்டியை மிக்க வாஞ்சையுடன் வளர்த்து வருகிறார். மூர்மார்க்கெட்டில் ரூபாய் பத்து விலை கொடுத்து வாங்கி வந்தாராம். 'சம்பு' என்று பெயர் சூட்டியுள்ளார்.

திரு சாஸ்திரிக்கு அந்தக் குரங்குக் குட்டியிடம் கொள்ளை ஆசை என்றால், அக்குரங்கு அதைவிடப் பன்மடங்கு ஆசையுடன் அவரிடம் பழகி வருகின்றது! கழுத்தைக் கட்டிக் கொள்ளுகிறது. தலைமேல் ஏறி உட்கார்ந்து கொள்ளுகிறது. சில்க் ஜிப்பாவைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறது. எங்கே அவருடைய ஜிப்பா கிழிந்து விடுமோ என்று நான் கவலைப்படுகிற மாதிரி திரு சாஸ்திரி கவலைப்படவே யில்லை! அவருடைய மகள் குமாரி லலிதா திரிபுரசுந்தரி (8 வயது) ஒரு வாழைப்பழத்துடன் அதன் அருகில் வந்து பயந்தவாறு குரங்கினிடம் அதனை நீட்டுகிறாள். வாழைப் பழம் பிடிக்காத குரங்கு உண்டா? 'லபக்' கென்று பழத்தை வாங்கிய 'சம்பு' வெகு நாஜுக்காகத் தோலை உரித்துப் பழத்தைத் தின்கிறது. "நான் வீட்டில் இருக்கும்போது அவனைக் கட்டிப் போடுவதே யில்லை. இரவில் மட்டுமே கட்டிப் போடுவது வழக்கம். அவிழ்த்து விட்டாலும் சம்பு வெளியே வெகு தூரம் போவதில்லை. தெரு நாய்களைக் கண்டால் 'சம்பு'வுக்கு நடுக்கம். ஆனால் பக்கத்துப் போர்ஷனில் உள்ள நாய் 'ஜானி' யிடம் சம்புவுக்குப் பயமே யில்லை. இஷ்டம் போல் அதனுடன் விளையாடும்" என்று திரு சாஸ்திரி சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அந்த ஜானி சம்புவைத் தேடி வந்து விடுகிறது விளையாட! நாயும் குரங்குக் குட்டியும் ஓடிப் பிடித்து விளையாடும் அந்தக் காட்சியை நான் ரசித்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் என்னுடன் வந்த புகைப்படக் காரரின் தவிப்பையும் ரசிக்காமலில்லை! ஒரு நிமிடம் அவை இரண்டும் ஒரு நிலையில் இருந்தால்தானே படமெடுக்க முடியும்?



வீட்டு வாசலில் ஆடு, மாடு ஏதாகிலும் நுழைவதைக் கண்டால் சம்பு சத்தம் போட்டு எச்சரிக்கை செய்யுமாம். புதிய மனிதர்களை — குறிப்பாகக் குழந்தைகளைக் கண்டால் பல்லைக் காட்டிப் பயமுறுத்துவது உண்டாம்.

"நாட்டிய வகுப்புகள் நடக்கும்போது, உங்கள் சம்பு வேடிக்கை பார்க்குமா?" என்று கேட்கிறேன். திரு சாஸ்திரி கூறுகிறார்: "நாட்டிய வகுப்புக்கு அழைத்துச் சென்றால் எல்லாரும் இதன் சேஷ்டைகளை வேடிக்கை பார்க்கத் தொடங்குவார்கள்! அவர்களுடைய பாடம் கெட்டுப் போகும். எனவே, வகுப்புக்கள் நடக்கும்போது சம்புவை வீட்டை விட்டு வெளியே அனுப்புவதில்லை."

"இதன் பழக்க வழக்கங்களில் ஏதாகிலும் விசேஷம் உண்டா?"

"காலையில் நான் காப்பி சாப்பிடுகையில் சம்புவுக்குப் பால் கொடுப்பேன். பிற்பகல் சாம்பார், ரசம், மோர் இவற்றுடன் சாதம் சாப்பிடும். இரவிலும் நாங்கள் சாப்பிடும் உணவையே அளிப்போம். நாட்டிய வகுப்புக்கு வரும் சிறுமியர் சிலர் வாழைப்பழம் கொடுப்பதுண்டு. பிரியா என்ற சிறுமி (இரண்டரை வயது) தினமும் நாட்டியத்தை வேடிக்கை பார்க்க வரும்போது சம்புவுக்குத் தவறாமல் ஒரு வாழைப் பழம் கொண்டுவந்து கொடுக்கிறாள். ஒரு நாள் சம்புவைப் பார்க்காவிட்டால் அவளுக்குத் தூக்கம் வராதாம்."

"சம்பு எப்போது தூங்கும்?"

"இரவு ஏழரை மணிக்குத் தூங்க ஆரம்பிக்கும். எட்டரை மணிக்கு நாங்கள் சாப்பிடும்போது பாத்திரங்கள் ஓசை கேட்டு விழிக்கும். சாப்பிட்ட பிறகு விடியும்வரை நன்றாக உறங்கும். 2, 3 நாட்களுக்கு ஒரு முறை குளிப்பாட்டுவேன். கோடைக்காலம் வந்தால் ஒரு தொட்டியில் தண்ணீர் நிரப்பி வைத்தால் அதுவே குளித்துவிடும்" என்கிறார் திரு சாஸ்திரி.

பேட்டி : 'பாணன்'

73. கட்டுண்டான்

ராமாயணம்


—ராஜாஜி—

தேவர்களுக்குச் சமானமான வாலிப வீரனான அக்ஷன் எட்டுக் குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஏறிப் போவதை வால்மீகி முனிவர் வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார். ராமாயணத்தில் காடுகளின் அழகையும், வீரர்கள் யுத்தம் செய்யும் அற்புதச் செயல்களையும், போரின் வேகத்தையும் முனிவர் சித்திரித்திருப்பதை நான் மொழிபெயர்த்துக் காட்ட இயலாது. காடு மிக அழகாக இருந்தது; அல்லது யுத்தம் மிகக் கோரமாக நடந்தது என்று இவ்வளவுதான் சொல்ல முடியும். முனிவருடைய சித்திரமோ, பொருள்களின் அழகுக்குத் தகுந்த சுந்தரமான தொனி கொண்ட மொழிகளும், யுத்தத்தைத் தொனித்துக் காட்டும் கம்பீர ஒலி நிறைந்த மொழித் தொடர்புகளும், காட்டைப் போலவே, யுத்தத்தைப் போலவே ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிந்து விழுந்து, மனத்தைக் கொள்ளைகொண்டு போகும் நடை. யுத்தங்களில் இரு தரத்தாருடைய செயல்களையும் அற்புத கம்பீரத்துடன் வர்ணிப்பது வால்மீகி முனிவருடைய தனிச் சக்தி. ராவணனுடைய அருமைக் குமாரன் அக்ஷனுக்கும் ஹனுமானுக்கும் நடந்த யுத்தத்தைச் சொல்லும் விஸ்தார வர்ணனையை நான் தமிழ்ப்படுத்திச் சொல்லப் போவது முடியாத காரியம்.

தவத்தால் பெற்ற தங்க மய ரதத்தில் ராவண குமாரன் ஏறிச் சென்றான். கல் தோரணத்தின் மேல் பயமின்றிக் கம்பீரமாக உட்கார்ந்திருந்த ஹனுமானைக் கண்டான். காலாக்கினி போல் சுடர்விட்டு எரிந்து நின்ற அந்த உருவத்தைக் கண்ட அக்ஷனுடைய உள்ளத்தில் 'இவன் எனக்குத் தகுந்த பகைவன்' என்ற எண்ணம் உண்டாகி, அவன் தன் வீரத்தைப் பெருக்கிக் கொண்டான்.

இளம் வீரன் மூன்று கூரிய பாணங்களை எய்தான். அவை ஹனுமானுடைய உடலில் பட்டு ரத்தம் பெருகிற்று. ரத்தம் பெருகப் பெருக மாருதியின் வீரம் வளர்ந்தது. முகத்தின் பொலிவு கொழுந்துவிட்டு எரிந்தது. வாலிப அரக்கனுடைய வீரத்தைக் கண்டு ஹனுமானும் மிக மகிழ்ச்சி அடைந்தான்.

போர் முற்றி இருவருக்குமிடையில் கடும் யுத்தம் நடந்தது. அம்புக் கூட்டம் மேகங்கள் போல் ஆகாயத்தில் கிளம்பி மாருதியை மூடின.



மலைமேல் மாரி பெய்வது போல் அம்பு மழை ஹனுமானுடைய கல் போன்ற தேகத்தின் பேரில் பொழிந்தது. ஆகாயத்தில் கிளம்பி

ஹனுமான் அற்புத முறையில் பாணங்களுக்கிடையில் சஞ்சரித்து அக்ஷனைத் தாக்கினான். வானத்தில் மேகங்களைக் காற்றானது சிதறியடிப்பது போல் அம்புக் கூட்டங்களை மாருதி லட்சியம் செய்யாமல் தன் .அற்புத சஞ்சாரங்களால் சிதறி அடித்தான். ராக்ஷச குமாரனுடைய சாமர்த்தியம், வீரம், பொறுமை, சாவதானம் இவற்றைப் பார்த்து, ''ஐயோ, இவனைக் கொல்ல வேண்டுமே!'' என்று துயரப்பட்டு ஹனுமான் வெகு நேரம் யுத்தத்தை நீடித்து நடத்தினான். அரக்கனுடைய பலம் பெருகிக் கொண்டே போயிற்று. முடிவில் ஹனுமான் மனத்தை உறுதி செய்து கொண்டு அரக்கனை வதம் செய்யத் தீர்மானித்தான்.

முதலில் அக்ஷனுடைய தேரை ஒடித்துத் தீர்க்க வேண்டும் என்று ஹனுமான் நிச்சயித்து, அதன் மேல் திடீர் என்று முழு வேகத்துடன் பாய்ந்தான். தேர் பொடியாகி விழுந்தது. ஏர்க்கால் முறிந்து, கூடு கவிழ்ந்து நாசமாகி, குதிரைகள் மாண்டு தேரின்றித் தரையில் நின்றான் அரக்க ராஜகுமாரன்.

இதன் பின்னும் அவன் தயங்காமல் வில்லும் கத்தியுமாக ஆகாயத்தில் கிளம்பினான். கிளம்பி மாருதியைத் தாக்கினான். இருவருக்கும் பெரும் போர் ஆகாயத்தில் நடந்தது. முடிவில் அவன் எலும்பெல்லாம் ஒடிந்து, நசுக்கப்பட்டுக் கீழே விழுந்து மாண்டான்.

* * *

ராக்ஷச குமாரன் வானரத்தால் கொல்லப்பட்டான் என்று ராவணன் அறிந்ததும், அவன் இதயம் துடித்தது. கிளம்பிய ரோஷத்தை அடக்கித் தன் உள்ளத்தை ஒரு நிலையில் வைத்துக் கொண்டு இந்திரனுக்குச் சமமான வீரனான இந்திரஜித்தை அழைத்தான்.

''எல்லா அஸ்திரங்களையும் நன்றாகப் பயின்று அடைந்திருக்கிறாய். தேவாசுரர்களை யுத்தத்தில் வென்றிருக்கிறாய். பிதாமகனைப் பூஜித்து அவரிடமிருந்து பிரம்மாஸ்திரம் பெற்றிருக்கிறாய். உன்னை எதிர்த்து நிற்கக் கூடியவர்கள் உலகத்தில் யாரும் இல்லை. சோர்வு என்பதை அறியாதவன் நீ. அறிவில் சிறந்தவன் நீ. தவத்தால் சக்தியடைந்திருக்கிறாய். நீ செய்ய முடியாதது ஒன்றில்லை. காரியங்களைச் சரியாக யோசித்துச் செய்வதில் உனக்கு நிகர் யாருமில்லை. நான் அனுப்பிய கிங்கரர்கள், ஜம்புமாலி, நம்முடைய மந்திரிகளின் வீர புத்திரர்கள், சேனாதிபதிகள் ஐவர், உன் தம்பி அருமை அக்ஷன் — இவ்வளவு பேர்களும் மாண்டார்கள். நீதான் இந்தச் சத்துருவை வென்று சிறைப்படுத்தும் வல்லமை கொண்டவன். சேனாபலத்தால் இவனை வெல்ல முடியாது. கிட்ட நெருங்கிக் கை கலந்து யுத்தம் செய்வது இவனிடம் செல்லாது. நன்றாய் யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய்து, நீ இவனை எதிர்த்து வெற்றியுடன் திரும்பி வா. தவத்தால் நீ பெற்றிருக்கும் அஸ்திரமே இந்தச் சமயத்தில் பயன்படும். உன் புத்தியைச் சிதற விடாமல் யுத்தம் செய். வெற்றியுடன் திரும்பி வருவாய்'' என்றான்.

தந்தையின் சொல்லை ஏற்றுக் கொண்டு, தேவப் பிரபாவம் பெற்ற இந்திரஜித்து தந்தையை வலம் செய்து வணங்கி ஆசி பெற்றுக்கொண்டு தைரியமாகவும் உற்சாகமாகவும் அசோக வனத்தை நோக்கிச் சென்றான்.

கோரப் பற்கள் விளங்கும் நான்கு சிம்மங்கள் பூட்டிய தேரில் ஏறி நின்று



வில்லின் நாணை இழுத்துச் சப்தம் செய்து கொண்டு ஹனுமான் இருந்த இடம் சென்றான். பருவகால ஓசை செய்தது அவன் தேர். தாமரை இலையைப் போன்ற அவனுடைய அகன்ற கண்களில் வெற்றி எழில் திகழ்ந்தது.

ராக்ஷசேந்திர குமாரனுடைய தேர், தான் இருக்குமிடத்தை நோக்கி வேகமாக வருவதைப் பார்த்த ஹனுமான் பெருமகிழ்ச்சி யடைந்தான். யுத்தத்தில் நிபுணனை இந்திரஜித்தும் ஹனுமானை உத்தேசித்து வில்லை வளைத்துக் கூர்மையான பாணங்களையும் ஆயத்தமாக வைத்துக் கொண்டான்.

பெரும் யுத்தம் நடக்கும் என்று கண்ட நாக யக்ஷ சித்தர்கள் ஆகாயத்தில் வந்து சேர்ந்தார்கள்.

இந்திரஜித்தைக் கண்டதும் ஹனுமான் தன் பெரும் சரீரத்தை இன்னும் பெருக்கிக் கொண்டான். ராக்ஷச வீரன் பேசாமல் அம்புகளைத் தொடுத்து எய்தான். தேவாசுர யுத்தத்தைப் போல் அம்புமாரி பொழிய ஆரம்பித்தது.

ஹனுமான் ஆகாயத்தில் கிளம்பி அற்புத வேகத்துடன் சஞ்சரித்து மின்னலைப் போல் வந்த கூரிய அம்புகளை வீணாக்கினான். அரக்கனுடைய பட்சத்திலிருந்து கிளம்பிய பேரிகை நாணோசை முதலிய கோஷங்களுக்குச் சமமாக வானர வீரன் தன் கர்ஜனைகளால் திக்குகள் எதிரொலிக்கச் செய்தான். இப்படி இரு வீரர்களிடையே நடந்த யுத்தம், பார்த்தவர்கள் பிரமிக்கும் வகையில் வளர்ந்து கொண்டே போயிற்று. இருவருடைய சாமர்த்தியமும் சமமாகவே இருந்தன.

எத்தனை பாணங்கள் பட்டும் ஹனுமானுடைய] சக்தி குறையவில்லை. அதைப் பார்த்து, 'இந்த வானரம் என் 'அம்புகளால் தோல்வியடையப் போவதில்லை. என் பாணங்களோ இவனைக் காயப்படுத்துவதாகக் காணவில்லை. தந்தை சொன்னது உண்மை. பிரம்மாஸ்திரம் பிரயோகித்தே இவனைக் கட்டிவிட வேண்டியது' என்று ராக்ஷசன் தீர்மானித்தான்.

ராக்ஷச குமாரன் பிரம்மாஸ்திரத்தை எய்தான். அது வானர வீரனைத் தாக்கியதும் அவன் கட்டுண்டு செயலற்றுப் போனான்.

'ஓகோ! பிதாமகருடைய அஸ்திரத்தால் கட்டுண்டேன்' என்று மாருதி உடனே தெரிந்து கொண்டான்.

பிரம்மாவிடம் மாருதியும் வரம் பெற்றிருந்தான். அப்போது அதை நினைவுக்குத் தந்து கொண்டான். 'ஒரு முகூர்த்த நேரமே இது என்னைக் கட்டி நிற்கும். இதனால் எனக்கு யாதொரு ஆபத்துமில்லை. கட்டப்பட்டு நிற்கும் காலத்தில் அரக்கர்கள் என்ன செய்வார்கள் பார்க்கலாம். தூதனாக வந்த என் வேலை ஒரு வேளை இதனாலேயே பூர்த்தியாகும்' என்று யோசித்து, பிதாமகன் தனக்குச் சிரஞ்சீவி வரம் தந்தபோது அவன் இட்ட ஆக்ஞையின்படி பிரம்மாஸ்திரத்துக்கு அடங்கித் தைரியமாகவும் செயலற்றும் தரையில் விழுந்தபடி கிடந்தான்.

ஹனுமான் விழுந்து கீழே செயலற்றுக் கிடக்கிறான் என்பதைக் கண்டதும் அதுவரையில் பயந்து தூர நின்ற அரக்கர்கள் எல்லாரும் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். மாருதியைத் தாறுமாறாகத் திட்டிப் பேரிரைச்சலிட்டுக் கொண்டும், தங்களுடைய ராஜகுமாரனைப் புகழ்ந்தும் கூத்தாடினார்கள்.

''துண்டு துண்டாக வெட்டுவோம். தின்றுவிடுவோம்! ராவணனிடம் இழுத்துப் போவோம்!'' என்றார்கள்.

பிறகு சிலர், ''இவன் பாசாங்கு செய்வான். திடீர் என்று கிளம்பி நம்மைத் தாக்குவான்'' என்று பயந்து சணல் கயிறும் தென்னங் கயிறும் கொண்டு வந்து ஹனுமானை நன்றாகக் கட்டிவிட்டு, ''கட்டிவிட்டோம். இழுத்துப் போகலாம் ராவணேசுவரனண்டை'' என்று மிக மகிழ்ந்து கூச்சலிட்டார்கள்.

ராக்ஷஸக் கூட்டம் இப்படிச் செய்வதைத் தடுக்க அவகாசம் பெறாத இந்திரஜித்து மிக வருத்தப்பட்டான்.

'ஐயோ! நான் செய்தது வீணாகப் போயிற்றே! இந்த மூடர்களுக்கு மந்திர ரகசியங்கள் தெரியவில்லை. இப்படி இவர்கள் கயிறும், சாக்குப் பைகளும் போட்டுக் கட்டிய பின் பிரம்மாஸ்திரத்தின் சக்தி ஒழிந்து போயிற்று. ஸ்தூலப் பொருள்களால் கட்டிய பின் மந்திரக் கட்டு தானாகவே அவிழ்ந்து போயிற்று. அனுமான் நாரும் கயிறும் போட்டுக் கட்டிய கட்டுகளை ஒரு கணத்தில் அறுத்து எறிந்து எழுந்துவிடுவான். மறுபடியும் பிரம்மாஸ்திரம் பிரயோகிக்க முடியாது' என்று எண்ணி வருத்தப்பட்டான்.

மாருதியும் நிலைமையை அறிந்து கொண்டான். பிரம்மாஸ்திரத்தின் கட்டு நீங்கிப் போயிற்று என்றும் கயிறுகளால் கட்டப்பட்டதுதான் மிச்சம் என்றும் அதைத் தன் தேக பலத்தால் ஒரு கணத்தில் விலக்கிக் கொள்ளலாம் என்பதையும் உணர்ந்தான். ஆனபோதிலும் தன்னைக் கட்டி இழுத்துச் செல்லட்டும்; ராவணனைக் கண்டு பேச அவகாசம் ஏற்பட்டது என்று நிச்சயித்து, வேண்டுமென்றே பேசாமல் அவர்கள் செய்த கொடுமைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு செயலற்றே இருந்தான். அடித்தார்கள், இடித்தார்கள்; ராக்ஷஸ ஸ்திரீகளும் பாமரர்களும் பரிகாசம் செய்யத் தெருவில் இழுத்துச் சென்றார்கள். (தொடரும்)


சிதம்பர ரகசியம்
கதை:
கோமதிசுவாமிநாதன்
சித்திரம்:
ராஜு
22
அடடா! நான் எங்கே இருக்கிறேன்?..
பட்டப்பா உள்ளே வருகிறான்...
அப்படியே ஆகட்டும் ராவணா!
வாசலுக்கு இருவரும் வருகின்றனர்.







கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம் ஸிந்தெல், உங்கள் வதனத்திற்கு புத்தம்புது ரோஜா மலரின் மெருகேற்றி, எழிலோங்கச் செய்கிறது. சருமத்தில் போட்டதே தெரியாமல் கரைந்து மறைந்து, பட்டுப் போன்ற பளபளப்பை மட்டும் ஒளிவிடச் செய்கிறது ஸிந்தெல்.

ஸிந்தெல், சருமத்தின் இயற்கையான ஈரத்தன்மையை நிலை நிறுத்தி, நாள் முழுவதும் கலையாத புதுமைச் சிலிர்ப்பினை அளிக்கிறது. அழகுப் படிமானமாகவோ, அப்படியேவோ உபயோகிக்கும்போது, ஸிந்தெல் தரும் தூய ரோஜா சுகந்தம் உங்களைக் கவர்ச்சிக் கன்னியாகக் கனியவைக்கிறது.

கொஞ்சிடும் அழகு மிஞ்சிட—ஸிந்தெல்
கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம்.

Godrej

ULKA-GSC-2 TAM

சத்தக் கட்டுப்பாடு!

காசு கொடுக்காமலேயே கிடைக்கும் விஷயம் சத்தம். கூச்சல் போடச் சாமர்த்தியம் தேவை இல்லை. முட்டாள்தனமே போதும்! சத்தம் போடுவது என்றால் காற்றில் அதிர்வுகளை — ஒலி என்கிற அமைப்பை — ஏற்படுத்த வேண்டும். இதற்குச் சக்தி செலவாகிறது எனினும் இது அதிகமில்லை.

கால் பந்தாட்டத்தில் இறுதிப் போட்டியின் போது மக்கள் போடும் கூச்சலை யெல்லாம் ஒன்று சேர்த்தால் எவ்வளவு சக்தி செலவாகிறதோ, அந்தச் சக்தியைக் கொண்டு ஒரு கெட்டில் நீரைக் கொதிக்க வைத்துவிடலாம் என்று கணக்குப் பண்ணியிருக்கிறார்கள்.

சத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் பெரிய முட்டுக்கட்டை அது கொள்ளை மலிவான பொருள் என்பதுதான். சத்தம் போட அதிகமாக உழைக்க வேண்டாம். சத்தம் போடாமல் இருப்பதால் காசு மிச்சமாவதுமில்லை. இது மனிதர்கள் விஷயத்தில் மட்டுமின்றி இயந்திரங்களுக்கும் பொருந்தும். இயந்திரங்களை உருவாக்குகையில் அவற்றின் இயக்கத் திறனைத்தான் முக்கியமாகக் கருதுவார்களே ஒழிய முன்கூட்டியே சத்தத்தைக் குறைக்க யாரும் திட்டம் வகுக்க மாட்டார்கள்.

மிருதுத் தன்மையுடன் விளங்கினால் ஓசைப் படுத்துவதும் மிதமா யிருக்கும். ஆனால் ஒரு நவீன விமானத்தின் ஜெட் இன்ஜினை மிருதுத் தன்மையுடன் தயாரிப்பது சாத்தியமா என்ன?

ஒலி அலைகள் காற்றில் மணிக்கு 750 மைல் வேகத்தில் பரவுகின்றன. ஒலி அலைகளின் இரு சிகரங்களுக்கு இடையே உள்ள தூரம் அலை நீளம் (wave length) எனப்படும்.

மிருதுவான வஸ்துக்களும் கடற் பஞ்சு போன்ற சர்க்கும் தன்மை படைத்த பொருள்களும் ஒலி அலைகளின் சக்தியைக் கிரகித்து ஓசையைக் குறைக்க உதவுகின்றன. இவற்றை விடத் திறம்பட ஓசையைக் குறைக்கும் ஆற்றல் பெற்றவை வளைவு நெளிவுகளும், கோணல் மாணல்களும், ஓட்டைகளும் பொத்தல்களுமே!

காலியாக இருக்கும் ஓர் அறையில் எதிரொலி கேட்கக் காரணம், தரையில் மிருதுவான கம்பளம் விரிக்கப்படாத குறையல்ல, அவ்வறையில் மேஜை நாற்காலிகள், பீரோக்கள் போன்றவை இல்லாததே. மோட்டார் காரில் பொருத்தப்பட்டுள்ள சத்தத்தைக் குறைக்கும் சாதனம் இந்த அடிப்படையில்தான் இயங்குகிறது.


அன்றாட வாழ்க்கையில் சிறிய ஓட்டைகளையும் வளைவு நெளிவுகளையும் எங்கு பார்த்தாலும் நாம் காணலாம். இவற்றையே நாம் பெரிய வடிவங்களில் காணுதல் அரிது. ஆகவே கிரீச்சிடும் சத்தங்களை அதாவது ஓர் அங்குலத்துக்கும் குறைவான அலை நீளம் உள்ள சத்தங்களைக் கட்டுப்படுத்துதல் எளிது. ஆனால் நூறு அடி அலைநீளம் உடைய கனமான ஓசைகளைக் கட்டுப்படுத்துதல் கடினம். விசில் சத்தம் அல்ல; டமாரச் சத்தம்தான் பெரிய பிரச்னை.

சத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் இன்னொரு பெரிய தடங்கல், அதிகரிக்கும் சத்தத்தைப் பொறுத்துக் கொள்ளும் பண்பு நம் காதுகளுக்கு இருப்பதே!

ஒரு வரம்புக்கு மேல் போய்விடும் போது சத்தம் சிறிது குறைந்தால்கூடச் செவிக்கு அது புலனாகாது! நிசப்தத்திலிருந்து சத்தத்தைச் செவி துல்லியமாக உணர்வது போல் அதிக சத்தத்துக்கும் மிக அதிக சத்தத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணராது!

ஓசையைக் குறைக்க இக் காலத்து எளிய பாணி மேஜை நாற்காலிகளும் அறை அலங்கார முறைகளும் பயன்படா. பழங்காலத்தில் என்றால் மடிப்பு மடிப்பாய்த் தொங்கும் திரைச் சீலைகளும் வளைவு நெளிவு கனிவுகள் மிகுந்த நாற்காலி மேஜை முதலானவையும் சத்தத்தைக் கட்டுப்படுத்தப் பெரிதும் உதவின.

பழங்காலத்தில் ரப்பர் டயர்களும் ரப்பர் செருப்புகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.



அலங்கார வேலைப்பாடுகள் அதிகம் இல்லாத, எளிய பாணியில் அமைந்த நவீன மேஜை நாற்காலிகள் சத்தத்தைக் கட்டுப்படுத்த உதவா.

படம்: மேற்கு ஜெர்மானிய ஸ்தாபனம் தயாரித்த கவர்ச்சிகரமான மேஜை, நாற்காலிகள். (யூ. பி. எஸ்.)

தெருக்களில் தூசி எழாதிருக்கக் கற்களைப் பதித்து வைப்பதும் உண்டு. ஆக சத்தம் எப்படி இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். இக்காலத்தில் சாலைகளில் சத்தம் அதிகம் என்று நினைப்பவர்கள் பழங்காலத்திலும் இதேபோல்தான் இருந்தது என்ற நினைப்பில் கொஞ்சம் ஆறுதல் பெறலாம்!

— மைக்கேல் ஆர்னல்டு

காணிக்கை

அத்தியாயம் 23



முக்கியமான நகரங்களையும் நடுவில் உள்ள ஊர்கள், சிற்றூர்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருந்த பாஸ்கரனுடைய நெஞ்சில் வாட்டமும் வேதனையும்தான் மிஞ்சி நின்றன. நிலமும் நீரும் வஞ்சனையில்லாமல் வழங்கத் தயாராகக் காத்திருந்தன. ஆனால், பயன்படுத்திக் கொள்வோரைத் தான் காணோம். பயன்படுத்திக் கொள்ள முன்வருபவர்களுக்கு ஆயிரம் தடைகள்.

இதற்கு யாரைக் குற்றம் சொல்வது, எதைக் குறை சொல்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை. அறியாமை, அசட்டை, அதைரியம் குடிகொண்ட மக்கள் ஒருபுறம், இவற்றையே மூலதனமாகக் கொண்டு காலம் கடத்தி வரும் அரசு ஒருபுறம். மொத்தத்தில் எங்கும் மோசமான இழிநிலை.

உழைக்கச் சரியான வழியும் வாய்ப்பும் இல்லை. தகுதிக்கும் திறமைக்கும் சரியான மதிப்பும், ஆதரவும் இல்லை. ஏமாற்றுப் பிழைப்புக்குத்தான் எல்லா வசதிகளும் இருந்தன. சுரண்டல், அநீதி, வஞ்சம், ஊழல், பிளவு, பித்தலாட்டம் — எல்லாத் துறைகளிலும் நிறைந்து கிடந்தன.



''பொதுவா போன ஊர்களிலே என்னெல்லாம் பார்த்தாய், ஊர் எல்லாம் எப்படி இருந்தது?'' என்று அவனை விசாரிக்க வந்த காமேசுவரன் கேட்டான்.

''பொதுவாச் சொல்லணுமானா எல்லா ஊரும் கொடி கட்டிப் பறக்கிறதைப் பார்த்தேன். நமக்குள்ளே எத்தனை வேற்றுமைகளும் பிரிவினைகளும் அநியாயங்களும் உண்டோ, அத்தனை தினுசான கொடிகள், மனுஷனுக்கு அரசியலைத் தவிர வேறே பிழைப்பே இல்லேன்னு எல்லாக் கொடிகளும் படபடன்னு பறக்கின்றன. வேறே என்ன சொல்றதுன்னே எனக்குத் தெரியல்லே!'' என்றான் பாஸ்கரன்.


''கொடிகளுக்கும் சுவரிலே ஒட்டியிருக்கிற போஸ்டர்களுக்கும் அங்கெல்லாம்தான் போகணுமா — இங்கேயே பார்க்கலாமே!'' — சிரித்தான் காமேசுவரன்.

''நம்ம நாட்டுக்கு என்ன குறைச்சல்னு நினைக்கிறே நீ? எங்கே பார், எப்ப பார், ஒரே விழா மயம்தான். கொண்டாட்டங்கள்தான்! ஆண்டு விழா, பிறந்தநாள் விழா, இறப்பு விழா, விளையாட்டு விழா, அந்த விழா, இந்த விழான்னுட்டு எத்தனை தெரியுமா? இதைப் போய் ஏழை நாடு, மோசமான நாடுன்னு யாராவது சொல்லலாமா? ஒரு படி அரிசி நாளைக்கு ஒன்பது ரூபாய்க்கு வித்தால்கூட அதுக்கும் ஒரு விழா எடுக்க நாம தயார். கேக்கறதுக்கு எந்த நாதியும் இல்லேயென்னு குறையா சொல்றே?''

''மூணு ரூபாய்க்கு விக்கிற அரிசி ஒன்பது ரூபாய்

வித்தால், ஜனங்களுக்கு வாங்கற சக்தி அதிகமாயிருக்குன்னுதானே அர்த்தம்! அதுக்கு விழாகொண்டாடறதிலே என்ன தப்புன்னு சில பேர் கேக்கலாமே!''

''கேக்கலாம். நாமும் வாயை மூடிக் கொண்டு வேடிக்கை பார்க்கலாம். ஒரு தப்பும் இல்லே. ஊரிலே போதுமான அரிசி இல்லேங்கறதைவிட ஆனந்தப் படறதுக்கு வேறே என்ன இருக்கு? ஜனங்களுக்கு வாங்கற சக்தி அதிகமா யிருக்கோ, என்னமோ நமக்குத் தெரி யாது. பட்டினி கிடந்து திண்டாடற தைத் தாங்கிக்கிற சக்தி அதிகமா யிருக்கு. அதுவரையிலே நிச்சயம். உழைக்க வேலே செய்யறவனுக்கு அந்த ஒன்பது ரூபாய் கிடைச்சுடப் போறதா? எல்லாராலும் கொடுத்துடத்தான் முடி யுமா? இரண்டும் இல்லே. நிரந்தரப் பட்டினிதான். யாரோ சொன்னானும். அம்பது கார் ஓடின ஊரிலே இப்ப ஐந்நூறு கார் ஓடறதே, இது வளர்ச்சி யில்லேயான்னு! யார் இல்லேன்னது? வளர்ச்சிதான். அம்பது குடிசைகள் இருந்த ஊரிலே ஐம்பதாயிரம் குடிசைகள் இருக்கிறது எவ்வளவு பெரிய வளர்ச்சி! அந்தக் குடிசைக்குக்கூட வழி யில்லாமே இன்னொரு ஐயாயிரம் பேர் பிளாட்பாரத்திலேயும், நடுத் தெருவி லேயும் காலம் தள்ளறது அதைவிடப் பெரிய வளர்ச்சிதான்!''



''எல்லாத்துக்கும் காரணம், ஜனப் பெருக்கம்தாம்பா! இந்தப் 'பாபுலேஷன் பிராப்ளம்' இருக்கிற வரைக்கும் இதெல்லாம் தீராது... நான் அப்புறம் வந்து பேசிக்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனான் காமேசுவரன்.

பாஸ்கரனுடைய உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. யாருக்கும் பதில் சொல்லாமல், யாருடைய தயவையும் எதிர்பாராமல், சொந்தமாக எதை யாவது செய்து வெற்றிச் சிகரத்தில் ஏற வேண்டும் என்று அவனுக்கு ஒரு வேகம் உள்ளூறக் கனிந்து கொண்டேயிருந்தது. டெலிவிஷன் ரிஸீவர் செட்டைக்கூட வெறும் குடிசைத் தொழில் ரீதியில் செய்து குவிக்கிற ஜப்பானியர்களைப் போல ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும் என்று அவன் ஒவ்வொரு நாளும் கனவு கண்டு வந்தான். அமெரிக்காவில் டி. வி. கவர் செட் பிரிவில் வேலை செய்து அவனுக்கு முழு ஞானமும் அநுபவமும் இருந்தன. இன்னொரு பக்கம் அவனும் அவன் நண்பன் ஹரி நாராயண் குப்தாவும் கம்ப்யூட்டர் யந்திரங்கள் செய்வதற்கான 'ப்ளூபிரிண்ட்' தயாரித்து வைத்திருந்தார்கள். ஆனால் இதற்கெல்லாம் பெருத்த மூலதனமும் அளவற்ற செல்வாக்கும் படைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியத் தொழில் அமைச்சகத்தின் அநுமதியும் ஆதரவும் பெற முடியும். ஹரி நாராயண் குப்தாவின் கடிதப் போக்குவரத்தே இதற்குச் சாட்சியாக இருந்தது: பத்தாம்பசலி நிர்வாக யந்திரத்தின் அதிகார மனப் போக்கைத்தான் காட்டியது. இந்தப் பிற்போக்கு யந்திரத்தை வைத்துக் கொண்டு எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டுத்தான் என்ன பிரயோசனம்? கற்பனா சக்தியோ, காலத்துக்குத் தேவையான சுறுசுறுப்போ இல்லாமல் நாட்டில் வளர்ச்சியோ, வேலை வாய்ப்புக்களோ எங்கிருந்து வந்து குதிக்கும்?

இருந்தாலும் வேறு வழியில்லாமல் அவன் தன் நண்பனுடைய கடிதப் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்ததோடு, மோட்டார் கார்கள் செப்பனிடும் சிறிய தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கினான். அவனால் முதலில் இதைத்தான் செய்ய முடிந்தது. ஆனால் அமெரிக்கப் பாணியில் அதை நிறுவியிருந்தான்.


எல்லாருக்கும் இது கேலியாக இருந்தது என்பது அவனுக்குத் தெரியும். காமேசுவரன் கூடப் பரிகாசமாகப் பேசினான்.

''எந்தத் தொழிலாய் இருந்தாலும் சொந்தத் தொழில் இல்லையா? என் 'ஸப்போர்ட்' என்னிக்கும் இருக்கும். என் நண்பர்களுடைய 'ஸப்போர்ட்'டும் கிடைக்கிறப்பலே நான் பார்த்துக்கிறேன். வேறே எந்த உதவி வேணும்னாலும் நான் செய்யத் தயார்!'' என்றான் காமேசுவரன்.

''ரொம்ப நன்றி'' என்றான் பாஸ்கரன், தன் கையிலிருந்த தபால் ஒன்றைப் பிரித்துக் கொண்டே.

யாமினியின் கடிதம் அது. அவளிடமிருந்து வந்த மூன்றாவது கடிதம். அவளைப் போலவே ஒரு தனி அழகு பொருந்தியது அவள் பேச்சு; பேச்சைப் போலத்தான் இருந்தது எழுத்து. எழுத்துக் கூடவா இசை மாதிரி ஒலிக்கும்; இனிக்கும்? இதயத்துக்குள்ளே போய் எழிற் கோலம் எல்லாம் செய்யும்? கடிதம் கனத்தது. அதைப் படிப்பதை விடப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம் போலிருந்தது.

காமேசுவரனுக்கு அவன் மூன்று நான்கு விதங்களில் கடமைப்பட்டிருந்ததாகத் தோன்றியது. மாத அலவன்ஸ், கார், ஊர்ப் பயணம் போய் வந்ததுக்குப் பணம் — இவ்வளவும் பாஸ்கரன் எதிர்பாராமலே அவன் கொடுத்திருந்தான். இன்னமும் அவன் வேண்டியதைச் செய்யத் தயாராக இருந்தான். ஆனால் எல்லாம் எதற்காக என்று யோசிப்பதற்குப் பெரிய கற்பனா சக்தி வேண்டியதில்லை. இந்தத் தொகை முழுவதையும் திருப்பிக் கொடுத்து, இதற்கு மேலும் வசதிகள் செய்து கொடுக்க, பியர்ஸன் இந்தியா நிறுவனம் காத்திருந்தது. முதல் நாள் சாயங்காலம் கூட இளம் விஞ்ஞான இஞ்ஜினியர்கள் ஊனப்பில் பியர்ஸன் வைத்தியநாதனும் கோவிந்தராஜுவும் அவனைப் பார்த்து இந்தக் கோரிக்கையைத் தெரிவித்திருந்தார்கள். பாஸ்கரன் அவர்களிடம் சிரித்து மழுப்பி விட்டான். அவர்களும் பாஸ்கரனுடைய 'ஆட்டோமோபைல் இன்டஸ்டிரியல் கன்செர்ன்ஸ்' என்ற புதிய ஒர்க்ஷாப்புக்குத் தங்களாலான ஆதரவையும் உதவியையும் செய்வதாகச் சொன்னார்கள். இதெல்லாம் காமேசுவரனுக்கு அப்போதே எட்டி யிருக்கும். என்ன பேச்சு நடந்தது என்று வரி விடாமல் அவனால் திருப்பிச் சொல்லமுடியும். அவன் துப்பறியும் இலாகா தலைமையில் இருக்க வேண்டியவன். தட்டுக்கெட்டுப்போய்த் தொழில் துறை இன்ஜினியராக இருக்கிறான். அவன் எப்படியிருந்தால் என்ன? அவனுக்குப் பயம், பாஸ்கரன் எங்கேயாவது தன் உதவியை மறுத்துவிட்டு, பியர்ஸன் இந்தியா பக்கம் சாய்ந்து விடுவானோ என்று. அதனால்தான் இன்னும் என்ன உதவிகள்



''ஐயோ பாவம்! அவர் அப்ராண்டிஸ் வாத்தியாருடா! நாலும் மூணும் எட்டுன்னு கூடச் சொல்லித் தரத் தெரியலே!''

வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பதாக ஓடி ஓடி வருகிறான். இல்லா விட்டால் அவனுக்கு என்ன தலையெழுத்தா, அவன் பேட்டிக்கு ஐம்பது பேர்கள் காத்திருக்கும்போது இவனிடம் வருவதற்கு?

பாஸ்கரனுக்கு இந்தப் போட்டி உள்ளூறச் சிரிப்பாக இருந்தது. பொல்லாப்புத்தேடிக்கொள்ளாமல் இருக்கிறபடி இருந்து விட்டுப் போவோமே என்று இருந்தான்.

வெறும் ஓர்க் ஷாப் மாதிரி தொடங்கியுள்ள தொழிற்சாலை மூன்றே மாதங்களில் சில்லறை உபகரணங்களை உற்பத்தி செய்கிற நிலைக்கு வந்து விடும். அடுத்த சில மாதங்களுக்குள் வெளி நாட்டையே நம்பிக் கொண்டிருக்க வேண்டிய பகுதிகளைக்கூட அவனால் இங்கேயே உருவாக்க முடியும், ஆடம்பரமோ, படாடோபமோ இல்லாமல்.

இந்த லட்சியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இதே நேரத்தில் இதற்கு உரமும் ஊட்டமும் தருவது போல, அவனுடைய மனம் யாமினியைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தது. அவனையும் மீறி அவள் நினைவு திரும்பத் திரும்ப வருவதைப் பார்த்து அவனுக்கே திகைப்பாக இருந்தது. இவ்வளவு தூரம் அவள் தன் மனத்தில் எப்போது இடம் பெற்றாள் என்று அவனுக்கே புரியவில்லை. இதற்கு முன்பு எப்போதுமே அநுபவித்தறியாத புதிய உணர்வுகள் அவளைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் தோன்றிக் கொண்டிருந்தன. அவளிடமிருந்து கடிதம் வந்ததால் நெஞ்சு கனத்தது. எல்லாக் கடிதங்களையும் படிப்பது போல் சர்வசாதாரணமாகப் படிக்கிற தெம்பு அவனுக்கு இல்லை. சாப்பாடெல்லாம் ஆனபிறகு தனியாக உட்கார்ந்து நிதானமாகப் படிக்க வேண்டும் என்று அதை டைரிக்குள் எடுத்து வைத்துக் கொண்டான்.

அத்தியாயம் 24

பார்வதி அம்மாளின் முகத்தில் என்றுமில்லாத கவலை தோய்ந்திருப்பதைக் கண்டு பாஸ்கரன் திடுக்கிட்டான். கொஞ்ச நாட்களாகவே அவளிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. திடீரென்று தனக்குத் தள்ளாமை வந்து விட்டது போல் அடிக்கடி அலுத்துக்கொண்டாள்.

''வர வர எனக்குக் கண்ணும் தெரியமாட்டேங்கறது; மண்ணும் தெரிய மாட்டேங்கறது. உளுத்தம் பருப்பா, பயத்தம்பருப்பான்னு ஒண்ணும் புரியல்லே. எத்தனை நாளைக்கு நான் இன்னும் தனியாக் கிடந்து திண்டாடணுமோ, தெரியலியே!'' என்று முணுமுணுக்கத் தொடங்கினாள்.

''ஒண்ணும் கவலைப் படாதேம்மா. சமையலுக்கு யாரையாவது ஏற்பாடு செய்துட்டாப் போச்சு. உனக்கு மட்டுமென்ன, உளுத்தம் பருப்புக்கும் பயத்தம்பருப்புக்கும் வித்தியாசம் தெரியாதபடிக்குத்தான் கடையிலே கொடுக்கிறாங்க இப்பல்லாம். அவன் என்ன சொல்லிக் கொடுக்கிறானே, அந்தப் பருப்புன்னு வெச்சுக்க வேண்டியது தான்!'' என்று விளையாட்டாகச் சொன்னான் ஒரு நாள்.

''விளையாட்டுப் பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே. சமையலுக்கு ஆள் வெச்சுக்கிறதாம். சின்னப் பொண்ணை வச்சிண்டாலும் சரிப்படாது. வயசானவளாகிப் பார்த்து வெச்சிண்டாலும் சரிப்படாது. சிறிசா இருந்தால் அதுக்கும் சேர்த்து மூணு நாளைக்கு நான் சமைச்சுப் போடணும். வயசானவளா யிருந்தால் வீட்டுக்குப் போறபோதெல்லாம் அடிமடியிலே காப்பிக் கொட்டையைச் சுருட்டிண்டு போறாளா, சர்க்கரையைக் கட்டிக்கிண்டு போறாளான்னு அவாளையும் சேர்த்துப் பார்த்துக்க வேண்டியது தான்!''

பார்வதியம்மாள் எதைச் சாக்கிட்டுக் கொண்டு இப்படியெல்லாம் பேசுகிறாள் என்று பாஸ்கரனுக்குத் தெரியும். அதைத் தெரிந்ததாகக் காட்டிக்கொண்டால் வம்பு என்று சிரித்து மழுப்பி விட்டுப் போய்க் கொண்டிருந்தான். இன்று வேறு என்னவோ தெரியவில்லை. கண்கள் கலங்கி யிருந்தன.

''என்னம்மா விஷயம்?''

''உங்க மாமாவுக்கு உடம்பு சரியில்லையாம். நர்ஸிங் ஹோமிலே சேர்த்திருக்காம். இப்பத்தான் ஆள் வந்து சொல்லிட்டுப் போறான்!''

''அதென்ன திடீர்னு? எந்த நர்ஸிங் ஹோமிலே?''

''அவா காலனிக்கிட்டே இருக்கே, அங்கேதானும். ஆனால் பயம் ஒண்ணும்

இல்லியாம். நீ முதல்லே சாப்பிட்டுட்டு என்னைக் கொண்டு போய் விட்டுடு. துணைக்கு நான்தானே போய் இருந்தாகணும். வேறே யார் இருக்கா மனுஷாள்?'' என்று சொல்லும்போதே பார்வதியம்மாளின் குரல் கம்மியது.

அஜிதாவைப் பற்றிப் பேச்சு எடுக்கவே பாஸ்கரனுக்கு யோசனை. வலிய வந்த லட்சுமியை உதைத்துத் தள்ளுவது போல் வேண்டாம் என்று கைநழுவ விட்டு விட்டானும். அம்மாவுக்கு அந்தக் குறை முதலில்கூட அவ்வளவாக இல்லை. இப்போது இன்னும் அதிகமாகவே இருந்தது. அதை அவள் வாயை விட்டுச் சொல்வதில்லேயே தவிர, உள்ளூற இருந்தது. அஜிதாவை விட அழகான பெண்ணும் அண்ணவை விடப் பெரிய இடமும் அவனுக்கு எங்கே வரப் போகின்றன என்ற ஏக்கம் அவளுக்கு உண்டு. வீரசோழபுரத்துக்குப் போயிருந்த போது மன்னியிடம் இதைச் சொல்லியிருக்கிறாள். பாவம். பெற்ற மனத்துக்கு இந்தக் கவலை யெல்லாம் இல்லாமல் போகுமா? அதற்கேற்றாற் போல் இன்றுவரை அவனுக்குப் பெண் கொடுக்கிறேன் என்று யாருமே வராதது அவளுக்குப் பெரிய விசாரமாய் இருந்தது. அமெரிக்காவுக்குப் போய்விட்டு வந்த பிறகு அவனுக்குப் பெரிய பெரிய இடத்திலிருந்தெல்லாம் பெண் கொடுக்க வருவார்கள் என்று அவள் எதிர்பார்த்திருந்தாள். 'ஒன்றையும் காணுமே! அவன் திரும்பி வந்திருப்பதே ரொம்பப் பேருக்குத் தெரியாமல் இருக்குமோ?'

பாஸ்கரன் அம்மாவிடம் இவ்வளவெல்லாம் பேசாவிட்டாலும் அவள் என்ன நினைக்கிறாள் என்று கூடவா அவனுக்குத் தெரியாது?

கஸ்தூரி நர்ஸிங்ஹோமில்தான் நாகநாதன் நினைவின்றிப் படுத்திருந்தார். ஆபீஸில் தபால் பார்த்துக் கொண்டிருந்தாராம். டிரங் கால் ஒன்று வந்ததாம். அதைப் பேசி முடிப்பதற்குள் வயிற்றைப் பிடித்துக் கொண்டு மேஜையின் மீதே சாய்ந்து விட்டாராம். இதையெல்லாம் பாஸ்கரன் விசாரித்துத் தெரிந்து கொண்டான். பார்வதியம்மாள் கொஞ்சம் கூடப் பதற்றப்படாமல், அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல் நெஞ்சுத் துணிவோடு நடந்துகொண்டதைக் கண்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அத்தகைய நெஞ்சுரம் தன்னிடமும் இருப்பதற்குக் காரணம் இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. மனம் இடிந்து தளர்ந்து போகாத குணம். நாகலக்ஷ்மி மாமி சொல்வது போல் உணர்ச்சி மரத்துப் போன நெஞ்சழுத்தம் அல்ல. உண்மையில் அம்மாவிடம் அவனுக்கு அதிக மதிப்புத்தான் உண்டாயிற்று. இந்த மாதிரி சமயத்தில் இடிந்து போனால் அப்புறம் இவள் எதற்காகத் துணைக்கு அங்கே இருப்பது? எல்லோரையும் பயமுறுத்திக் கலவரப்படுத்தவா?

''இன்னும் ரெண்டு டாக்டர்கள் வந்து பார்க்கணும். அப்புறம் அவசியமானல் ராத்திரியே ஆபரேஷன் நடந்தாலும் நடக்கும்!'' என்றார் நாகநாதனைப் பரிசோதித்த டாக்டர்.

பார்வதியம்மாள் இதைக் கேட்ட பிறகு தனியாக அவனைக் கூப்பிட்டு, ''அஜிதாவை டிரங்கிலே கூப்பிட்டு இதைச் சொல்லேன்! ஆபரேஷன் செய்யணும்னு அவளுக்குத் தெரிய வேண்டாமா?'' என்றாள்.

பாஸ்கரன் நம்பரை விசாரித்தபோது அஜிதாவுக்குச் செய்தி அனுப்பியாகி விட்டது என்று சொன்னார்கள்.

''ஆனல் சரி; வரட்டும். நீ போய் உன் வேலையைப் பார். ராத்திரி வந்தால் போதும்'' என்று அவனை அனுப்பி வைத்தாள் பார்வதி யம்மாள்.

மாமாவை நினைத்துப் பார்க்கும் போது அவனுக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தன. கட்டில் கொள்ளாமல் அவர் படுத்திருந்தாலும் குழந்தையைப் போன்ற உள்ளம் படைத்தவர். ராஜ நடை; ராஜ பார்வை! நெருங்கிப் பார்த்திருப்பவர்களுக்குத்தான் தெரியும், அவருக்கு எத்தனை பூஞ்சை மனசு என்று. இல்லாவிட்டால் நாகலக்ஷ்மி மாமி அவரை விருப்பம் போல் ஆட்டி வைத்திருக்க முடியுமா? மனைவிக்கு அடங்கிப் போவது கூட ராஜ கம்பீரமாகத்தான் இருக்கும்.

''எப்படியாவது போ!'' என்று எது கையிலிருந்தாலும் தூக்கிவிட்டெறிந்து விட்டுப் போய்விடுவார். அவர் போவதைப் பார்த்தால் பயமாகத்தான் இருக்கும். ஆனல் படுக்கையை விட்டுக் காலையில் வரும்போது பார்க்க வேண்டுமே; ஆட்டுக் குட்டியேதான். ராஜா வீட்டு ஆட்டுக்குட்டி!

எப்படியாவது அவர் உயிர் பிழைத்து எழுந்தால் போதும் என்று வேண்டிக் கொண்டே போனான் பாஸ்கரன். இரவு பார்க்க வந்தபோதும் வேண்டிக் கொண்டே வந்தான்.

வந்ததும் வராததுமாக, ''அம்மாவே தேவலேன்னு பண்ணிப்புட்டாடா, அந்த அஜிதா! 'நான் வந்து என்ன பண்ணப் போறேன்? நீங்க இருக்கிறது போதாதா? பார்த்துக்குங்கோ'ன்னு போனை வச்சுட்டாளாம். நானும் என்னமோன்னு நினைச்சேன். எல்லாத்தையும் தூக்கி அடிச்சுட்டு


அமரர் கல்கி
எழுதிய
மோகினித் தீவு
சிறு நாவல்
ஜனவரி 17
பொங்கல் மலரில்
ஆரம்பமாகிறது



தென்னாப்பிரிக்காவில் நிறவெறி குறைவதன் அடையாளமாகச் சிறிது காலத்துக்குமுன் வெள்ளையருக்கும் ஆப்பிரிக்கருக்கும் ஒரே குளிக்குமிடம், சுகாதார இடங்களை ஒதுக்கினார்கள். இப்போது மேலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது. இனி வெள்ளையராயினும் சரி, ஆப்பிரிக்கராயினும் சரி, கொலைகாரக் கைதிகள், ஒரே இடத்தில் தூக்கிலிடப்படுவர்......!

-- நேஷ்

மணலுக்குப் பதில் யாராவது அரிசிகொடுப்பார்களா? ஜப்பான் 1967ல் கேரளா மணலுக்குப் பதில் அரிசி கொடுத்தது. காரணம் -- கேரள மணலில் தோரியம் இருக்கிறது.

'ஈவ்ஸ் வீக்லி' -- 'நாயக்'



இது'' என்று சொல்லி வாயடைத்துப் போனாள் பார்வதியம்மாள்.

நல்ல காலம்; ஆபரேஷன் அவசியமில்லை என்று டாக்டர்கள் முடிவைக் கேட்டு ஆறுதல் அடைந்தான் பாஸ்கரன். அம்மாவை அங்கேயே விட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு தான் அவனுக்கு யாமினியின் கடிதம் நினைவுக்கு வந்தது.

முதல் கடிதத்தில் அவள் அன்று ஹாஸ்டலில் நடந்ததையெல்லாம் எழுதியிருந்தாள். கல்லூரிப் படிப்புக்கே தலைமுழுகிவிடும் நிலைமை வந்துவிட்டதாம். தாயில்லாப் பெண் என்று செல்லமாக என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுக்கும் அவளுடைய அப்பா எதைச் சொன்னாலும் காதிலே போட்டுக்கொள்ளாமல், இத்தனை கண்டிப்பாக இருப்பார், பேசுவார் என்று அவள் துளிக் கூட நினைக்கவில்லையாம். 'படிச்சது போதும்; பெட்டியை எடுத்துக்கிட்டு, உடனே கிளம்பு' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லி விட்டாராம். கடைசியில் ஹாஸ்டல் வார்டனும் கல்லூரி பிரின்ஸிபாலுமே தலையிட்டு, 'இது தான் கடைசி வருஷப் படிப்பு, அதைப் பாதியிலே கெடுக்க வேண்டாம். முடிச்சுடட்டும். நாங்க பார்த்துக்கறோம்' என்று பரிந்து பேசி, அவரைச் சமாதானப்படுத்தி ஊருக்கு அனுப்பினார்களாம். 'அவர் பிடிவாதமாக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? அவரை உங்களிடமே அழைத்து வந்திருப்பேன்!' என்று அதை முடித்திருந்தாள்.

இரண்டாவது கடிதத்தில்: பாஸ்கரனிடமிருந்து பதில் கடிதம் வந்த பிறகு ஹாஸ்டலில் அவள் வகுப்பு மாணவிகளிடையே இதே பேச்சாகத் தான் இருக்கிறதாம். அவள் சகுந்தலையாம். அவன் துஷ்யந்தனும். காதலின் சின்னமாகக் கணையாழியைக் கொடுத்திருக்கிறானும். அதைக் கெட்டுப் போகாமல் பத்திரமாக வைத்திருக்க வேண்டுமாம். நாளைக்கு துஷ்யந்த மகாராஜா கேட்டால் அடையாளமாக அதைக் காட்ட வேண்டுமாம். இல்லாவிட்டால் இந்தத் துஷ்யந்த மகாராஜா அவளை நம்பாமல் மறுபடியும் அமெரிக்கா போய்விடுவாராம். என்ன சொன்னாலும் கேட்காமல் இப்படியெல்லாம் பேசுகிறார்களாம். அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லையாம். 'நீங்கள் ஏதாவது ஒரு யோசனை சொல்லுங்களேன்!' என்று அதை முடித்திருந்தாள்.

மூன்றாவதாக அன்றைக்கு வந்த கடிதம் இன்னும் கொஞ்சம் சுவாரசியமாக இருந்தது. அவன் அவளுக்கு எழுதியிருந்த பதில் கடிதத்தை அவளுடைய தோழிகள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு, அவளையே உரக்கப் படிக்கச் சொல்லி வற்புறுத்தினார்களாம். அவள் அப்படிப் படிக்க மறுக்கவே, அதைப் பிடுங்கி, அவர்களில் ஒருத்தியே உரக்கப் படித்தாளாம். 'கேளுங்கடி, நம்ம துஷ்யந்த மகாராஜா குற்றாலத்து அருவியிலே கையைப் பிடித்த காதலிக்குச் சொல்லியிருக்கிற யோசனையை! அவர் எழுதியிருக்கார்: பரீட்சை முடிகிற வரைக்கும் பல்லைக் கடித்துக் கொண்டு தோழிகள் பரிகாசத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமாம். வேறு எந்த யோசனையும் சொல்லத் தெரியல்லியாம். பரீட்சை முடிந்து ஊருக்குப் போன பிறகு வந்து சந்திக்கிறாராம். எதுக்காகச் சந்திக்கப் போறாரோ, தெரியல்லே! அவள் தோழிகளிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறாளாம்; அவர் வெளியிலே சொல்லிக் கொள்ள முடியாமல் கிடந்து திண்டாடுகிறாராம். அதுதான் வித்தியாசமாம்!' என்று அதில் இல்லாததையெல்லாம் சேர்த்துப் படித்தாளாம். அவளால் ஹாஸ்டலில் இருக்கவே முடியவில்லையாம். பரீட்சை மட்டும் நடுவில் இல்லாவிட்டால் இங்கேயே பறந்து வந்து விடுவாளாம். 'நீங்கள் என்ன நினைத்தாலும் சரிதான். உங்களை எப்போது சந்திக்கப் போகிறேன் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன்!' என்று முடித்திருந்தாள்.

பாஸ்கரனுக்கு அதற்கு மேல் தூக்கம் பிடிக்காமல் அதையே திரும்பத் திரும்பப் படித்து உருப் போட்டுக் கொண்டிருந்தான். (தொடரும்)


அவனுக்கு இளமையிலேயே கற்பியுங்கள்
தவறாமல் போர்ஹான்ஸ் பற்பசையால் பல் துலக்கினால், ஈறு உபாதைகளையும் பற் சிதைவையும் தடுக்கலாம்.
ஏனெனில், போர்ஹான்ஸ் பற்களையும் ஈறுகளையும் நன்கு பராமரிக்கிறது. இது பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை. இதில் ஈறுகளுக்கான தனிப்பட்ட மருந்துப் பொருள்கள் அடங்கியுள்ளன.
ஈறு உபாதைகளையும் பற் சிதைவையும் தடுக்கும் சிறந்த வழி, இரவிலும் காலையிலும் தவறாமல் போர்ஹான்ஸால் பல் துலக்குவது. இந்த முக்கியமான கற்பழக்கத்தை உங்கள் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்க இதுவே உற்ற தருணம். ஆமாம்; இப்போதே—அவன் கற்கத் துடிக்கும் வயதில்! எனவே, இன்றே அதைத் துவக்குங்கள்.
போர்ஹான்ஸ் பற் பராமரிப்பு பற்றிக் கற்பிக்க இதுவே தக்க வயது!
போர்ஹான்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை
இலவசம்
பெயர்
வயது
முகவரி
K6

22. சைபீரியாவில் ஒரு சிந்தனையாளர்

ரஷ்யாவின் வளர்ச்சியையும், ரஷ்யப் புரட்சிக்கு முன் மன்னர் ஆட்சியில் ரஷ்ய நாடு அடைந்திருந்த சீர்குலைவையும், புரட்சிக்குப் பிறகு ரஷ்யா அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும் வாய் ஓயாமல் சோனியா சொல்லிக்கொண்டேயிருந்தாள். அடிக்கடி பேச்சுக்கு நடுவே முதலாளித்துவ நாட்டின் சீர்கேட்டையும் பற்றி ஏசுவாள். அன்னு சோனியாவோடு ரஷ்யாவின் பல பாகங்களில் சுற்றினான் சிவராமன். சென்ற இடங்களிலெல்லாம் பாட்டாளிகள் அவனுக்குக் கொடுத்த வரவேற்பும், அவர்கள் காட்டிய பரிவும் சிவராமனின் கண்களைக் கலங்கச் செய்து விட்டன. அவனுடைய மனக் கண் முன்னே அகில உலகமும் பாட்டாளி மக்களின் ஆட்சிக்குள் வருவதுபோல் தோன்றியது. கம்யூனிஸ சித்தாந்தமும், கட்சிக்காரர்களும் ரஷ்ய மண்ணில் சாதித்திருப்பதைச் சிவராமன் உணர்ந்தபோது, சிவராமனின் மனம் கட்டுக்கடங்காமல் பொங்கியது. ஆனால் அன்னுசோனியாவுடன் செல்லாமல் சில சமயங்களில் அவன் தனியாகச் சென்று சுற்றிப் பார்த்தபோது, ஏன் மக்கள் அவனோடு பேசத் தயங்கினார்கள் என்பது தான் அவனுக்குப் புரியவில்லை. அந்நிய நாட்டாரைக் கண்டாலே முகம் சுளித்து ரஷ்ய மக்கள் ஒதுங்குவதைக் கண்டான்.

உலகக் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாடு முடிவடைந்ததும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், ரஷ்ய நாட்டில் உள்ள முக்கிய பகுதிகளைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள். எந்தெந்த இடங்களுக்கெல்லாம் அவர்கள் சென்று பார்க்க வேண்டும் என்பது பற்றிய பட்டியலை ரஷ்ய அரசாங்கம் தயாரித்துக் கொடுத்திருந்தது. ஐந்து ஐந்து பேர்களாகச் சேர்ந்து பல குழுக்களாகப் பிரிந்து நாட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். சிவராமனுடைய குழுவுக்குத் துணையாக அன்னு சோனியா சென்றாள். வால்கா நதிக் கரையை ஒட்டிய பல தொழிற்கூடங்களுக்கும், விவசாயப் பண்ணைகளுக்கும், தானியக் கிட்டங்கிகளுக்கும் அழைத்துச் சென்றாள்.


சிவராமன் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்தான். அவனோடு வந்த மற்ற இந்தியப் பிரதிநிதிகள் ரஷ்ய முன்னேற்றத்தையும், பாட்டாளி வர்க்கத்தினரின் உழைப்பையும் கண்டு வியந்து கொண்டிருந்த போது, சிவராமனின் அறிவு மட்டும் அந்தச் சூழ்நிலையில் ஏதோ ஒரு குறை இருப்பதை உணரத் தவறவில்லை. வெளி உலகிலிருந்து ரஷ்ய மக்கள் எவ்வளவு தூரம் பிரிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை அவன் அறிந்தபோது திடுக்கிட்டான். இரண்டு மூன்று இடங்களில் தொழிலாளர் கூட்டங்களில் சிவராமன் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தான். பலர் பல விதமான கேள்விகளைக் கேட்ட போது சிவராமன் மலைத்தான். வெளி உலகைப் பற்றிய ஞானமே இல்லாமல் அவர்கள் இருப்பதையும், உலகத்திலேயே ரஷ்யா ஒன்றுதான் சிறந்த நாடு என்னும் நினைப்பில் இருப்பதையும், ரஷ்யாவைத் தவிர உலகத்திலுள்ள மற்ற எந்த நாடும் கீழானவையே என்னும் கருத்து அவர்கள் மனத்தை நிரப்பியிருப்பதையும், அறிந்தபோது சிவராமன் திகைத்து விட்டான். வெளி உலகம் ரஷ்ய மக்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருப்பதையும், வெளிநாட்டுப் பத்திரிகைகளைக் கூட ரஷ்யர்கள் பார்த்ததில்லை என்பதையும் அறிந்தபோது அவன் உள்ளத்தில் வேதனை தோன்றியது.

ஒரு சமயம் சரடாவ் என்னும் நகரில் தொழிலாளர்கள் அவனுக்கு அளித்த வரவேற்பில் கலந்து கொண்டபோது தொழிலாளர்கள் அவனிடம் பல கேள்விகளைக் கேட்டார்கள். தொழிலாளர்களுக்கு ஆங்கிலம் தெரியாததால் அன்னு சோனியா, மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினாள். ஒரு தொழிலாளி கேட்டார் :

''தோழரே ! இந்தியாவில் பாட்டாளிகளுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன ?''

''அரசினர் நடத்தும் தொழிலகங்கள் பல உண்டு எங்கள் நாட்டில். அவை எல்லா மக்களுக்கும் சொந்தமானவை என்றே கருதப்பட வேண்டும். கூட்டுறவு முறையில் நடத்தப்

போராட்டங்கள்



ர.சு.நல்லபெருமாள்

படும் தொழிலகங்களும் உள்ளன. இவை தவிர தனியார் நடத்தும் தொழிற் சாலைகளும் மிகுதியாக உண்டு!'' என்று விவரித்தான் சிவராமன்.

''ஓ....! அப்படியானால் முதலாளி வர்க்கத்தினருக்குப்] பாட்டாளிகள் இன்னும் அடிமைகளாகத்தான் இருக்கிறார்களா ?'' என்று ஒரு தொழிலாளி ஏளனமாகக் கேட்டுவிட்டுச் சிரித்தார்.

''அப்படி இல்லை. தொழிலாளர்களின் பாதுகாப்புக்குப் போதுமான சட்ட திட்டங்கள் விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றை மீறி முதலாளிகள் நடந்து கொண்டால், வேலை நிறுத்தம் செய்வோம்.''

இதைக் கேட்டதும் கூடியிருந்த தொழிலாளர் அனைவரும் பரபரப்படைந்தனர். கூட்டத்தில் சலசலப்பு தோன்றியது.

''வேலை நிறுத்தமா....?'' — மிகுந்த வியப்புடன் கூவினார், ஒரு தொழிலாளி. இதுவரையில் கேட்டிராத ஓர் அதிசயத்தைச் செவியுற்றதைப் போன்ற உணர்வில் விழி பிதுங்கி நின்றார் அந்தத் தொழிலாளி.

சிவராமன், இந்திய நாட்டில் தொழிலாளர்களுக்குள்ள உரிமைகளையும், சுதந்திரத்தையும் விரிவாகக் கூறத் தொடங்கினான். ஆனால் அன்று அவன் கூறியவற்றை மொழிபெயர்க்கத் தயங்கினான். பாட்டாளிகள், இந்திய மண்ணில் அநுபவிக்கும் சுதந்திரத்தைப் பற்றிச் சிவராமன்


பிரின்ஸ்
பிளேடு
-சிறகின்
மென்மைபோல்
முக க்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்

விவரித்தவற்றை அன்னு மொழி பெயர்க்கவில்லை.

"தோழர்களே! கூட்ட நேரம் முடிவடைந்துவிட்டதால் நீங்கள் கலைந்து போகலாம். உங்களுடைய வரவேற்பும் உற்சாகமும் இந்தியத் தோழர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது" என்று அன்னு சோனியா கூறியதும் தொழிலாளர்களின் முகங்களில் ஏமாற்றத்தின் அறிகுறி தென்பட்டது. ஆனாலும் அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றார்கள்.

சிவராமனுக்குத் திகைப்பாயிருந்தது. அன்னு மொழிபெயர்க்க மறுத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. 'அயல் நாட்டு விவகாரங்களை இப்படி ரஷ்ய மக்களிடமிருந்து மறைத்து வைத்துத்தான் ஆக வேண்டுமா என்ன?' என்னும் கேள்வி அவன் நெஞ்சில் குறுகுறுத்துக் கொண்டேயிருந்தது.

வேலைநிறுத்தம் செய்யும் உரிமை இந்தியப் பாட்டாளிகளுக்கு உண்டு என்றதும் ரஷ்யத் தொழிலாளர்கள் அடைந்த வியப்பையும் அதிர்ச்சியையும் சிவராமன் உணர்ந்தபோது, அவனுடைய உள்ளத்தில் வேதனை பரவியது. ருஷ்யாவில் சுற்றுப் பயணம் முடிந்து விளாடிவாஸ்டாக் நகரிலிருந்து சிவராமன் சீனுவுக்குப் புறப்படுவதற்கு முந்தின நாள் இரவு, அவனைப் பார்க்க அன்னு சோனியா வந்தாள்.

"ரஷ்யப் பயணத்தின் அனுபவத்தை எடுத்துச் செல்கிறீர்கள். உங்கள் நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் சுபிட்சத்துக்கு இது உதவும்" என்றாள் அன்னு உற்சாகத்துடன்.

"அனுபவம் பெற்றேன். ஆனால் இது எங்கள் நாட்டுக்கு உதவுமா என்பது தான்....." என்று சந்தேகத்தோடு சொன்னான் சிவராமன். இதைக் கேட்டதும் அன்னு சோனியா பதறிப் போய்ச் சன்னல் வழியாக வெளியே பார்த்தாள். பிறகு மெதுவாக எழுந்து சன்னல் கதவுகளையும், வாசற் கதவுகளையும் சாத்தி விட்டு வந்து உட்கார்ந்தாள். அவளுடைய செய்கையின் காரணம் தெரியாமல் குழம்பினான் சிவராமன்.

"நாம் பேசுவது வெளியில் யார் காதிலும் விழ வேண்டாம் என்றுதான் கதவைச் சாத்தினேன்" என்று சொல்லி விட்டுப் பயம் கலந்த வியப்புடன் சிவராமனைப் பார்த்தாள்.

"உங்கள் நாட்டுக்கு வரும்போது மிகுந்த நம்பிக்கையோடும், பலவற்றை எதிர்பார்த்தும் வந்தேன்.... ஆ!...எவ்வளவு உற்சாகத்துடன் வந்தேன்! ஆனால் திரும்பும்போது என் மனத்தில் அமைதி இல்லை" என்றான் அவன். தொடர்ந்து,

"நான் போகும்போது உங்களைப் பற்றிய பசுமையான நினைவுகளைத்தான் எடுத்துச் செல்கிறேன். இத்தனை நாட்கள் என்னோடு வந்து எனக்கு உதவியாயிருந்த உங்களுக்கு நன்றி" என்றான் சிவராமன், கனிவுடன். பிறகு இந்தியாவுக்கு வருமாறு அவளைச் சிவராமன் அழைத்தபோது அவளுடைய கண்கள் கலங்கி விட்டன. அதை மறைத்துக் கொண்டு சிரிக்க முயன்றாள். அவளுடைய சிரிப்பில் உயிர் இல்லை. உள்ளத்தில் உள்ளதைச் சொல்ல முடியாமல் உள்ளேயே ஆழப் புதைத்துக் கொள்கிறாள் என்பதை அவளுடைய பார்வை காட்டிற்று.

மறுநாள் ரஷ்ய நாட்டை விட்டு, விமானத்தில் புறப்பட்டபோது விளாடிவாஸ்டாக் நகர விமான நிலையத்துக்கு அன்னு சோனியாவும் வந்திருந்தாள். அவளை ரஷ்ய மண்ணில் நிறுத்திவிட்டுச் சிவராமன் உயரப் பறந்தபோது, அவளுடைய கண்களில் நீர் தேங்கிப் பளபளத்ததைக் கண்டான். அவளுக்காக அவனுடைய மனம் பரிதவித்தது. ஒரு நண்பனைச் சிறைச்சாலைக்குள் விட்டு விட்டுச் செல்வது போன்ற வேதனை சிவராமனுக்குத் தோன்றியது. விமானத்தின் ஜன்னல் அருகில் இருந்தவாறு அவள் உருவம் மறையும்வரை கையை ஆட்டிக் கொண்டேயிருந்தான்.

சுதந்திரமாக வானத்தில் பறந்து செல்லும் பறவையைக் கூண்டுக்குள்ளிருந்து பார்க்கும் பறவையின் ஏக்கம் சோனியாவின் கண்களில் நிறைந்திருப்பதைக் கண்டு பச்சாதாபப் பட்டான். அவள் உருவம் மறைந்த பிறகும் அவளைப் பற்றிய சிந்தனை, அவனுடனேயே சென்றது.

அவளுடைய உருவம் கவர்ச்சியாக இல்லாவிட்டாலும் அவளுடைய நட்பும் கனிவான பேச்சும், அவனைப் பற்றி அறிவதில் அவள் காட்டிய அக்கறையும் அவனைக் கவர்ந்து விட்டன. ஒவ்வொரு நாளும் மாலையில் அவனை அவனுடைய அறையில் கொண்டு போய் விடும்போது, அவனோடு கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுத்தான் திரும்புவாள்.

தன்னைப் பற்றியும், ஊரில் தனக்காகக் காத்திருக்கும் தாயாரைப் பற்றியும், அவன் கூறியபோது அவள் அக்கறையோடு கேட்டாள். அவனுடைய சொந்த லட்சியங்களையும், ஆசைகளையும் பற்றித் துருவித் துருவிக் கேட்டாள். அவனும் மனம் விட்டு அவளோடு பேசினான். அவளுடைய உருவந்தான் வலுப் பெற்று முறுக்கேறி யிருக்

கிறதே தவிர, உள்ளத்தில் ஒரு பெண்ணுக்குரிய மென்மையும், ஆசாபாசங்களும் நிறைந்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டான்.

ஒரு நாள் மாலை, விளாடிவாஸ்டாக் நகரத்து ஹோட்டல் அறையில் இருவரும் பேசிக் கொண்டிருந்த போது, சிவராமன் அவளுடைய மண வாழ்க்கையைப் பற்றி விசாரித்தான். உடனே அவளுடைய முகத்திலிருந்த மலர்ச்சி மறைந்து சோகத்தின் நிழல் படர்ந்தது. கண்களில் நீர் நிறைந்தது.

''நான் கேட்டதில் தவறு ஏதாவது இருந்தால் மன்னித்து விடுங்கள்'' என்றான் சிவராமன். அவள் ஒரு சோகப் புன்னகையைச் சிந்தினாள்.

''நண்பரே! நான் மணமானவள் தான். ஆனால்.... ஆனால், நான் தனியாகத்தான் இருக்கிறேன்....'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேச முடியாமல் தவித்தாள். தொண்டை அடைத்துக் கொண்டது. தன்னையும் மீறி அழுகை வந்துவிடுமோ என்னும் பயத்தில் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். சற்று நேரம் கழித்துச் சிவராமனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

''அவர், சைபீரியாவில் எங்கோ இருக்கிறார்'' என்று கூறி, பெருமூச்சு விட்டாள்.

''ஓ....!'' — சிவராமன் புரிந்து கொண்டான். அது பற்றிக் கேட்கும் தெம்பு அவனுக்கு இல்லை. ஆனால் மிகுந்த பரிவுடன் அவள் கண்களைப் பார்த்தான். அவளுடைய கண்களில் தெரிந்த ஏக்கம், சிவராமனை உலுக்கி விட்டது.

''அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். எழுத்துச் சுதந்திரம் வேண்டும் என்பதில் தீவிரமாயிருந்தார்....'' என்று கூறிவிட்டு மௌனமானாள். பழைய சம்பவங்களை நினைவில் இழுத்து வைத்துக் கொண்டு வேதனைப்படுவது, அவளுடைய முகத்தில் நன்கு தெரிந்தது. ஒரு பெண்ணின் ஏக்கமும், பாசமும் அவளுடைய கண்களில் பிரதிபலித்தன.

''எனக்கு முரளி என்றொரு நண்பன் இருக்கிறான். பிரபல எழுத்தாளன். அவனுடைய அரசியல் தத்துவம் பற்றிய நூல்கள் வெளிநாடுகளிலும் புகழ் பெற்று விட்டன. எழுத்துச் சுதந்திரத்துக்காக உயிரைக்கூட விட்டுவிடுவான்'' என்றான் சிவராமன்.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள், அன்னா சோனியா.

''உங்களுக்குச் சிநேகிதி யாருமே கிடையாதா?'' என்று கேட்டாள்.

''இருக்கிறாள். என்னோடுதான் படித்தாள். கம்யூனிஸ்ட் கட்சியில் அவளைச் சேர்த்து விட்டேன். இப்போது, கட்சி சம்பந்தமான பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறாள்'' என்றான் சிவராமன், உற்சாகத்துடன்.

''பாக்கியசாலிகளான நீங்கள் இருவரும் இணை பிரியாமல் வாழ வேண்டும்'' என்றாள் அன்னா சோனியா.

அவளுடைய மனம் நிறைந்த ஆசியைப் பெற்றுக் கொண்டுதான் ரஷ்யாவை விட்டுப் புறப்பட்டான் சிவராமன்.

விமானத்துக்குள் சாய்ந்து கிடந்த சிவராமனின் மனத்தில் உற்சாகமில்லை. சைபீரியாவில் எங்கோ ஓர் இடத்தில், அன்னா சோனியாவை நெஞ்சில் சுமந்து கொண்டு தவிக்கும் ஒரு ஜீவனுக்காக அவனுடைய மனம் அழுதது.

அன்பு, பாசம், ஆசை.... பசி, வயிற்றில் மட்டுந்தான் உண்டா....? மனிதனின் உள்ளத்தில் இயல்பாக ஊறும் அன்பும், பாசமும் அர்த்தமற்றவையா? யாரிடமும், எதனிடமும் மனத்தைப் பறி கொடுப்பது கோழைத்தனத்தின் அறிகுறி என்றால், கட்சி சித்தாந்தத்

பொன் விழாக் காணும் திருப்புகழ் சபை

திருப்புகழ் சபை என்ற சமய மன்றம் மதுரையில் ஸ்ரீ மீனாட்சி அம்பிகையின் தெற்காடி வீதியில் ஐம்பது ஆண்டுகளாக இருந்து தர்மம் தழைக்கவும், சமய வளர்ச்சிக்காகவும், மக்களிடையே பண்பு வளரவும் நற்பணிகள் புரிந்து வந்திருக்கிறது. திருப்புகழில் சிறப்பிடம் கொண்ட ஸ்ரீ சாமி அய்யரவர்கள் இச்சபையை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஸ்தாபித்துத் தமிழகமெங்கிலும் பிரசாரம் செய்தார். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள இத்திருப்புகழ் சபையின் பொன் விழா 1971 ஜனவரி 1 லிருந்து 10ந் தேதி வரை பெரிய அளவில் நடைபெறுகிறது. பல பேரறிஞர்களின் உரைகளும், திரு வாரியார் அவர்களின் கந்த புராணப் பிரவசனங்களும் நடைபெறுகின்றன. மதுரைத் திருப்புகழ் சபைக்கு நம் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கேரளா
சந்தன சோப்
உங்களை
விரும்புகிறது



கேரளா சந்தன சோப் உங்களுடைய மேனியை பார்ப்பதற்கு மிக இளமை யாகவும், அழகாகவும் இருக்கச்செய் கிறது. அதனுடைய சுத்தமான சந்தன எண்ணை உங்களுடைய நிறத்தை வெயிலிலிருந்தும் குளிர் காற்றிலிருந்தும் காப்பாற்றுகிறது. அதனுடைய சுத்தமான நறுமணம் மணிக்கணக்கில் உங்களை விட்டு அகலாது.

இது ஒரு

கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,

கோழிக்கோடு-5. ன உன்னத தயாரிப்பு

(இது ஒரு கேரள அரசின் நிறுவனம்)

SISTA'S-KSO-1-1A

சென்னை நகரம் & செங்கற்பட்டுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

Ms. லாலா கோபி கிருஷ்ண கோகுல்தாஸ், 98-A, அரமனைக்காரத் தெரு, சென்னை

இடம் மனத்தைப் பறி கொடுப்பது மட்டும் கோழைத்தனமாகாதா?

விமானம் பீகிங் நகரை அடையும் வரை சிவராமனின் உள்ளம் எண்ணச் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. பீகிங்கை அடைந்ததும், ஓரளவு அன்னுவைப் பற்றிய நினைவிலிருந்து விடுபட்டான்.

அவனை வரவேற்கச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகக் குழுவின் காரிய தரிசிகளில் ஒருவரான சின்போ என்பவர் வந்திருந்தார். விமானத் தளத்திலிருந்து சிவராமன் இறங்கியதும், சின்போ விரைந்து சென்று அவனைத் தழுவிக் கொண்டார். சிவராமன் உற்சாகத்துடன், ''இந்தி — சீனி பாய் பாய்'' என்று கூவினான். சின்போ, அதற்கு மறுமொழி கூறாமல் சிரித்துக் கொண்டார்.

சீன நாட்டில் சிவராமன் ஏழு நாட்கள் தங்கினான். அவனைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டினார், சின்போ. ஹாங்கௌ நகரத்தில் முதல் புரட்சி தொடங்கிய தொழிற்சாலையைப் பார்த்த போது, சிவராமன் உணர்ச்சி வசப்பட்டுக் கண் கலங்கி நின்றான். அந்தத் தொழிற்சாலையின் வாசல் மண்ணைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பல ஆண்டுகளுக்கு முன் முதலில் அந்தத் தொழிற்சாலையில்தான் புரட்சிப் பொறி தெறித்தது. அதைக் கனலாக்கிப் பெருந் தீயாக வளர்த்த குடியரசுத் தலைவர் சன்யாட்ஸென்னின் நினைவுச் சின்னத்தின் முன் மண்டியிட்டபோது, சிவராமனுக்கு உடல் சிலிர்த்தது.

நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று பல தலைவர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு, சிவராமனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

சிவராமனுடைய கற்பனையில் உருவாகியிருந்த சீனாவுக்கும், கண்ணெதிரே தெரிந்த சீனாவுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்த போது திடுக்கிட்டான். கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்துக்குள் வந்துவிட்ட சீன மனித இனத்தின் பூலோக சொர்க்கம் என்று எண்ணியிருந்த சிவராமனின் கண்களில், களையற்ற முகங்களும், பயமும் பீதியும் அப்பியிருந்த பார்வைகளும், எல்லாவற்றுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் அதிகாரிகளின் அச்சுறுத்தும் கண்களும் தென்பட்ட போது, மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளாகி மனம் குழம்பினான். சீனாவின் வளர்ச்சியைப் பற்றிச் சின்போ வாயளாவப் புகழ்ந்துகொண்டிருந்ததைச் சிவராமனின் காதுகள் கேட்டுக் கொண்டிருந்த போது, கண்கள், அந்த மண்ணின் உண்மை நிலையை ஊடுருவிப் பார்த்துப் புரிந்து கொண்டு திணறின. உலக அரசியலில் இன்று பிற நாடுகளை அச்சுறுத்திக்



கீழே விவரிக்கப்பட்டுள்ள கட்டுரைப் போட்டியில் முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப் பெறும் மாணவர்களுக்கு ராஜாஜி தாம் எழுதிய நூல்கள் பலவற்றில் கையெழுத்துப் போட்டு அன்பளிப்பாக வழங்குவார். 'கல்கி'யில் பிரசுரமாகும் இந்தக் கட்டுரைகளுக்கு இக் காரியாலயத்தின் சன்மானமும் உண்டு. **முதல் பரிசு ரூ. 100, இரண்டாவது பரிசு ரூ. 75, மூன்றாம் பரிசு ரூ. 50.**

கட்டுரைப் போட்டி விவரம்:

★ ''உண்மையே வெல்லும்'' என்ற தலைப்பில் கட்டுரையை எழுத வேண்டும்.

★ 'கல்கி'யின் சுமார் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் நலம்.

★ பிரசுரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

★ முடிவு தேதி: டிசம்பர் 31உ.

★ கல்லூரி மாணவ, மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

★ கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

★ ஆசிரியர், கல்கி, சென்னை-31 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

★ உறையின் மீது ''உண்மையே வெல்லும்'' என்று குறிப்பிடவும்.

கொண்டிருக்கும் சீனாவுக்குள் மக்கள், ஆன்மாவை இழந்து விட்டுச் சுதந்திரமின்றி வாழ்ந்து கொண்டிருந்த பரிதாபத்தை உணர்ந்த போது, சிவராமன் திகைத்தான்.

அவன் சென்ற இடங்களிலெல்லாம் மாஸே துங்கின் படங்கள் காணப்பட்டன. அவருடைய சிந்தனைகள் சுவர்களில் எழுதப்பட்டிருந்தன. எல்லோரும் அவருடைய படங்களைக் கண்டதும் தலை வணங்கிச் செல்வதைக் கண்டான். பல சீன நகரங்களில் இடிந்து கிடந்த பௌத்த ஆலயங்களையும், சிதைவுற்றிருந்த பழங்காலச் சின்னங்கள் சிலவற்றையும் கண்ணுற்ற சிவராமனின் மனம் வேதனையுற்றது.

''இதெல்லாம் ஏன் இப்படிப் பாழாகிக் கிடக்கின்றன? புதுப்பித்தால் என்ன? இதெல்லாம் சீனக் கலாசாரத்தின் சின்னங்களாயிற்றே!'' என்றான்.

இதைக் கேட்டு விட்டுச் சின்போ, உரக்கச் சிரித்தார். ''தோழரே! ஆட்சி முறையில் புரட்சி செய்வதோடு சீனா நிறுத்திவிடவில்லை. தலைவர் மா அவர்களின் சிந்தனையில் உதித்த ஒரு மாபெருந் திட்டம், 'கலாசாரப் புரட்சி'. இதைச் செஞ்சேனை நடத்திக் கொண்டிருக்கிறது. கோயில்களையும், மடங்களையும் இடித்து, பூர்ஷ்வா வர்க்கத்தினரின் கறை படிந்த மதங்கள் அனைத்தையும், ஒழிப்பது கலாசாரப் புரட்சியின் ஓர் அம்சம். தோழரே! மக்களிடமிருந்து மதம் எவ்வளவு விலகுகிறதோ, அவ்வளவுக்குக் கம்யூனிச சித்தாந்தம் மக்களை நெருங்கும்.''

''அப்படியானால் இந்தியாவில் கம்யூனிஸம் பெருமளவில் பரவுவது சிரமம்தான்'' என்றான் சிவராமன்.

''பொறுங்கள், தோழரே! கொஞ்சம் பொறுங்கள். சீனா உங்களுக்கு விரைவிலேயே வலிய வந்து உதவும். தலைவர் மா அவர்களின் சிந்தனை, இந்தியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஒலிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாங்கள் அதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம்.''

''என்ன திட்டம்?'' — மிகுந்த ஆவலுடன் கேட்டான் சிவராமன்.

''இப்போது சொல்வதற்கில்லை.... விரைவில் இந்தியாவோடு சீனா தொடர்பு கொள்ளும். எல்லாம் போகப் போகத் தெரியும்'' என்றார் சின்போ.

''தோழரே! தலைவர் மாஸேதுங்கை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமா?'' என்று ஆவலோடு கேட்டான் சிவராமன்.

''முயற்சி செய்து பார்க்கிறேன்'' என்று கூறினார் சின்போ.

எத்தனையோ சீனத் தலைவர்களைச் சந்தித்தான். ஆனால் சீனாவின் மாபெரும் தலைவராக விளங்கிக் கொண்டிருந்த மாஸே துங்கைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் கட்டுக்கடங்காமல் பெருகியது.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் இரகசியப் பயிற்சிக்கூடத்தில் சிவராமன் பயின்று கொண்டிருந்தபோது, மாஸே துங்கின் சிந்தனைகளைப் பற்றியும், அவருடைய கொரில்லாப் போர் முறைகளைப் பற்றியும் படித்து வியந்திருக்கிறான். அவனுடைய வியப்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாகி விட்ட மாஸே துங்கைச் சந்தித்துவிட வேண்டும் என்னும் ஆசை, வெறியாகவே மாறிவிட்டது.


சீனாவை விட்டுப் புறப்படுவதற்கு முந்தின நாள் இரவு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற விருந்தில் சிவராமனும் கலந்து கொண்டான். சிவராமனின் வலது பக்கத்தில் சின்போ அமர்ந்திருந்தார்.

''தோழரே! இன்று உம்முடைய விருப்பம் நிறைவேறப் போகிறது. தலைவர் இங்கே வரப் போகிறார்'' என்று ரகசியமாகக் கூறினார் சின்போ.

இதைக் கேட்டதும் சிவராமன் பரபரப்படைந்தான். உலக வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொண்ட பெருந் தலைவர் மாஸேதுங்கைச் சந்திக்கப் போகிறோம் என்பதை அறிந்தபோது, அவனுள் சற்றுப் பயம்கூடத் தோன்றியது. விருந்து முடிந்ததும் ஒரு பெரிய ஹாலில் அனைவரும் கூடினார்கள். உட்புறச் சுவரில் மாஸே துங்கின் படம் மிகப் பெரிய அளவில் தொங்கிக் கொண்டிருந்தது. ஹாலுக்குள் சென்றவர்கள் அனைவரும் அந்தப் படத்துக்கு வணக்கம் செலுத்திவிட்டு நாற்காலிகளில் அமர்ந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட தலைவர்கள் அங்கு கூடியிருந்தும், யாரும் அதிகமாகப் பேசவில்லை. அந்தப் பெரிய அறையில் இருந்த அனைவரையும் ஏதோ ஒருவித பயம் அழுத்திக் கொண்டிருப்பது போல் சிவராமன் உணர்ந்தான். எல்லோருடைய கண்களும் அறையின் வாசலையே அடிக்கடி நோக்கிக் கொண்டிருந்தன. சற்று நேரத்தில் பரபரப்புத் தோன்றியது. வாசலில் முதலில் ஓர் ஒல்லியான உருவம் தோன்றியது.

''இவர்தான் தலைவர் லின்பியோ'' என்றார் சின்போ, தணிந்த குரலில். லின்பியோவுக்குப் பின்னால் தலைவர் மாஸே துங் வந்தார். (தொடரும்)

பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப் ஏன் வாங்க வேண்டும்? இதோ 5 சிறந்த காரணங்கள்



1. எல்லா ப்ளூரஸன்ட் லாம்புகளும் வாங்கும் போது பிரகாசமாகவே இருக்கும். ஆனால் உபயோகிக்க உபயோகிக்க அவை ஒளி குன்றிவிடும். உபயோகிக்கும் காலம் முழுவதும் நிறைந்த ஒளி தருபவையே சிறந்த லாம்புகள். பிலிப்ஸ் லாம்புகளில் பிரகாசம் குன்றுவது மிகச் சிறிதளவே. அதோடு ஆரம்பத்திலும் பிலிப்ஸ் லாம்புகள் அதிக ஒளியைத் தருபவை. உதாரணமாக ஒரு 40 வாட் பிலிப்ஸ் லாம்ப் பிரதி வாட்டிற்கு 70 லூமன்களுக்கும் மேலாக ஒளி தருகிறது.

2. ஒரு ப்ளூரஸன்ட் லாம்பின் பிரகாசம் அதிகரிக்க அதிகரிக்க, நிறங்களை மாறுதலின்றிக் காட்டும் அதன் சக்தி குறைந்துவிடும் என்பது விஞ்ஞான ரீதியிலான உண்மை. பிலிப்ஸ் "கூல் டேலைட்" லாம்புகள், சிறந்த ஒளி, நிறங்களை மாறுதலின்றிக் காட்டும் சக்தி இரண்டையுமே பெற்றிருக்கும்படி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை. அதிகப் பிரகாசமான லாம்ப் தேவையென்றால் பிலிப்ஸின் 'வொயிட் லாம்ப்' வாங்குங்கள்.

3. பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்புகளினால் ரேடியோ பாதிக்கப்படாது. ஏனெனில் இவற்றை டிசைன் செய்யும் பொழுதே இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் பிலிப்ஸ் ஸ்டார்ட்டர்களில் உள்ள ஒரு விசேஷ அமைப்பு எல்லா ஓசைகளையும் சப்தங்களையும் நீக்கி விடுகிறது.

4. பிலிப்ஸ் லாம்புகள் இந்தியாவின் மிகச் சிறந்த, தன்னிறைவு பெற்ற தொழிற்சாலையில், உலகின் உயர்ந்த தரங்களுக்கேற்பத் தயாரிக்கப்படுகின்றன. அவை பெரிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே அவற்றின் உயர்தரம் உத்திரவாதம் நிறைந்தது.

5. ப்ளூரஸன்ட் லாம்புகளுடன் பிலிப்ஸ் TL ஸ்டார்ட்டர்களையும் சோக்குகளையும் உபயோகித்தால் நீடித்த உழைப்பும் நிறைந்த ஒளியும் பெறலாம்.

பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்புகள்

சீரான ஒளிக்கு இவற்றைவிடச் சிறந்தவை கிடையாது

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3173-A

கண்ணாடம்

மெருகு

"பாலிஷ்."

"சரக்.... சரக்... சரக்....."

"பாலிஷ்... பாலிஷ்...."

"சரக்... சரக்.... சரக்...."

"பாலிஷ், சார், பாலிஷ்....."

"சரக், சரக், சரக், சரக்...."

"பாலிஷ் சார், பாலிஷ் சார்."

மிகவும் நிலையான ஒரு குரல் மார்க்கெட் சதுக்கத்திலே ஆரம்பித்துப் பிரசவ ஆஸ்பத்திரியின் திருப்பம் வரை ஒரே சீராக—என்னைத் தொடர்ந்து வந்தது. எனது புதிய காலணிகளின் ஓசை மட்டுமே அந்தக் குரலுக்குப் பதிலாக அமைந்தது. நான் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. புத்தம் புதிய காலணிகள் ஆகையால், அவற்றுக்கு அப்பொழுதே மெருகு தேவையில்லை என்பது என் எண்ணம். அதனும் நான் அவசியமாகப் புதிய காலணிகளின் தன்மைக்குப் பழக்கப்படாத பாதங்களை இழுத்து இழுத்து இயல்பெயடி நடக்கலானேன். காலணிகளின் மீது படிந்திருந்த புழுதியைக் கண்டு, நான் போட்டிருந்த 'ஸைட்'டுக்கும் காலணிக்கும் பொருத்தமாக இராதென்பதை உணர்ந்து

பிரசவ ஆஸ்பத்திரியின் அருகில் திருப்பத்திலே, சாலையைக் கடப்பதற்காக இருபுறங்களிலும் பார்வையை ஓட்டியபோது, பாலிஷ் பையனைத் தவிர அண்மையில் வேறு எவரும் தென்படவில்லை. ஆகையால் அவன் என்னையேதான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறான் என்பதில் எவ்விதச் சந்தேகமும் எனக்கு உண்டாகவில்லை.

"பாலிஷ் போட்டுக் கொள்ளுங்கள், சார்."

"சரக்... சரக்... சரக்..."

"ஒரே புழுதி படிஞ்சிருக்குது, சார்!"

குனிந்து பார்த்தேன். அவன் கூறியது மெய்தான். வீட்டுக்குப் போய் ஒரு கந்தல் துணியால் துடைத்து விட்டால் போகிறது. இவனுக்கு ஏன் ஓரணாவோ, இரண்டணாவோ கொடுக்க வேண்டும் ?

இந்த முடிவில் நான் அவனுக்கு அளித்த பதில்......

"சரக்... சரக்.... சரக்...!"

பாவம் ! கொஞ்ச நேரம் பேசாமல் தொடர்ந்து வந்தான்.

"உங்க ஸைட்டுக்கும்செருப்புக்கும்'மாட்ச்' இல்லே, சார்! உங்க செருப்பு கண்ணாடி மாதிரியா, பளபளன்னு எல்லாரு கண்ணும் உங்க காலேயே பார்க்கும்படியா இருக்க வேண்டாமா ?"

எனக்குச் சிரிப்பு வந்தது; அதைத்தொடர்ந்து அவனிடம் கனிவும் ஏற்பட்டது. செருப்புக்கு



'பாலிஷ்' பையன், என் காலணிகளுக்கு மெருகு மிகவும் அவசியம் என்று தீர்மானித்திருக்கிறான். எனவே என்னை விடாமல் அவன் பின்தொடர்ந்து வந்திருக்கிறான். வெறும் கூலி ஆசைக்காகமட்டும் இவ்வளவு தூரம் தொண்டைத் தண்ணீர் வற்ற வருகிற முட்டாளாக மட்டும் இருக்க மாட்டான் அந்தப் பொடிப் பயல்.

இதெல்லாம் பின்னால் என் மனம் புரிந்த தர்க்கம். ஆனால் நான் அவன் சொற்களையே காதில் போட்டுக் கொள்ளவில்லை.

கன்னடக் கதைச் சிற்பத்துக்கு மெருகு கூட்டிய பெருமை ஸ்ரீ மாஸ்தி வேங்கடேச ஐயங்காரைச் சாரும். அவரது நிழலில் கதை உலகத்துக்குப் பெருமை தேடித் தந்த பழம் பெரும் எழுத்தாளர் திரு எம். வி. சீதாராமய்யா. மைசூரில் 1911ம் ஆண்டு பிறந்த இவர் கன்னட இலக்கியப் பேராசிரியராக சென்டிரல் கல்லூரியில் பணியாற்றி வருகிறார். இலக்கியத்தில் பல துறைகளையும் தொட்டுப் புகழ்ப் பணி புரிந்துள்ள இவர் பெருமையைக் கூற, பத்து நாவல்கள், பதின்மூன்று கவிதை நூல்கள், ஆறு நாடகங்கள், கன்னட இலக்கியக் கட்டுரைகள் ஆகியவை வெளிவந்துள்ளன. சித்திரக் கலை, நடிப்புக் கலையிலும் வல்லவர். மிருதங்கம் வாசிக்கவும் தெரியும். கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு மிக்க இவரது 'மெருகு' என்னும் கதை மனித மனத்தில் இழையோடும் அன்புக்கும் அனுதாபத்துக்கும் எப்படி அழகு கூட்டுகிறது, பாருங்கள் !



எம்.வி.சீதாராமய்யா



மெருகு தேவைதான் என்பதை முதல் முறையாக உணர்ந்தேன்.

''அந்தக் கல் பெஞ்சு மேல் போய் உட்காரலாம், நட!'' என்று கூறிக் கோட்டை உயர்நிலைப் பள்ளிக் காம்பௌண்டின் உள்ளே சென்றேன். அந்தப் பொடிப் பயல் சட்டென்று முன்னால் வந்து, ''இங்கே உட்காருங்க, சார்!'' என்று என் கையிலே இருந்த காய்கறிப் பையை, வாங்கிப் பெஞ்சின் மேல் வைத்து மிகவும் விநயத்துடன் ஆசனத்தைக் காட்டினான்.

நான் அமர்ந்து கொண்டேன்.

''எங்கே சார்?'' என்ற பையன், கறுப்பும் பழுப்பும் நிறம் கலந்து அழுக்கால் மெருகேறியிருந்த கைப்பை ஒன்றிலிருந்து பாலிஷ் பாட்டில், பாலிஷ் பிரஷ், கொஞ்சம் துணி — இவற்றை எடுத்து வைத்துக் கொண்டு கீழே உட்கார்ந்தான்.

நான் செருப்பை அவிழ்க்கக் குனிந்தேன்.

''நீங்க அதெல்லாம் சிரமப்பட வேண்டாம், சார்! காலைக் கொடுங்கள் சார். செருப்பை அவிழ்க்காமலே பாலிஷ் போட்டுடறேன்; அவிழ்த்து விட்டு மறுபடியும் போட்டுக் கொண்டால் அது வேறு நேரமாகும் உங்களுக்கு!'' என்றான் பையன்.

''அதுக்காக என் காலை நீ ஏன் பிடிக்க வேண்டும் ? உன் வேலைக்கு நீ கூலி பெறுகிறாயே தவிர, காலைப் பிடிக்க என்று தனியாக — அதிகமாக ஏதாவது கொடுக்கிறேனா?''

''நீங்க இதுக்கு முன்னால் பாலிஷ் போட்டுக் கொண்டதில்லையா சார் ?''

''போட்டதுமில்லை, போட்டுக் கொண்டதுமில்லை.''

''அதை அப்பவே புரிந்து கொண்டேன், சார்.''

அந்தப் பொடிப் பயலுக்குத்தான் என்ன அறிவுக்கூர்மை! அதை நான் எடைபோட எடுத்துக் கொண்ட நேரத்தில், அவன் பாலிஷ் போட்டு முடித்துவிட்டான்.

என் காலணிகள் பளபள வென்று மின்னின. அவற்றைப் பார்த்துவிட்டு அந்தப் பையனின் அவல நிலையைப் பார்த்தபொழுது, மனத்தை என்னவோ செய்தது. நான் அவன் நிலைமைக் கண்டு இரங்கிப் பையிலிருந்து இரண்டு மாம்பழங்களை எடுத்துக் கொடுத்தேன்; எனக்கென்று வாங்கியிருந்த டாய்லெட் சோப்பு ஒன்றையும் அவனிடம் கொடுத்தேன். கையிலே நாலணா சில்லறையையும் வைத்தேன்.

பையன் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டான். அவ்வளவு பேசப் பேசியவன் அப்

பொழுது மௌனமாகி விட்டான். பெரிதாகப் பல்லைக் காட்டிச் சிரித்தான். மகிழ்ச்சியில், அளவற்ற மன நிறைவில் சிரித்த சிரிப்பு அது. அவனுடைய அழுக்கு முகத்துக்குத் தான் அது எவ்வளவு மெருகையும் அழகையும் ஊட்டியது!

அந்தச் சின்னஞ் சிறு இதயம், அதைப் போல் கோடானுகோடியாக மலிந்து கிடக்கும் இதயங்கள், அவற்றின் வாழ்வுக்கு மெருகும் அழகும் என்றோ?

அந்தக் கசிவில் அவனிடம் இரண்டொரு கேள்விகள் கேட்டேன்:

''உனக்கு அப்பா இருக்கிறாரா?''

''அப்பா இல்லே சார்!''

''அம்மா?''

'இல்லே' என்று தலையசைத்தான்.

''எங்கே தங்கியிருக்கே?''

''புதுத் தரகுப்பேட்டையிலே சார்.''

''யார் வீட்டில்?''

''யார் வீட்டிலும் இல்லே சார்.''

''சாப்பாடெல்லாம்?''

''அங்கே ஒரு கெழவி இருக்குது. நான் சம்பாதிக்கிற கூலியை அவள் கையிலே குடுத்திடுவேன். அது எனக்குச் சோறு போடும்.''

''உன் கூலி தினமும் ஒரே சீரா கிடைக்குமா?''

''கிடைக்காத அன்னிக்குத் தாசய்யன் சோறு போடுவாரு.''

''தாசய்யனா?''

''ஆமாம், சார். அவரு தெனம் பிச்சை எடுத்துக்கிட்டு வந்து கெழவிகிட்டம் குடுப்பாரு. அது அவருக்கும் சோறு பொங்கிப் போடுது. எனக்குக் கூலி எதுவும் கிடைக்காத அன்னிக்கு அவரு எனக்குச் சோறு போடுவாரு; அவருக்கு நிறையப் பிச்சை கெடைக்காத அன்னிக்கு என் சோற்றிலே அவருக்குப் பங்கு கொடுப்பேன்...''

அப்படியொரு வறுமைப் பங்கீட்டுச் சங்கம் இயங்கியதைக் கண்டு என் நெஞ்சு நெகிழ்ந்தது.

அந்தப் பாலிஷ் சிறுவன் நாளடைவில் என்னிடம் சலுகை மிகுந்தவனாகிவிட்டான். வாரத்துக்கு ஒரு முறை அவனுக்குப் பணம் கொடுக்கும் நோக்கத்துடன் என் காலணிக்கு அவன் கையால் பாலிஷ் போட்டுக்கொண்டிருந்தேன்.

இப்படியே சுமார் ஓராண்டு காலம் ஓடியது. என் காலணி ரிப்பேர் செய்ய வேண்டிய நிலைக்கு வந்தது. யுத்த கால நெருக்கடி காரணமாகக் காலணிகளின் விலை மிகவும் ஏறத் தொடங்கியது. அதனால் பழையகாலணி கிழிந்தும், புதிதாக வாங்கும் துணிச்சல் எனக்கு ஏற்படவில்லை. பழையதையே ரிப்பேர் செய்து போடவும் விருப்பமில்லாததால் காலணி போட்டுக் கொள்வதையே விட்டு விட்டேன்.

அந்த பாலிஷ் சிறுவனை மட்டும் என்னவோ வழக்கம்போல் சந்தித்துக் கொண்டிருந்தேன். காலணிகள் இல்லாத என் கால்களைக் கண்டு அவனுக்கு என்ன தோன்றியதோ, என்னவோ? ஒரு நாள், ''செருப்பை ரிப்பேர் செய்து விடுகிறேன், சார். கொண்டு வாங்க, சார். அதற்கு நீங்க ஒண்ணும் காசு குடுக்க வேண்டாம். அப்படியே பாலிஷ் போட்டுக் குடுத்துடறேன். நான் சாகிற வரையிலும் பாலிஷ் போட்டுக் கொடுத்தால் கூடக் கடன் தீராத அளவுக்குக் கூலியை நீங்க எனக்குக் குடுத்திருக்கீங்க!'' என்றான்.

அந்தச் சின்னஞ் சிறிய உள்ளத்திலேதான் எவ்வளவு நன்றி உணர்ச்சி! அவன் கூறியது போல் நான் அவனுக்கு அவ்வளவு பணம் நிச்சயமாகக் கொடுத்துவிட வில்லை. என்னிடம் அவனுக்குள்ள பெருமதிப்பையும் பற்றையும்தான் வார்த்தைகளால் வெளிப்படுத்தினான்.

அவன் கையால் என் செருப்புக்குப் பாலிஷ் போட்டுக் கொள்ளாவிடினும், அவனைக் காணும்போது என்னால் இயன்ற பணத்தைக் கொடுத்து வந்தேன். அவன், ''வேண்டாம் சார்'' என்பான். ''பரவாயில்லே. ஏதாவது வாங்கிச் சாப்பிடு'' என்று பலவந்தமாகக் கொடுப்பேன்.

இப்போதெல்லாம் சில மாதங்களாக அப் பையனைக் காணவில்லை. பழைய காலணியையே தைத்துப் போட்டுக் கொண்டு வருகிறேன். காலணியின்மீது ஓர் அங்குல அளவுக்குத் தூசி படிந்திருக்கிறது. பாலிஷ் போட்டுக் கொள்ள மனம் இல்லை.

அந்தப் பாலிஷ் சிறுவனை எங்கேயும் காணவில்லை. திடீரென்று அவன் காணமற்போன தருணத்தில் பிரசவ ஆஸ்பத்திரி எதிரில் ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டது என்றும், அதில் ஒரு கூலிப் பையன் அகப்பட்டு இறந்து விட்டதாகவும் பேப்பரில் படித்த ஞாபகம் வந்தது. அந்தக் கூலிக்காரச் சிறுவன், ஒரு வேளை என் அன்புக்குப் பாத்திரமான பாலிஷ் போடும் பையனாக இருக்குமோ?

தரகுப்பேட்டை தபாலாபீசுக்குப் போய்க் கொண்டிருந்தபோது ஒரு நாள் அந்தப் பிச்சைக்காரத் தாசய்யனைக் கண்டேன். பாலிஷ் பையனைப் பற்றிய விவரத்தை அவனிடம் வினவினேன். தலைமறைவாகப் போய் விட்ட மகனைப் பற்றிய செய்தியைக் கேள்விப்படும் ஒரு தந்தையின் எல்லையற்ற பாச உணர்ச்சியும் ஆர்வமும் நெஞ்சில் பொங்கித் ததும்ப அவன் என்னை விசாரித்தான்: ''அந்தப் பையனைப் பத்தின சேதி உங்களுக்கு ஏதாச்சும் தெரியுமா சாமி? தெரிஞ்சிருந்தால் கொஞ்சம் சொல்லுங்க, சாமி. அந்தப் பாவி மவன் இல்லாம எனக்குத் தொண்டையிலே சோறு இறங்கல்லே சாமி!....''

தாசய்யன் மூலம் அந்தச் சிறுவனைப் பற்றி விவரம் தெரியவில்லை. அவன் மோட்டார் விபத்தில் சிக்கியே செத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துப் பெருமூச்செறிந்தேன்.

நான் இப்போதெல்லாம் காலில் செருப்பு அணிவதில்லை. கண்ணாடியைப் போல் பளபளவென்று மின்னும் காலணிகளை யார் காலில் கண்டாலும், அந்தப் பாலிஷ் சிறுவனின் ஞாபகம்தான் எனக்கு வருகிறது. இந்த நினைவை மிகவும் துயர பாவனைகளுடன் இதயத்திலே வைத்துப் போற்றி வருகிறேன். என்னுடைய இதயத்தின் அழுக்கை அகற்றி, நெஞ்சுக்கு மெருகையும் அழகையும் ஊட்டி வருகிறது, அந்தப் பொடிப்பயலின் ஞாபகம்.

தமிழாக்கம்: தபஸ்வி



அமிர்தாஞ்சனம்

விரைவில் குணமளிக்கிறது!

அமிர்தாஞ்சனம் தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு, தசைவலி இவற்றிலிருந்து விரைவில் குணமளிக்கிறது. உபாதை ஏற்பட்டுள்ள இடத்தில் சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவி துரித நிவாரணம் பெறுங்கள். 75 வருடங்களாக குடும்பங்களில் பயன்பட்டு வரும் நம்பகமான நிவாரணி அமிர்தாஞ்சனம். எப்போதும் ஒரு பாட்டில் கைவசம் இருக்கட்டும். சிக்கனமான ஜாடிகளிலும், கைக்கு அடக்கமான டப்பாக்களிலும் கிடைக்கிறது.

10 மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற நிவாரணி

அமிர்தாஞ்சன் லிமிடெட் AM-5981

WIDENING WORLD OF GENERAL INSURANCE

NEW INDIA MEANS BEST IN INSURANCE SERVICE
THAT IS READILY AVAILABLE TO YOU
THE FIFTY-YEAR TRADITION OF NEW INDIA'S
EFFICIENT SERVICE WITH SECURITY
IS BEING CARRIED ON TODAY ON A WORLD WIDE SCALE

THE MOST PROGRESSIVE NAME IN GENERAL INSURANCE

IN 1970 NEW INDIA ENTERED IT'S 51ST YEAR
AND
REDEDICATES ITSELF TO THE SERVICE OF ITS CLIENTS

** ** ** ** **

The New India Assurance Company Ltd.

87, Mahatma Gandhi Road
BOMBAY-1

மேகன் வெளியேயிருந்து அந்தக் காம்பவுண்டின் அழகிய கேட்டைப் பார்த்ததுமே, இந்தப் பங்களாவின் வேலைக்காரி நிச்சயம் தன் ஆர்வங்களை யெல்லாம் நிறைவு செய்வாள் என்று அனுமானித்துவிட்டான். இது வரை அவன் பட்டு வந்த அவஸ்தைகள், அவனுடைய வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே கலகலக்கச் செய்து விட்டிருந்தன.

ஆறடி உயரமும், ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்ட அவன் இரண்டு வருடங்களாக நிலக்கரி அள்ளிச் செல்லும் லாரியில் வேலை பார்த்து வந்தான். ஆனால் தன்னுடைய உழைப்பினால் வந்த காசைக் கொண்டு ஆசைக்கு ஒரு சட்டை கூட வாங்கி அணிந்துகொள்ள முடியாமல்தானிருந்தான். நிலக்கரி லாரியில் சம்பளமுள்ள வேலை என்பது பெயரளவில்தான். அவனுடைய உடல் வலுவைத் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்வதற்காகவும், பகல் முழுதும் வேலை செய்வதால் ஏற்படும் அயர்வையும் அலுப்பையும் போக்குவதற்காகவும் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுப்பார்கள். — இரவில் நாட்டுச் சாராயம் வாங்கிக் குடிப்பதற்காக!

இச்சிறு பணம்தான் அவனுடைய துக்கங்களையும், துயரங்களையும், கவலைகளையும் விட்டுத் தொலைவில் இருக்கும் மன அமைதி என்னும் சுவர்க்கத்துக்கு அவனை அழைத்துச் சென்று கொண்டிருந்தது. இப்படியே இரவு முழுவதும் ஓர் இளவரசியைப்போல் தன்னுடைய கனவுகளென்னும் கண்ணாடி மாளிகையில் கழிப்பான்.

ஆனால் வைகறையில் அவன் கண் விழிக்கும் போது உடல் முழுதும் பச்சைப் புண்ணாக வலியெடுப்பதை அவன் உணர்வான். இருந்தாலும் இரவெல்லாம் குடித்த அந்தப் போதைப் பொருளின் நினைவு அவனுக்கு மீண்டும் புத்துணர்வை யூட்டும். புது வலிமையுடன் தன் வேலைகளில் ஈடுபட்டு விடுவான். ஆனால் லாரி டிரைவரோ மிகக் கொடியவன். மேகன் இவ்வளவு வேலை செய்கிறானே; இப்படி மாடு போல் உழைக்கிறானே, இதைப் பார்த்து எப்பொழுதாவது அந்த டிரைவரின் மனம் குளிருமா? ஊஹூம். இல்லவே யில்லை. ஏதேனும் காரணத்துக்காக—காரணம் இல்லாமலும்கூட அவன் வயிற்றில் அடித்து விடுவான்.

எவ்வளவோ ஆசையோடு ஒரு காலத்தில் மேகன் தன் வீட்டை விட்டு வெளியே கிளம்பியவன். அப்பொழுதெல்லாம் அவன் முகத்தில் வசீகரமான புன்னகை தவழ்ந்திருக்கும். அவன் பார்வையே உதிக்கும் கதிரவனின் ஒளி போன்று பிரகாசிக்கும். அவன் பிறந்த சோட்டா நாகபுரி அவனுடைய எந்த ஆசையையும் நிறைவேற்றுவதாக இல்லை. மேகனின் நெஞ்சத்தில் ஆர்வங்களின் அகல் விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆனால் செல்வம் கொழிக்கும் அந்த மலைத் தொடர்களும், சமவெளிகளும் மேகனைப் பொறுத்தவரையில் காலியாகவே காட்சியளித்தன. தன் வருங்கால மனைவிக்கு வழங்குவதற்குரிய எந்தப் பொருளையும் அவை தருவதாக இல்லை.

இப்படி எண்ணியவனாக ஒருநாள் தன் வீட்டுக்கு வெளியே வந்து நின்று கொண்டிருந்தான். அந்தப் பெண்ணை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. தன் சின்னஞ் சிறு வீட்டைத்தான் எவ்வளவு துப்புரவாக அவள் வைத்திருந்தாள். அந்த வீட்டின் முன் சதுக்கத்தில் நின்றுகொண்டுதான் நாணம் நிரம்பிய பார்வையால் அவனைப் பார்த்து முறுவலித்தாள். அவனுடைய கரிய தோற்றத்தின்

நான்கு கொட்டடிப் புடவைகள்

ஜுபா ஷகீலா அக்தர்



■ 1916ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிறந்த ஜுபா ஷகீலா அக்தர் பீஹார் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். தமது பதினைந்தாவது வயதிலிருந்தே கதைகள் எழுதி வருகிறார். 1933ம் ஆண்டு உருது எழுத்தாளர் ஸையத் அக்தர் அஹமதுக்கும் இவருக்கும் திருமணம் ஆகியது. நான்கு சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. அற உணர்வும் அன்பு உணர்வும் கொண்ட இவரது கதைகளின் அடித்தளத்தில் ஏக்கப் பெருமூச்சு உருவாவதற்கும் வழிவகுப்பது இவர் வழக்கம். 'நான்கு கொட்டடிப் புடவை'கள் இல்லாமல் திருமணம் நிறைவேறாது என்ற நிலையில் கதாபாத்திரம் கொட்டும் உணர்ச்சியைக் கண்டு வாசகர்களுக்கும் ஒரு நெடுமூச்சு எழுமானால் ஆசிரியைக்கு அது வெற்றிதானே ?

பின்னணியில் அந்த வெண்பற்கள் முறுவலித்த போது மின்னல் கீற்று தெறித்து செல்வது போலல்லவா இருந்தது! அதைப் பார்த்ததும் அன்று மேகனின் ஆவியே துடித்துவிட்டது. அப்படி மெய் சிலிர்க்கப் புன்னகை பூத்த அவளை அப்படியே தன் வலிமை மிக்க கரங்களில் வாரி அணைத்துத் தன் வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போய்விட்டால்...?

ஆனால் பெண்ணின் தந்தை மிகப் பெரிய நிபந்தனையல்லவா விதித்திருக்கிறார்!

அந்த வீட்டில் பரிசம் போடுவதென்றால் மிகக் கடுமையான ஒரு தேவையைப் பூர்த்தி செய்தாக வேண்டும். அதாவது மாப்பிள்ளையாகப் போகிறவன் நான்கு கொட்டடிச் சேலைகள் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். பின்னர் தான் பெண்ணை மணந்து அவன் வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம்.

இந்நிபந்தனையைச் செவியுற்றதும், ''இது நான்கு கொட்டடிப் புடவைகளைப் பற்றிய கோரிக்கை யில்லை. மாறாக நான்கு பேரரசுகளை வெற்றி கொண்டு, அவற்றை மணப் பெண்ணின் காலடியில் சமர்ப்பிக்கவேண்டும்'' என்று கட்டளையிடுவது போல் மேகனுக்குத் தோன்றியது. இத்தகைய புடவைகளை அவன் எங்கிருந்து கொண்டு வருவான்? இதுவரை அவனுடைய வீட்டுப் பெண்கள் முரட்டுத் துண்டுத் துணிகளை ஒட்டுப் போட்டுத்தானே தங்களுடைய பாதி உடலை மறைத்துக்கொண்டு வருகிறார்கள்.

மேகனுக்கு ஒரே நிராசை. ஆயினும் அவன் மணக்கப் போவதாக உறுதி கொண்ட பெண்ணின் மோகனப் புன்னகை மட்டும் அவனுடைய அகப் பார்வையிலிருந்து மறையவில்லை. மாறாக அது அவன் உள்ளத்தில் ஒரு புத்துயிரையே தோற்றுவித்தது. அந்தப் புன்னகையிலேயிருந்து புறப்பட்ட இன்ப அலைகளில் தான் அவன் மிதந்து கொண்டிருந்தான்.

கடைசியாக அந்நான்கு கொட்டடிப் புடவைகளையும் எப்படியும் சம்பாதித்தே விடுவது என்று வீட்டை விட்டே வெளியேறினான். ஆனால் இரண்டாண்டுகளாக ஆயிரக் கணக்கான மணங்குகள் நிலக்கரிப் பாளங்களைச் சுமந்து கொண்டு கொட்டியும் கூட, அந்தக் கொட்டடிப் புடவைகள் அவன் பிடிக்கு எட்டாமலே இருந்தன. மேகன் ஒன்றும் தெரியாத அப்பாவி. தனக்குச் சம்பளம் எவ்வளவு என்றுகூட அவனுக்குத் தெரியாது. வாரிக்காரன் மேகனுடைய பணமெல்லாம் சேமிப்பில் போடப்பட்டு வருகிறது என்று சொல்லிக்கொண்டே வந்தான். அவனுடைய எளிமையான அன்றாடத் தேவைகளுக்கு மட்டும் ஒழுங்காகப் பணம் கிடைத்து வந்தது.



இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. இன்னும் மோகன் சோர்ந்து போய் விடவில்லை. சந்துகளிலும் தெரு வீதிகளிலும் நடந்து செல்லும் இளம் பெண்கள் மீது அவன் பார்வை விழும்போது, அன்று அந்த வீட்டின் முன் சதுக்கத்தில் நின்றுகொண்டிருந்த அப்பெண் — பழுத்த நாவல் பழம் போன்ற அவள் தோற்றம்; கார்முகிலைக் கிழித்து வந்தது போன்ற அந்த மோகனப் புன்னகை அனைத்தும் அவனுக்கு நினைவுக்கு வந்துவிடும். புன்னகை பூத்த அவள் உதடுகள் அவனிடம் ஏதோ வேண்டுவன போல் அவன் உணர்வான்... ''நான்கு கொட்டடிப் புடவைகள்... எனக்காக, என் அன்புக்காக...!''

ஆனால் லாரி நிழலில் உட்கார்ந்து கொண்டு எதிரே கிடக்கும் நிலக்கரிக் குவியலைப் பார்த்து ''ஹூம்! நான்கு புடவைகள்! ஒரு புடவைகூட வாங்க வழியில்லையே!'' என்று ஏங்குவான். எப்பொழுதாவது தன் சம்பளத்தைக் கேட்பான். லாரி டிரைவரின் முஷ்டி ஓங்கி அவன் முகத்தில் பதியும். ''பணமா கேக்கிறே? ராத்திரியெல்லாம் குடிச்சுட்டுக் குடி போதையிலே கிடக்கிறியே? அதுக்கும் பணம் உங்கப்பன் வூட்டுலேருந்தா வருது?'' என்று குரூரமாகக் கேட்பான். அடியைப் பட்டுக் கொண்டு, பெண்களைப் போல் ஏங்கி ஏங்கி அழுவான் மோகன். சில சமயம் ஓடியும் போய் விடுவான். ஆனால் லாரியின் மற்ற வேலையாட்கள் அவனை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து இழுத்துக் கொண்டு வந்து விடுவார்கள்.

ஆனால் இந்தத் தடவை அவன் லாரிக்காரனிடம் இருந்து தப்பித்து இந்த அழகான 'கேட்' அருகே வந்ததும், அவனுடைய நெஞ்சம் துயரத்தால் வெடித்து விடும்போலிருந்தது. டிரைவர் மட்டுமல்ல, லாரியின் உரிமையாளனும் கூட அவனைப் பெரிதும் கொடுமைப் படுத்தி விட்டான். சேமித்து வைத்திருக்கும் தன் சம்பளத்திலிருந்து கொஞ்சம் பணம் வேண்டுமென்று மோகன் கேட்டபொழுது, ''பணமா? உங்களுக்கென்ன அப்படித் திடீர்னு தேவை வந்திடுச்சு?'' என்று எக்காளமாகக் கேட்டான் லாரிக்காரன். வேறு வழியில்லாமல் தன் கல்யாணத்துக்காக நான்கு கொட்டடிப் புடவைகள் எடுக்க வேண்டியது பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லி, வீட்டுக்குப் போக லீவும் கேட்டான் மோகன். அவ்வளவுதான். லாரிக்காரனும் டிரைவரும் சேர்ந்துகொண்டு, அவன் மணக்கப்போகும் பெண்ணைப் பற்றி அசிங்கமாகப் பேசலானார்கள்.

ஓர் அப்பாவிப் பெண்ணைப் பற்றி எவ்வளவு விரசமாகப் பேசி விட்டார்கள்? முகத்தில் அறை விழுந்தபோதுகூட மோகன் வேதனைப்படவில்லை. இப்பொழுது அவனுடைய பொறுமை எல்லையைத் தாண்டி விட்டது. எந்த அடிப்படையின் மீது அவனுடைய வாழ்க்கையும், அதன் இன்பங்களும் அமைக்கப்பட்டிருந்தனவோ, எந்த மலர்க் கானவைப் பூத்துக் குலுங்கச் செய்வதற்காகவே இவ்வளவு பாடுபட்டு உழைக்கிறானோ, அதையே அழித்து விடவல்லவா இவர்கள் முனைகிறார்கள்.

அந்த நாளிலிருந்து லாரியின் மீதும், அந்த இடத்தின் மீதும் அவனுக்கும் இராத வெறுப்புத் தோன்றி விட்டது. ஒரு நாள் அந்த லாரி, லாரி டிரைவர், நிலக்கரிக் குவியல் அனைத்தையும் இமை கொட்டாது பார்த்துக் கொண்டு நின்றான். ''தூ'' என்று துப்பி விட்டு, ''உனக்கு வேலை காண்பிக்கிறேன் பார், என்ன செய்திடுவே?'' என்று மார் தட்டிவிட்டுக் கிளம்பியவன்தான்; பிறகு அந்தப் பக்கம் அவன் திரும்பவே யில்லை.

அந்த வேதனையிலிருந்து விடுபட்டுப் பின்னர் இந்த அழகு மாளிகைக்கு வந்ததிலிருந்து அதன் வனப்பிலே மனத்தைப் பறி கொடுத்து ஆனந்தமாக இருந்தான். இப்பொழுது தன்னைப் பற்றிக்கூட அவன் உயர்வாக எண்ணலானான். நிலக்கரியின் தும்பு தூசு அகன்று, தான் தூய்மை பெற்று விட்டது போல அவன் உணர்ந்தான். அம்மாளிகையின் ஒவ்வோர் அடி நிலத்தையும் அவன் நேசித்தான். மென் பச்சை நிறத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு செஞ்சிவப்பு நிறத்திலே பூத்துக் குலுங்கும் மரஞ்செடிகள்; மக்மல் விரித்தது போன்ற பசும் புல் பரப்பு — இவையெல்லாம் அவனைப் பரவசப்படுத்தி விடும்.

நெருங்கி வளர்ந்திருக்கும் புல்லை வெட்டும்போதும், குழாயைக் கையில் வைத்துக் கொண்டு, செடி கொடிக்குத் தண்ணீர் விடும் போதும் மென் பட்டு மெத்தை மேல் நடப்பது போல் ஜிலுஜிலுவென்றிருக்கும். மென்மையான விரல்கள் அவன் பாதங்களை வருடித் தூங்க வைப்பது போல அவன் உணர்ச்சி பெறுவான். இப்படியே மகிழ்வும் குதூகலமும் கொண்ட ஒரு தனி உலகில் காலம் கழிக்கலானான்.

வண்ண வண்ண மலர்கள்; தென்றலில் அசைந்தாடும் மலர்ச் செடிகள் கச்சிதமாக அமைந்திருந்த அந்தக் காம்பவுண்டுக்குள் வளர்ந்து நின்ற நெடுமரங்கள் இவை யனைத்தும் மோகனுக்கு அவன் என்றோ பிரிந்து வந்துவிட்ட சோட்டா நாகபுரியின் வனப்புகளை யெல்லாம் நினைவூட்டும். அழகு மிக்க தன்னுடைய சோட்டா நாகபுரியின் ஒரு சின்னஞ் சிறு பகுதியை யாரோ இங்கு எடுத்துக் கொண்டு வந்து பதித்து வைத்திருக்கிறார்களோ என்று கூட அவன் எண்ணுவான். இத்தகைய சிந்தனைகளில் லயித்தவனாக மோகன் தன்னையே மறந்து விடுவான். ஏன், தன் வாழ்க்கையின் குறிக்கோளைக்கூடச் சில சமயம் அவன் மறந்துவிடுவான்.

'நான் யார்? எங்கிருந்து வந்திருக்கிறேன்? எதற்காக இங்கு வந்திருக்கிறேன்? என்ன தேடிக் கொண்டு இங்கு வந்திருக்கிறேன்' என்று சிந்திக்க ஆரம்பித்து விடுவான். ஆனால் இத்தகைய சிந்தனை நீடிப்பதில்லை. அந்த மாளிகையில் வசந்தம்போல் படர்ந்திருக்கும் பேரழகு அவனை வியப்பில் ஆழ்த்திவிடும். விதம்விதமான மலர் மொட்டுகளையும், விரியும் பூக்களையும் கண்டு குழந்தையைப் போல் அதிசயித்து நிற்பான். பூவுலகின் அழகெல்லாம் எங்கோ மேகமாகத் திரண்டு, பிறகு அது இந்த இடத்திலே வந்து மழையாகக் கொட்டி விட்டதோ என்றெண்ணி மெய் சிலிர்த்து நிற்பான்.

மாளிகையின் உள்ளே 'மொஸைக்' தரையில் நடக்கும்போது பல நாட்கள் அவன்


ஜெனித்
குழாய் அன்னியச்
செலாவணியைச்
சுரக்கிறது

அஞ்சி அஞ்சிச் சென்றதுண்டு. தன் முரட்டுப் பாதங்களில் மிதிபட்டு, முத்துப் போன்ற அந்த மொஸைக் தரை உடைந்து சிதறிப் போய்விடுமோ என்ற அச்சம்தான்! தரையில் பதிக்கப்பட்டிருந்த அந்த மொஸைக் விரிப்பு முகம் பார்க்கும் கண்ணாடிபோல் ஒளி வீசிற்று. அதனால் அதில் அடக்க ஒடுக்கமாகவே நடந்து செல்வான். பார்வை எப்பொழுதும் பூமியில் இருக்கும்; தலை தாழ்த்தியே நடப்பான். பயந்து பயந்து அவன் நடந்து செல்லும்போது மனித உருவத்திலே ஏதோ ஒரு பிராணி அஞ்சிப் பதுங்கிச் செல்வது போல் தோன்றும். நெடிய உருவம்; அகன்ற விரிந்த மார்பு; வலிமை மிக்க உடற்கட்டு—இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் தாழ்ந்துவிட்ட நிர்ப்பந்தங்களுக்கான மனிதப் பிராணி!

இப்படி ஒரு விநோத உலகில் சிக்கிக் கொண்ட அவன் தன் வாழ்க்கையின் குறிக்கோளையே மறந்து விட்டான்! அவன் எதற்காக — எதைத் தேடி வந்தான் என்று அவன் மனத்திலிருந்து மறைந்து வந்தது. எப்பொழுதாவது தன்னுள்ளே தன்னைத் தேட விழைந்தால், தன் ஆர்வங்களை, கடந்த கால ஆசைகளைக் கண்டுபிடிக்க ஓரடி முன்னே எடுத்து வைத்தாலும் சுற்றுச் சார்பின் போதையில் — மகிழ்வுச் சிக்கலில் — மதி மயங்கிப் போய் விடுவான். 'டேப் ரிக்கார்டு' செய்யப்பட்ட பாட்டுக்களைக் கேட்டு, அப்புதுமையிலே மெய்மறந்து விடுவான். ரேடியோகிராமிலிருந்து வரும் சுநாதத்தில் மெல்லிசையில் தன்னை இழந்துவிடுவான்.

மாளிகையைச் சுற்றித் திரியும்போது வானத்தின் கோணங்களிலிருந்து ஏதோ ஓசை கிளம்புவது போல் அவனுக்குப் படும். அது என்ன ஓசை என்று இனம் பிரிக்க அவன் முயல்வான். யாரோ தன்னை அழைக்கிறார்கள்! ஆமாம், தன்னைத் தான் யாரோ கூப்பிடுகிறார்கள்! யார்... யார்...? அப்பொழுது எங்கோ தொலைவிலிருந்து தன் நினைப்பை — நெஞ்சத்தை விட்டு — நீங்கி விட்ட அந்த மோகனப் புன்னகையின் ஒளி வீச்சு அவன் ஞாபகத்துக்கு வரும். திடுக்கென்று நின்று விடுவான். அந்த நேரத்தில் வண்ணப் புடவைகள் அவன் பார்வையில் தோன்றித் தோன்றி மறையும். உயரே வானத்திலிருந்து விண்மீன்கள் கண் சிமிட்டி அழைப்பது போல் தோன்றும். சில சமயம் வண்ணப் பூக்களும், அவற்றைச் சூழ்ந்து நிற்கும் பசிய இலைகளும், வானத்தில் மிதந்து செல்லும் கரிய முகில்களும், ஆகாயத்தின் கோடியில் வளைந்து நிற்கும் வானவில்லும் அழகுப் புடவைகளாக மாறி அவனைச் சுற்றி விரிவதுபோல் தோன்றும். இந்தப் பன்னிறங்களில், எந்த வண்ணத்தைத் தேர்ந்தெடுப்பது என்று மனம் குழம்பி நிற்பான். பட்டு இதழ் விரித்து நிற்கும் அத்தனை மலர்களும், வசந்தத்தின் தென்றலும், அந்த மலர்காவின் அனைத்து வனப்பும் கொட்டடிப் புடவைகளாக மாறி, அவற்றை அவன் வாரியெடுத்துத் தன் மணப் பெண்ணின் காலடியில் குவிப்பது போல் கற்பனை செய்து கொள்வான். பிறகு எட்டத்தில், இன்பச் சூழலில் நின்று கொண்டு உலகின் அத்தனை அழகும் மோகனப் புன்னகை பூத்து நிற்கும் அந்தப் பெண்ணைச் சுற்றி நர்த்தனம் செய்வதைக் கற்பனையில் பார்த்துக் கொண்டே நிற்பான்.

எளிமையான பிடியில் சிக்கியவனாகப் பகல் எல்லாம் இயந்திரத்தைப் போல் உழைப்பான்; ஆனால் மெல்ல, மெல்ல இருள் சூழத் தொடங்கியதும் அவன் தன் பழைய நிலைமைக்கு வந்து விடுவான். நிறையக் குடித்து விட்டுத் தள்ளாடும் கால்களைச் சமாளித்துக் கொண்டு தன் இடத்துக்குத் திரும்புவான். போதையிலே விழுந்து கிடப்பான். பிறகு தனக்கென்று வைக்கப்பட்டிருக்கும் சாப்பாட்டைத் தூக்கியெறிந்து விட்டு, எதிரே கிடக்கும் பொருள்களையெல்லாம் பலங்கொண்ட மட்டும் எத்தி உதைப்பான். இரவின் இருளில் அவனுடைய உதடுகள் வாய்க்கு வந்ததைப் பிதற்றும். அப்பொழுது மேகன் மேகனாகவே இருக்க மாட்டான். ஏதோ சைத்தான் அவனுடைய உடலில் புகுந்து கொண்டதைப் போல் தோன்றும்.

அவனுடைய ஆத்திரத்தின் இலக்கெல்லாம் அவனுடைய நிழலையும் காண விரும்பாது ஓடிவிட்ட அந்த அப்பாவிப் பெண்தான். இதர வேலைக்காரர்களின் அறைகள் தொலைவில் இருந்தமையால், மேகனின் இக்கூத்துக்களெல்லாம் அவர்களுக்குத் தெரியாமலே இருக்கும். நடுக்கும் குளிரிலும் அவன் தன் அறையில் தூங்கவே மாட்டான். இரவெல்லாம் தன் நீண்ட கரங்களைத் தரையில் அடித்துக் கொண்டு, புரண்டு புரண்டு படுத்துக் கொண்டு யாரையோ தூக்கத்தில் கூப்பிடுவான்; யாருக்கோ பதில் சொல்வான்.

இரவின் இருள் அவனுடைய மனிதத் தன்மையையே மாற்றி விடும்; ஏதோ ஒரு புதிய மேகன் அவனிடமிருந்து வெளிப்படுவது போல் தோன்றும். இரவில் வீட்டைக் காப்பதற்காக அல்சேஷியன் நாய் ஒன்று அவிழ்த்து விடப்பட்டிருக்கும். அது நேராக மேகனிடம் வரும்; அவனை மோந்து, மோந்து பார்க்கும்; அவனைச் சுற்றிச் சுற்றி வரும். பிறகு அமைதியாக அவனை நெருக்கிப் படுத்துக் கொள்ளும். பொழுது விடிந்ததும் அதைச் சங்கிலியால் பிணைத்து விடுவார்கள். மேகனின் நிலையிலும் மாறுதல் வந்து விடும். அவனுடைய குரலும் இயக்கங்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டவை போலாகி விடும். இயந்திரத்தைப் போல மீண்டும் தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுவான்.

இப்படியே ஏழாண்டுகள் கழிந்துவிட்டன. அவனுடைய பார்வையிலிருந்த குறுகுறுப்பும் தீட்சண்யமும் குறைந்து விட்டன. அவனுடைய பற்கள்கூட விழுந்து விட்டன. உடல் சோர்ந்து, முன்னிருந்த வலிமையே தளர்ந்து விட்டது. ஆனாலும் இன்றும் அவன் நாள் முழுதும் மலர்களின் வனப்பிலே மயங்கி, நான்கு கொட்டடிப் புடவைகளையும் என்னென்ன நிறங்களில் எடுக்கலாம் என்று சிந்தித்துச் சிந்தித்துக் களைத்து விடுவான்.

ஆனால் பகல் கழிந்து, இருள் சூழ்ந்ததும் கற்பனை நெய்த அந்தப் புடவைகளைப் போதை உலகில் கழிக்க ஆரம்பித்துவிடுவான்!

தமிழாக்கம் : எம். அப்துல் வஹ்ஹாப்.

விட்ட மேஜை

★ இக்குறியிட்ட கடிதம் ரூ 15/- பரிசு பெறுகிறது

ஏற்கனவே ஒரு முறை மொழிப் பிரச்னையில் பொங்கி எழுந்தது மாணவர் சமுதாயம். விளைவு காங்கிரஸ் தேர்தலில் தோல்வி கண்டது. பதவிக்கு வந்தது தி. மு. க. அது அன்றையக் கிளர்ச்சி. இப்போது தமிழைத் திணிக்கும் தி.மு.க.வை எதிர்த்து மற்றொரு கிளர்ச்சி.

தாய் மேல் பாசமும் அன்பும் உண்டுதான். அதற்காக எப்போதும் தாயின் அருகிலேயே அமர்ந்திருக்க முடியுமா? தாயின் அருகிலேயே அமர்ந்து விட்டதால் நமக்குத் தாய்ப் பாசம் அதிகம் இருக்கிறது என்று ஆகுமா? தாயை விட்டுப் பிரிந்து வாழ்வதால் தாய்ப் பாசமே இல்லை என்று கொள்ளலாமா?

கல்லூரிகளில் தமிழைப் போதனைமொழியாக்கி விட்டால் அவர்களுக்குத் தமிழ்ப் பற்று இருக்கிறது என்று அர்த்தமா? அல்லது தமிழைத் திணிப்பதன் மூலம்தான் தமிழுக்குத் தொண்டு செய்ய முடியும் என்று நினைக்கிறார்களா? தமிழைத் தங்கள் மேல் திணிக்கக் கூடாது என்று கூறுவதால் மாணவர்களுக்குத் தமிழ்ப் பற்று இல்லை என்று ஆகுமா?

சென்னை — 28
10—12—70 ரா. பிரேமா

கல்கி ராஜாஜி மலர் ஒரு காவியமாகவே இருக்கிறது. பார்க்கப் பார்க்க, படிக்கப் படிக்க ஆழமும் நெருக்க நிறைவதுமே கலைக்கு இலக்கணமல்லவா? ஏற்கனவே பார்த்த ராஜாஜி நிகழ்ச்சி நிழற்படங்கள் எல்லாம் இன்று பார்க்கும்போது புதிதாகப் பார்ப்பது போல், அவைகளில் ஓர் ஆர்வமும் பரபரப்பும் இருக்கின்றன. எர்ஸ்கின் பிரபு எழுத்தும், ஸ்ரீ ராமாயணமும் படித்தபோது உள்ளம் உருகிப் பெருமிதம் உண்டாகிறது.

ராமப்பன் கதை — சிரஞ்சீவிக் கதை. உபநிஷதங்களில் வரும் உபாக்கியானங்களில் ரிஷிகள் இப்படித்தானே நீதிகளைச் சொல்கிறார்கள்.

மொத்தத்தில் தொண்ணூற்றாறு பக்கமும் எல்லாம் மறந்து ராஜாஜியின் 92 வருட வாழ்வே கண் முன் நிற்கிறது.

விட்டலபுரம்
8—12—70 வேங்கடாச்சாரி

சென்னையின் புதிய மேயர் கா. கணேசன் கூறியிருப்பதைக் கேட்டு உள்ளக் கொதிப்புடன் இதை எழுதுகிறேன். பதினைந்து லட்சம் ரூபாயில் அண்ணா பெயரால் ஒரு கலையரங்கு கட்டப் போகிறாராம். இவர் கலையரங்கம் கட்டவில்லை என்று ஏழை மக்கள் அழுதார்களா? அல்லது கலைகளெல்லாம் ஒரு கலையரங்கு இல்லாமல் வாடி வதங்கி நிற்கின்றனவா? சென்னை நகரில் தடுக்கி விழுந்தால் சங்கீத சபாக்களும் கலையரங்குகளும் தான் தென்படுகின்றனவே! சனி, ஞாயிறு விடுமுறைகளில் எந்த நாடகம், எந்தக் கச்சேரி, எந்தப் பரத நாட்டிய நிகழ்ச்சிக்குச் செல்வது என்று தேர்ந்தெடுப்பதற்குள் தலையைச் சுற்றுகிறது. அந்த அளவுக்குச் சங்கீத விழாவும், நாடக விழாவும், நாட்டிய விழாக்களும் போட்டி போட்டுக் கொண்டு அமர்க்களமாக நடந்துகொண்டிருக்கின்றன. மேயர் அவர்கள் அண்ணாவின் பெயரைச் சொல்லிப் பொதுமக்களின் பணத்தை விரயமாக்காமல் உபயோகமாக ஏதாவது செய்யட்டும்.

சென்னை — 14
6—12—70 மைதிலி வேணுகோபால்

★ தமிழக அரசு முன்பு வேலையற்றிருக்கும் எஞ்ஜினியர்களுக்கு ''உதவித் தொகை'' அளிப்பதென்று அறிவித்தது. தற்போது படித்துவிட்டு வேலையற்றிருக்கும் எல்லோருக்கும் 'உதவித் தொகை' அளிப்பதென முடிவு செய்துள்ளது நமது தமிழக அரசு. கடலில் பெருங்காயம் கரைப்பது போல் தமிழகமெங்கும் உள்ள வேலையற்றவர்களுக்கெல்லாம் உதவித் தொகை அளித்தால் அரசின் கஜானா கரையும். குறைந்தசம்பளத்தில் வேலை செய்பவர்கள் உதவித் தொகை கிடைக்கிறதே என்ற ஆசை மிகுதியால் தங்கள் வேலையைக்கூட விட்டு விட்டு அரசின் உதவித் தொகையை வாங்க முனைவர். சோம்பல் மிகும். செய்ய வேண்டியது என்னவென்றால் தமிழகத்தில் சிறிய அளவில் பரவலாகப் பல தொழிற்சாலைகளை நிறுவ ஊக்கம் அளிக்க வேண்டும். இதுவே அனைவருக்கும் வேலை வாய்ப்பளிக்க வழி. குறுகிய மனப்பான்மையை விட்டொழித்து இந்தியாவின் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாயினும் சரி என்று செல்வமுள்ளவர்களை இங்கு தொழிலகங்கள் நிறுவ ஈர்க்க வேண்டும். புதிய தொழில் நிறுவனங்களுக்குச் சில ஆண்டுகள்வரை வரிச் சலுகை அளிப்பதாகவும் பிற வசதிகளைச் செய்து தருவதாகவும் சொல்லி ஊக்க வேண்டும். எவ்வளவோ வளர்ச்சி அடைந்துவிட்ட அமெரிக்காவில் கூட இன்றைக்கும் பல்வேறு மாநிலங்களும் தொழிலதிபர்களைத் தங்கள்பால் ஈர்க்க இவ்விதம் சில சலுகைகள் காட்டிப் போட்டியிடுகின்றன.

சில ஆண்டுகளுக்குத் தமிழக அரசு புதிய தொழில்களுக்காக இப்படிச் சலுகை காட்டினாலும் மொத்தத்தில் வேலைவாய்ப்பும் சுபிட்சமும் பெருகுவதால் அதற்கு நஷ்டம் ஏற்படாது. நாளடைவில் அரசின் வருமானமும் பன்மடங்கு பெருகும்.

சென்னை—1
30—11—70 எம். ராமமூர்த்தி

பூஜ்யம்

ரஜனி பணிக்கர்

பூஜ்யம்

'முன்னேற்றப் பாதையில் பாரதப் பெண்' என்னும் நூலுக்கு யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் பரிசு பெற்றுள்ள ஸ்ரீமதி ரஜனி பணிக்கர் 11-9-24ல் லாகூரில் பிறந்தவர். ஹிந்தியில் ஏறக்குறைய பத்து நாவல்களும் 150 சிறு கதைகளும் எழுதிப் புகழ் பெற்றவர். இருபது ஆண்டுகளாக இலக்கிய சாதனை புரிந்து வரும் இவரது எழுத்தில் பெண் உள்ளத்தைப் பற்றிய பிரச்னைகள் அநுதாபத்துடன் அணுகப் பட்டுள்ளன. சார்லஸ் டிக்கன்ஸின் 'இரு நகரங்களின் கதை'யை ஹிந்தி மொழியில் ஆக்கித் தந்திருக்கிறார். இவரது சில நாவல்கள் உருது, மராத்தி, பஞ்சாபி, தெலுங்கு, குஜராத்தி முதலிய மொழிகளில் வெளியாகி இவரது எழுத்தாற்றலை இலக்கிய உலகுக்குப் பறை சாற்றியுள்ளன. திருமணத்துக்கு முன் ஆண் சமூகம் பெண்ணைப் பார்க்கும் விதத்தையும், பின்னர் பார்க்கும் விதத்தையும் ஒரு பெண் உள்ளம் சித்திரித்திருக்கும் அழகை இந்தக் கதையில் காணலாம். □



மேகங்கள் சூழக் குழம்பித் தோற்றம் தரும் காலை நேரம் என்றால் எனக்கு நிரம்பப் பிடிக்கும், ரவி டாகூரின் கவிதைகளைப்போல. அன்றைக்கும் அப்படித் தான் பொழுது புலர்ந்த போது மேகம் மூட்டம் போட்டிருந்தது — வாட்டமாக, அமைதியாக, துடைத்து விட்டாற்போல! நான் வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். நேரம் போவதே தெரியாமல் போய்க் கொண்டிருந்தது. நேரமும் நாமும் போட்டி போடவில்லை என்ற உணர்வே சிற்சில சமயம் எனக்கு இதமாக இருக்கும். அம்மாதிரி நேரங்களில் பொழுது போய் விட்டதே என்ற துயரம் நமக்கு ஏற்படாதல்லவா? 'எனிஸ்தேஷியா' - உணர்வு சூனியமாகிவிட்ட நிலையில், எதையும் தாங்கும் இதயம் பெற்றுவிடுகிறோம்: வேதனை—வாதனைகளை உணர்வதில்லை.

நான் மேகங்கள் வரைந்த உருவங்களைப் புரிந்து கொள்ள முயன்று கொண்டிருந்த நேரத்தில் விஜயன் வந்து விட்டார். காலை நேரத்தில் அவர் திரைப்படக் கதாநாயகனைப்போல் வருவதில்லை. ஆனால் எனது ஓரகத்தி சொன்னதன் பேரில் 'க்வல்ட்' டிஸைனில் ஒரு பட்டு டிரஸிங் கவுன் தைத்திருந்தார். ஏதோ சினிமாப் பத்திரிகையில் வந்த டிஸைனைப் பார்த்துத் தான்.

"ஸ்ரீமதி ரேணுதேவி எம்.ஏ. ஆங்கிலம், எம்.ஏ. ஃபிலாஸஃபி, பி. டி. அவர்களே! நீங்கள் உங்கள் திருமகன் சிரஞ்சீவி அநுராக் டண்டன் அவர்களின் பள்ளிக்கூட ரிப்போர்ட்டைப் பார்த்தீர்களா?" என்று பொருத்த பிடிகையோடு கேட்டார், வந்ததும் வராததுமாக.

எனக்குப் பொட்டில் அடித்தாற்போலப் பொறி கலங்கியது. இதற்குள் ரிப்போர்ட் எங்கிருந்து, எப்படி வந்தது? இப்பொழுது என்ன பரீட்சை நடந்திருக்கிறது? அநுராகன் சொல்லவே இல்லையே!

அப்பொழுது உள்ளுக்குள் ஒரு சிற்று ஒலி பாய்ந்து என்னைக் குத்தியது: 'நீதான் பல நாட்களாக அநுராகனுக்கும் பேபிக்கும் சொல்லித் தருவதில்லையே! தீபகனுக்கல்லவா செய்யுளின் பொருளை விளக்கிக் கொண்டிருக்கிறாய்? பரீட்சை எப்பொழுது நடந்தது என்று உனக்கு என்ன தெரியும்? நீதான் குழந்தைகளின் புத்தகமூட்டையை அவிழ்த்தே பார்க்கவில்லையே!'

நான் பயந்தவண்ணமே விஜயனைப் பார்த்தேன். அவருடைய தொழில் முறை கண்ட முகத்தில் ஓர் உறுதி படர்ந்து நின்றது. அவர் உரக்கக் குரல் கொடுத்தார்: "அநுராக்!"

கண்களைக் கசக்கிக் கொண்டு தூங்கி வழிந்தவாறே அநுராகன் வந்து நின்றான்.

"இவர் பெரிய துரை இல்லையா? அதனால் காலையிலே எட்டு மணி வரைக்கும் தூங்குகிறார்! கணக்கிலே பூஜ்யம் விழாமல் நூறு மார்க்குகளா வரும் இவருக்கு?"

படீரென்று ஓர் அறை விழுந்தது. அநுராகனின் கன்னத்தில். அந்த அறை என் கன்னத்தில் விழுந்தது போலிருந்தது எனக்கு.

"அம்மா!"

"வா, என் கிட்ட வா, குழந்தை! அப்பாவுக்கு என்னவோ கோபம்!" என்றேன் நான்.

"எட்டு வயதுப் பிள்ளைக்கு வாயிலே 'ஃபீடர்' ஏன் கொடுக்க மாட்டாய்? நீ அருமையாகப் பெற்ற செல்வம் ஆச்சே!" அவர் சொல்லில்தான் எத்தனை எகத்தாளம்!

அதற்குள் என் மாமியார் வெளியே வந்துவிட்டார். தம் பேரனைப் புடவைத் தலைப்பினால் மூடிக் கொண்டு. "பால் மணம் மாறாத இந்தப் பாலகனின் குற்றம் என்னவாம்? அப்பனும் சொல்லிக் கொடுக்கிறதில்லே, அம்மாவும் சொல்லிக் கொடுக்கிறதில்லே! அப்பா

தன் அலுவலகத்திலிருந்து அர்த்தராத்திரிக்கு வருகிறான் என்றால், அம்மா ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு தனக்குத் தானே என்னவோ பேசிக் கொண்டிருக்கிறாள்! சீ! இந்த மாதிரி அப்பா — அம்மாவை எங்கேயும் பார்த்ததில்லே! ஜாக்கிரதை! என் குழந்தையைத் தொட்டால் தெரியுமா, சேதி? நானே சொல்லிக் கொடுத்துக் கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் மாஸ்டருக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்!'' என்றார். அதே கையோடு அநுராகனை அழைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டார். விஜயன் அநுராகனின் பள்ளிக்கூடத்து ரிப்போர்ட்டை என் மீது விசிறி அடித்தார்.

''பாரு! உன் பிள்ளையின் புத்திசாலித்தனத்தைப் பாரு! உன் பெயரை விளங்க வைக்கப் போகிறான், தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனுட்டம்!'' என்று கூறியவாறே விஜயன் அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

'கிரண்! நீ இப்படிப் போய்விடுவாய் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை. உன்னுடைய டபுள் எம்.ஏ.யைப் பார்த்துவிட்டு உன்னைக் காதலிப்பதாக நாடகமாடினேன்!' என்று கூறுவது போல அவருடைய புருவங்கள் என்னைப் பார்த்து நெரிந்தன.

ஆமாம், நான் நாடகமாடினதாகத்தான் சொல்லுவேன். ஏனென்றால், திருமணம் ஆன ஓர் ஆண்டுக்கெல்லாம் அந்தக் காதல் உணர்வை நான் அவரிடம் காணவே இல்லை!

'எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு நீ ஒரு நல்ல ஆசிரியையாக இருப்பாய் என்று நான் நம்பியிருந்தேன். வீட்டு வரவு — செலவு கணக்கைக் கவனித்துக் கொள்ளும் ஒரு நல்ல அக்கௌண்டெண்டாக இருப்பாய் என்று எண்ணினேன். உன்னால் எதுவாகவும் ஆக முடியவில்லை. ஒரு நல்ல ஆசிரியை ஆகவும் முடியவில்லை; ஒரு நல்ல மனைவியாகவும் திகழ முடியவில்லை!' இப்படிக் குத்திக் காட்டும் வெறுப்பு உணர்வை நான் அவர் கண்களில் கண்டேன். வெகுநாட்களாக விட்டெறிந்து பேசுவதைத் தவிர நான் அவரிடம் வேறு எதையுமே காணவில்லை.

விஜயன் ஒரு பாட்டம் பாடிவிட்டு எழுந்து போய் விட்டார். நான் அப்படியே இடிந்த புளியாட்டம் உட்கார்ந்திருந்தேன். அநுராகனின் பள்ளி ரிப்போர்ட் என் கையில் இருந்தது. அதில் இருந்த பெரும் பூஜ்யம், இன்னும் பெரிதாகக் காட்சி அளித்தது! அந்தப் பூஜ்யத்துக்கு உயிரே வந்து விட்டாற் போலத் தோன்றியது! இடதுபுறமும் பூஜ்யம், வலதுபுறமும் பூஜ்யம்!

நான் செயலிழந்து உட்கார்ந்திருந்தேன். எத்தனை நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தேனோ, தெரியாது! திருமணத்துக்கு முன்னால் விஜயன் சொன்னது என் நினைவுக்குவருகிறது:



''கிரண்! நான் எப்படிப்பட்ட மனைவியை விரும்புகிறேன், தெரியுமா? என் மனைவி எல்லா விஷயத்தையும் பேசக் கூடியவளா யிருக்க வேண்டும், எந்த விஷயத்தைப் பற்றி யார் என்ன கேட்டாலும் பதில் சொல்லத் தெரிந்தவளா யிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்!''

அதைக் கேட்டு அந்த நேரத்துக்கு நான் சிரித்து வைத்தேன். ஆனால் அப்பொழுதுக்கும் இப்பொழுதுக்கும்தான் எத்தனை வேறுபாடு! இப்பொழுதெல்லாம் விஜயனுக்கே என்னிடம் பேசப் பொழுது இருப்பதில்லை; பொழுது இருந்தாலும் மனம் இருப்பதில்லை. கடிகாரத் தின் முன்னில் ஒரு கால அட்டவணை தயாரித் துக் கொண்டு வாழத் தொடங்கி விட்டார். கடிகாரத்தின் முன் கோணினால் அவர் முகம் கோணும். அதுபோன்ற கால அட்டவணையில் கட்டுண்டு வாழ என்னால் முடியவில்லை. அவருக்கும் எனக்கும் இடையே நடக்கும் பேச்சுக்கு ஓர் உதாரணம்:

''நீ இந்தப் பித்தளைக் காலண்டரின் தேதியை மாற்ற ஏன் மறந்துவிடுகிறாய்?''

நான் என்ன பதில் சொல்வேன், மௌனம் சாதிப்பதைத் தவிர?

''உனக்குத் தெரியுமா, இன்று என்ன தேதி என்று?''

பெரும்பாலும் இந்தக் கேள்விக்குத் தவ றான பதில்தான் சொல்லுவேன். கேட்டு விஜயன் ஏளனத்தோடு முகம் சுடுப்பார். ''நீயும் உன் அறிவும்! காலமோ முன் னேறிக் கொண்டிருக்கிறது. நீயோ பின்னோ டிக் கொண்டிருக்கிறாய்!'' என்பார்.

''இல்லை, நான் எங்கே இருக்கிறேனோ, அங்கேயே இருக்கிறேன், வருங்காலத் துக்கும் இறந்த காலத்துக்கும் இடையே. இறந்த காலத்திலிருந்துதானே வருங்காலத் துக்கு ஒரு வழி பிறக்கிறது!'' என்பேன்.

அவர் சிகரெட் புகையை நீள இழுத்து விட்டு, ''அப்படியானால் நிகழ் காலத்தின் நிலைமை என்னவோ?'' என்று குத்தலாகக் கேட்பார்.

''நிகழ்காலம் ஓரளவு இறந்த காலத்தின் நிழல்களில்தானே நிற்கிறது!''

''நீ பேசுவது தத்துவம். கொஞ்சம் நிலத் தில் இறங்கி வந்து பேசு. உலகத்தில் உள்ள வர்களைப் போல யோசி!''

பெரும்பாலும் இந்த இடத்தில் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்துவிடும். அப்புறம் நான் என் மனத்துள் நுழைந்து பார்க்கத் தொடங்குவேன். விஜயனும் நானும் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத அந்நியப் பறவை களாகி விட்டது போல எனக்குப் பல சமயம் தோன்றும். பார்க்கப் போனால் ஒரு வகை யில் அது சரிதானே? தொலைவிலிருந்து பறந்து வந்திருக்கிறோம். ஒரு கிளையில் உட்கார்ந் திருக்கிறோம். எங்களுக்கிடையே சிறிது நேர அறிமுகம்தான். சிறிது இளைப்பாறிவிட்டு நாங்கள் மீண்டும் பறக்க வேண்டியவர்கள் தானே? ஆனால் எப்படிப் பறக்க முடியும்? வாழ்க்கைப் புயலில் சிக்கி வளைய வளைய வரு வோம். யதார்த்தம் என்னும் மழையிலே எங்கள் இறகுகள் சொட்டச் சொட்ட நனைந்து விட்டன. எனவே, புயல் எங்களைப் பந்தாடத் தான் செய்யும். இனி என்னதான் முயன்றா லும் தன்னிச்சையாகப் பறக்க முடியாது.

ஆடம்பரமான உடையும், பகட்டான சிரிப்பும் ஒரு நாகரிகமாம். என் அறிவுக்கு இதுவரை இந்த நாகரிகம் பிடிபடவே இல்லை. சில நிமிஷங்களுக்கு முன்னால் யாரை வாயில் வந்தபடி திட்டித் தீர்த்தோமோ, அவரையே பொய்யான புன்முறுவலோடு 'வாருங்கள், வாருங்கள்! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்' என்று வரவேற்க வேண் டும் என்றால்...அது ஒரு போலி வியாபாரம் தானே!

அப்படிப்பட்டவர்களுடைய உரத்த அட்ட காசச் சிரிப்பெல்லாம், பூஜ்யம், பூஜ்யமாக உருவெடுப்பது போல எனக்குப் படுகிறது. அநுராகனின் பள்ளி ரிப்போர்ட்டில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் கூட எனக்குப் பூஜ்ய மாகத் தோற்றுகின்றன. ஆங்கிலத்தில் 'குட்' என்று போட்டிருக்கிறது. அதில் உள்ள இரண்டு சிறிய சிறிய பூஜ்யங்களும் கூடப் பெரிய பூஜ்யமாக என் கண்களெதிரே வளர்ந்து நிற்கின்றாற் போன்று பிரமை கொள்ளுகிறேன்!

அடா! அதோ வெளியில் மின்சாரக் கம்பத் தோடு ஒட்டி நிற்கிறாளே ஒரு பெண்! தன் புத்தக மூட்டையின் பளுவைத் தாங்க முடி யாமல் தாங்கி நிற்கும் அவள் பஸ்ஸை எதிர் நோக்கி நின்று கொண்டிருக்கிறாள்!

இதோ என் ஓரகத்தி காரில் ஏறி அமர்ந்து டிரைவர் துகத் பறுாதுரை, ''அட கடன் காரா! சீக்கிரம் போ! உட்கார்ந்து உட் கார்ந்து எனக்கு இடுப்பைக் கடுக்கிறது!'' என்று திட்டிக் கொண்டிருக்கிறாள்!

அதே சமயம் அந்தப் பெண் தாங்களுக்குக் கால் மாற்றிக் கொள்கிறாள். எத்தனை நேரம் தான் ஒரு காலில் தவம் கிடக்க முடியும்? அவள் பார்வையில் ஏதோ கனவு நிழலாடு கிறதே, என்னவாயிருக்கும்? வேறு என்ன? 'பெண் பார்க்கும் படலம், திருமணம், கொட்டு மேளம், பாண்டு வாத்தியம், சாந்தி இரவு — அது பற்றிய பாடல்கள்!' இப்படித் தான் ஏதாவது இருக்கும்! அப்புறம்......? திட்டு, வசவு, கடுப்பு, வெறுப்பு, காய்ச்சல், புகைச்சல் இல்லையா, அவை தோன்றும். பிறகு எல்லாமே வெறுமையாகி வெறும் பூஜ்ய மாகிவிடும். அந்தப் பூஜ்யம் பெரிதாகி அவளை மிரட்டும்! பயத்தில் முகம் கறுத்துவிடும். முகம் என்ன, மனம் கூடத்தான் கில்ட் நகை போலச் சாயம் போய்ப் பல் இளிக்கும்!

இப்படியாக மனைவி என்பவளின் சிரிப்பு செல்லாக் காசைப் போல ஒலிக்கிறது!

திருமணமான புதிதில் நானும் விஜயனும் மௌனமாயிருந்தாலும் ஒருவருடைய மொழியை ஒருவர் புரிந்து கொண்டோம். இப்பொழுதோ..? பேசினாலும், அதற்கு மாறு பொருள் கொண்டு மௌனமாகி விடுகிறோம். ஆயினும் எப்படியோ நாட்களை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். ஒருவேளை இதுதான் உலக வழக்கமோ, என்னவோ? எதையும் காட்டிக் கொள்ளாமல், விட்டுக் கொடுக்கா மல் நான் அவரோடு பேச முயன்றால்....

''கேளுங்களேன்!''

''ஏதாவது பணம் காசு வேண்டுமென்றால் டையிலிருந்து எடுத்துக்கொள்!''

என் பேச்சின் ஆரம்பத்துக்கே இந்தப் பதில் என்றால்.... என் உள்ளம் புண்பட்டுப் போகிறது. திருமணத்துக்குப் பின் கணவன

சிறியோர் கணக்கு என்பானேன்? பெரியதோர் விஷயம் எனக்கு அது

என்னுடைய பி. என். பி. பாஸ் புத்தகம் எனக்கு மெத்தப் பிடிக்கும். என்னுடைய மிக முக்கியமான புத்தகம் அது. எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா! நீயும் ஒன்று வைத்துக் கொள்ளலாம். உங்கள் அப்பாவிடம் சொல்......

பி.என்.பி.யின் மைனர் (மிநியோர்) கணக்கு உங்கள் குழந்தையின் வருங்காலத்திற்கு ஒரு உத்திரவாதம். குழந்தையுடனேயே அதுவும் வளர்ந்து, நிறைய வட்டியும் சேர்த்து கல்வி தொழில், கல்யாணம் ஆகியவற்றிற்கு உதவும் கணிசமான ஒரு தொகையாக ஆகிறது.

14 வயது ஆனபிறகு 'மைனர்' குழந்தையே அந்தக் கணக்கை இயக்கலாம். தன்னம்பிக்கையுள்ள ஆளாகக் குழந்தையை அது உருவாக்குகிறது. சிறு வயதிலிருந்தே சேமிப்புப் பழக்கத்தை ஊட்டுகிறது—ஆயுட்காலம் முழுமையும் ஒரு ஆஸ்தியாய் இருக்கும் அருங்குணம் இது.

அருகாமையிலுள்ள பி.என்.பி. கிளை அலுவலகத்திற்குச் செல்லுங்கள். நாடெங்கிலும் பல்லாண்டுக்கு 1000க்கும் அதிகமான கிளைகள் உள்ளன. இன்முகத்துடன் ஒத்தாசை செய்ய எப்போதும் காத்திருக்கும் எங்கள் மானேஜர் உங்களையும் உங்கள் குழந்தையையும் சந்திப்பதில் மகிழ்ச்சி மிகக் கொள்வார்.



பஞ்சாப் நேஷனல் பாங்க்

1895—1970
வங்கி சேவையில்
75 ஆண்டுகளுக்கு
மேல்

Pratibha-PNB-706-TA

மனைவி உறவு இந்தப் பணம் காசில்தானா போய் முடிகிறது?

"என்ன பேசாமல் இருக்கிறாய்?"

"நீங்கள் என்னை முன்போல் விரும்பவில்லை!"

ஒரு பெரிய கெக்கலிச் சிரிப்பு!

"மேடம்! நான் வேலை வெட்டி உள்ள ஆள். சின்னப் பிள்ளைகளைப் போலக் காதல் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பதென்றால் என்னால் முடியுமா?"

"வேலை வெட்டி உள்ள ஆசாமிகளுக்கு இதயம் கிடையாதா?"

அப்பொழுது அவர் அன்போடு பதில் அளிப்பார்: "சரி, இன்று மாலை ஃபாக்டரிக்கு வந்துவிடு. நாம் இரண்டு பேரும் சேர்ந்து சினிமா போய்விட்டு வருவோம்!"

"வேண்டாம். ஆற்றங்கரைப் பக்கம் உலாவப் போய் வருவோம்!"

"உன் மூளையே கெட்டுப் போய்விட்டது. எனக்குப் பொழுது எங்கே இருக்கிறது. ஆற்றங்கரைக்குப் போய்ப் படிக்கட்டிலே உட்கார்ந்து ஓடும் நீரில் கூழாங்கல் விட்டெறியவும், வட்டமிடும் நீரை வேடிக்கை பார்க்கவும்?"

அதற்குப் பின் எனக்கு எதுவுமே பேசத் தோன்றாது. விஜயன் அலுவலகம் புறப்படத் தயாராகி விடுவார். என் உள்ளத்தைக் கேட்க அவருக்கு நேரம் எங்கே?

என் பிறந்த வீட்டவர்களுக்கு அவரிடம் ஒரே சந்தோஷம். "மாப்பிள்ளை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். நல்ல சம்பாத்தியம், சாப்பாடு! நாலு பேர் மெச்சும்படியாக நடந்து கொள்ளுகிறார்! அதோடு நன்றாக உலகத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறார்!" என்பாள் என் தாயார்.

எனக்குக் குடும்பத்தார்களின் இந்தக் கருத்தைக் கேட்டால் பற்றிக் கொண்டு வரும். வாழ்க்கையில் இதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று ஏன்தான் இவர்கள் நினைக்கிறார்களோ?

மேகங்கள் குமுறிக்கொண்டு வருகின்றன. மழையைப் பொழிந்து விட்டுச் செல்கின்றன. நான் வராந்தாவில் அமர்ந்து அவை குமுறுவதையும் மழை பொழிந்து செல்வதையும் காண்கிறேன்.

அதே நேரத்தில் என் மனமும்தான் குமுறுகிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் கண்கள் நீரைப் பொழிகின்றன.

அந்த நாட்களில் என் ஒத்த வயதுப் பெண்களிடம் விளையாட எனக்கு வெட்கமாயிருக்கும். என்னைவிடச் சிறிது பெரிய பெண்களோ என்னைக் குழந்தை யென்று நிராகரித்துத் தள்ளி ஒதுக்கி விடுவார்கள். எனவே, எல்லோரிடமிருந்தும் விலகி ஒரு மூலையில் உட்காரும்படி இருந்தது. நான் என்னுடனேயே விளையாடி என் மனத்தை மகிழ்வித்துக்கொள்ள வேண்டியிருந்தது. நானும் என் உள்ளே இருந்த [illegible]தான் வெகு நாளைய இணை பிரியாத் தோழிகள்! இப்படியாக எனக்குத் தனிமைப் பழக்கம் எல்லை மீறி ஏற்பட்டு விட்டது. நாலு பேரைக் கண்டாலே நடுங்கும் அளவுக்கு என் தனிமை உணர்வு உருவாகி விட்டது. பலபேருடன் அமர்ந்து வாழ்க்கை வாழ முடியாது; அப்படி பாவனை வேண்டுமானால் செய்யலாம் என்றே எனக்குப் படுகிறது! நாம் பிறருக்கு, நாமாக இல்லாத தன்மைத்தான் காட்டுகிறோம். நாம் என்ன ஆக விரும்புகிறோமோ, அதைக் காட்டுவதில்லை. ஆனால் என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. என் ஓரகத்தி அப்படி இல்லை. மாமியாருக்கு ஏற்ற மருமகளாக நடித்து நல்ல பெயர் எடுப்பாள். தொட்டிலையும் ஆட்டிவிட்டுக் குழந்தையையும் கிள்ளும் பணியை வெகு சாமர்த்தியமாகவும் அழகாகவும் செய்வாள்.

நான் வேலை பார்த்தபொழுது மாமியார் என்னிடம் ரொம்பவும் பிரியமாயிருந்தார். இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் வந்ததே. அது ஏன் எனக்குப் பிடிக்கவில்லை என்பது அவருக்குப் புரியவில்லை. நான் ஏன் அந்த ரூபாயை உதறி எறிந்தேன், வேண்டாம் என்று? நான் குழந்தை வளர்க்கும் முறைகூட அவருக்குச் சரியாகப் படவில்லை. அதனால் குழந்தைகளை அவரே கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார்! அவர் கருத்துப்படி, குழந்தைகளுக்கு உணவு இறங்கவில்லையென்றால், சர்க்கரையும் நெய்யும் சேர்த்துச் கலவை ஏற்படுத்திச் சாப்பிடச் செய்துவிட வேண்டும். என்னைக் கேட்டால் அவர் குழந்தைகளுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுத்து வந்தார் என்றுதான் கூறுவேன். பலன் அவருக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொடுப்பது மிகவும் சிரமசாத்தியமான காரியமாகி விட்டது. 'எழுதப் படிக்கத்தான் பள்ளிகளில் சொல்லித் தருகிறார்களே! வீட்டிலும் எதற்குச் சொல்லித் தரவேண்டும்? அஜயனுக்கும் விஜயனுக்கும் வீட்டில் யார் சொல்லிக் கொடுத்தார்கள்?' என்று கேட்கிறார். ஒருவேளை அவர் கூறுவது சரியாகவும் இருக்கலாம். ஆனால் குழந்தை வளர்ப்புப் பற்றி நான் படித்த புத்தகங்கள் எல்லாம் நேர் மாறாகக் கூறுகின்றன.

இந்த நிலையில் நான் குழந்தைகளையே சரியாகக் கவனிப்பதில்லை என்று அவருக்குக்

அதிகாரியை அடிக்க...

தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்குத் தங்களைக் கடுமையாக வேலை வாங்கும் மேற்பார்வையாளர்கள் மீது கோபம் வருவது இயற்கை. அதைப் போக்க ஜப்பானில் தொழிற்சாலைகளில் அதிகாரிகள் உருவில் பொம்



...அனுமதி!

மைகளை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் ஓய்வு நேரத்தில் இந்தப் பொம்மைகளை ஆசை உள்ள மட்டும் கழியால் அடித்துத் தங்கள் கோபத்தைப் போக்கிக் கொள்கிறார்கள்.

'பிஸினஸ் வீக்' — 'பாபு'

குறை! இதை அவர் சுட்டிக் காட்டினால் எனக்குத் தவறாகப் படுகிறது.

தீபா பிறப்பதற்கு முன்னால் நானும் கல்லூரியில் சொல்லிக் கொடுத்து வந்தேன்! எல்லாக் காரியங்களையும் அவசரம் அவசரமாக ஓடியாடிச் செய்யவேண்டியிருந்தது. அப்பொழுதெல்லாம் எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. நான் கண்ட கனவுகள் எதுவுமே நிறைவேறவில்லை. நான் என் உயர் கல்வியைக் கொண்டு என்னவெல்லாமோ பெற விரும்பினேன். ஆனால் எதுவுமே கிட்டவில்லை. அதனால்தான் எதைக் கண்டாலும் எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. என் கணவருக்கு அது நான் மகிழ்ச்சியோடு இல்லையென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. அதனால் சந்தர்ப்பம் கிடைத்தபொழுதெல்லாம் 'வேலையை விட்டுவிடுவதற்கென்ன? உனக்கு வேலையினால் கிடைக்கும் பணத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு செலவாகிவிடுகிறது. குழந்தைக்கு 'அப் டு டேட்' ஆயா ஒருத்தி போட வேண்டியதாகிறது. ஒருவருக்கு இருவராக வேலைக்காரர்கள் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால், உன்னால் வீட்டு வேலைகளில் கைகொடுத்து உதவ முடிவதில்லை!'' என்பார்.

நான் வேலையை விட்டுவிட்டேன்.

ஒரு நாள் அவர் கூறினார்: ''கிரண்! இன்று என் நண்பர்கள் வரவிருக்கிறார்கள். மீர்சந்தானி, பிரகாஷ், காங்குலி. அவர்களோடு அவர்களுடைய மனைவிமார்களும்கூட ஒருவேளை வரலாம்!''

நான் மௌனமாயிருந்தேன். ''என்ன, நான் சொல்வது?'' என்றார் அவர்.

''வரட்டுமே! நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதைத் தயாரித்து விடுகிறேன். காப்பி சொன்னால் காப்பி, தேநீர் சொன்னால் தேநீர்'' என்றேன்.

''காப்பி வேண்டாம்.''

''அப்போ?''

'' நீ எத்தனையோ ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிக்கிறாயே, அவற்றில் பார்ட்டி என்றால் என்ன என்ன செய்யலாம் என்று போட்டிருப்பதில்லையா?'' என்று கேட்டவரின் முகத்தில் குத்தலான குறுநகை ஒன்று ஓடியது.

'' நீங்கள் பார்ட்டிக்கு என்ன வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்? உப்பு, இனிப்பு, ஸான்ட்விச், சிப்ஸ், ஃபிஷ்பிங்கர்... எது வேண்டும், சொல்லுங்களேன்!''

''பெண் நீயா, நானா?''

''பெண்ணாகப் பிறப்பது துரதிர்ஷ்டம் என்று எனக்குத் தெரியாது. பெண்ணாகப் பிறந்தவள் சோதிடமும் அறிந்திருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லையே!''

விஜயன் என் முகத்தையே பார்த்தார். ''எந்த விஷயத்தையும் நீ பெரிதாக 'சீரியஸா'க எடுத்துக் கொண்டு விடுகிறாய்! நான் சொல்ல வந்தது என்னவென்றால்....'' என்றவரால் தாம் சொல்ல வந்ததைச் சொல்ல முடியவில்லை. பதிலாக வேறு ஒன்று சொன்னார்:

'' படித்த பெண்ணை யாருமே திருமணம் செய்து கொள்ளக் கூடாது! கணவனைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் அவர்கள் ஒரு 'பூஜ்யம்'' என்றார்.

அந்தப் 'பூஜ்யம்' என் உள்ளத்திலே போய்த் தைத்தது. இருந்தாலும் அன்று மாலை விருந்தில் நாங்கள் அமர்ந்து தங்கள் தங்கள் பணியைச் செய்தோம்; பங்கை நிறைவேற்றினோம்; ''நான் மனைவியிடம் மிகவும் பயப்படுகிறேன். ரொ ம் ப ப் படித்திருக்கிறாள்!'' என்றார் அவர்.

''பேஷ்! உனக்குச் சொல்லித் தருகிறாளோ இல்லையோ?'' என்றார் ஒரு நண்பர்.

அதைத் தொடர்ந்து ஒரு 'கட கட'ச் சிரிப்பு! எனக்குக் கோபம் வந்தது. என்னையே நொந்து கொண்டு பேசாமல் இருந்தேன்.

இடையில் யாரோ ஒருவர் 'கரடி' விட்டார்: ''நீ மனைவியின் சம்பாத்தியத்தில் உண்டு உடுத்தி மினுக்குகிறாய்! ஏதோ ஓர் 'ஏர் லைன்ஸ்' விளம்பரத்துக்குப் 'போஸ்' கொடுக்கப் போகிறவன் மாதிரியல்லவா காணப்படுகிறாய்! இந்தப் பகட்டுக்கு அடிப்படை என்ன என்பது இப்பொழுதுதான் எங்களுக்கு விளங்குகிறது!''

இதைக் கேட்டு விஜயன் திணறிப் போய் விட்டார். எனக்கு அவர்கள் பேச்சு மிகவும் மட்டமானதாகப்பட்டது.

அன்று இரவுதான் எனக்கு உத்தரவு போடப்பட்டது. 'உடனே வேலையை விட்டுவிடு!' என்று.

நான் பேசாமல் கேட்டுக் கொண்டேன். என் மௌனத்தைச் சம்மதமாக எண்ணி அவர் தூங்கி விட்டார். மறுநாள் மறந்து போனார். நானும் வேலைக்குப் போனேன். திருமணமான புதிதில் எனக்குத் தொழிற்சாலையில் பெருமதிப்பு. ஓரொரு சமயம், 'நீதான் படித்தவள் ஆயிற்றே! கொஞ்சம் லெட்ஜர் பார்க்க வாயேன்! பொருளாதாரத்தை முக்கியப் பாடமாக எடுத்து எம். ஏ. தேறியிருக்கிறாயே! லெட்ஜர் பார்ப்பதில் என்ன தவறு?'' என்பார்.

நானும் தொழிற்சாலைக்குச் செல்வேன். அங்கே அவருக்கென்று தனியாக இளைப்பாற ஓர் அறை உண்டு. அங்கே போட்டிருந்த குட்டைக் கட்டிலில் நான் வெள்ளை ஜாலர் தொங்கும் விரிப்பைப் பளிச்சென்று விரித்து எழிலுறச் செய்தேன்.

நான் ஆலையின் ஒவ்வொரு அலுவலிலும் அக்கறை காட்டினேன்; ஆலையும் என் பணியைப் பெரிதும் பாராட்டி ஏற்றது. என் வாழ்வும் செயலும் அப்பொழுது எனக்குப் பொருளற்றதாகப்படவில்லை. நானே படித்த மனைவி; என் கணவருக்கும் அதில் ஒரு பெருமை. என்னைப் பற்றிப் பேசும்பொழுது அப்பொழுதெல்லாம் அவர் முகத்தில் புன்னகைதான் படரும்; முகம் 'பூஜ்யம்' போடாது.

எதிரே வெள்ளை மேகங்கள் 'ஜாலர்' தொங்கும் திரைபோலக் காட்சி தந்தன. வானத்தில் மேகங்கள் மிதந்து வந்தால், மனம் இலேசாகத் தோன்றுகிறது. மனத்தில் கூட்டம் போட்ட மேகங்களோ, அப்படியே அடங்கிப் புழுங்கி ஈரம் காத்து நின்றுவிடுகின்றன.

எனக்குப் படிப்பது என்பது பழைய பழக்கம். என்னைப் பொறுத்த வரையில் இரண்டு மூன்று பத்திரிகைகள் உள்ளன. அவற்றைப் பார்க்காவிட்டால் எனக்கு


SANKAR CEMENT
I C
மலிவு விலை வீடு
கிராமங்களில் ஒரு புதிய புரட்சி
சங்கர் சிமெண்ட்
பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிறைந்து— இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!
இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குசேலம்', சென்னை-18

மனசே என்னவோபோல் இருக்கும். நான் விடாமல் அவற்றைப் படிப்பேன். பத்திரிகைக்காரன் கொண்டு வந்து போட மறந்தால், நானே அவற்றை வாங்கி வருவதற்காகக் கடைத்தெருவுக்குப் போய்விடுவேன்.

''புடவை – ரவிக்கை வாங்குகிறது, குழந்தைகளுக்குத் துணிமணி எடுக்கிறது என்றால், கடைத்தெருவுக்குப் போய் வருவதுண்டு. கேள்விப்பட்டிருக்கிறேன். குப்பைக் காகிதங்களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக யாராவது கடைத்தெருவுக்குப் போவார்களோ? வீணில் பெட்ரோல் செலவாகிறது. அல்லது டாக்ஸிக்கு வாடகை போகிறது!'' என்று முணுமுணுப்பார் அவர் அம்மா.

'இரண்டு நிமிஷம் பத்திரிகை படிக்கிறதிலே என்னதான் இன்பமோ? அதோடு படிக்கிறது ஆண் பிள்ளைகள் வேலை! பெண்களுக்கென்ன, சினிமா விளம்பரம்தானே பார்க்கவிருக்கிறது!' இப்படி ஓர் எண்ணம் அவருக்கு.

விஜயனும் என்ன சொல்கிறார் என்றால், நான் நாள் முழுவதும் ஏதோ கவலையிலும் சிந்தனையிலும் ஆழ்ந்திருக்கிறேனாம். படித்த படிப்பை நான் சரிவரப் பயன்படுத்துவதே இல்லையாம்.

மெய்தான்! ஏதாவது படித்தால்கூட உள்ளுக்குள்ளேயேதானே வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! என்னோடு பேசுகிறவர்களும் கிடையாது. என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறவர்களும் கிடையாது. டி. எஸ். இலியட்டின் நாடகங்களின் தொகுப்பு ஒன்று மார்க்கெட்டில் வந்திருந்தது. நான் அதை வாங்க நினைத்தேன். ''இப்பொழுது வேண்டாம். விலை ரொம்ப அதிகமாக இருக்கிறது. அடுத்த மாதம் பார்த்துக் கொள்ளலாம். இந்த மாதம் நான் ஒரு 'காட்டன் பாண்ட்' தைத்துக் கொள்ள விரும்புகிறேன்!' என்று கூறிவிட்டார் அவர். ஆமாம், எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டார், 'காட்டன் பாண்ட்' வாங்கிக் கொள்ள வேண்டியதுதான் முக்கியம், டி. எஸ். இலியட்டில் என்ன இருக்கிறது என்கிறாற்போல. 'எல்டர் ஸ்டேட்ஸ்மென்' என்ற இலியட்டின் நாடகமொன்றை நான் விஜயனைப் படிக்க வைத்தேன், மிகவும் வற்புறுத்தி. அவருக்கு அது பிடிக்கவும் செய்தது.

கல்லூரி வாழ்க்கையில் நாம் நன்றாகப் படித்தோம் என்பதையே இந்த ஆண்கள் எப்படி இவ்வளவு விரைவில் மறந்துவிடுகிறார்களோ, தெரியவில்லை! வேலைக்கென்று போய் விட்டால், இவர்களுக்கு இலக்கியக் கலை அலுவலக வாழ்க்கையாக மாறிவிடுகிறது. அலுவலக வேலைகளில் இலக்கியத்தில் உள்ள ஈடுபாட்டையே மாய்த்துக் கொண்டு விடுகிறார்கள்! எனக்கோ இதைப் படிக்க வேண்டும், அதைப் படிக்க வேண்டும், படித்ததைப் பற்றிப் பேச வேண்டும் என்று ஆசை; துடிப்பேன்!

நாகத்தியோ எப்பொழுதும் அம்மாவோடு ஒட்டிக் கொண்டிருப்பாள். விலைவாசி ஏற்றம், வேலைக்காரர்களை அதட்டி உருட்டி வேலை வாங்குவது, நல்ல – கெட்ட துணிகளை எடுத்துச் சீர்ப்படுத்துவது என்று ஏதாவது செய்து கொண்டிருப்பாள். ஒரு தடவை தொலிக்கு முன்பே வளையல்காரி வந்துவிட்டாள். அம்மா அன்போடு அவளுக்கு வளையல்கள் அடுக்குவித்தார். மணிக்கட்டிலிருந்து முழங்கை வரையில் ஜயபூரின் கல் பதித்த கங்கணம், கண்ணாடிக் கல் பதித்த வங்கி என்று பார்த்துப் பார்த்துப் போட்டார். என்னிடமும் சொன்னார். நான் கைக்காக நான்கு எடுத்துக் கொண்டேன். அம்மாவுக்கு ஏமாற்றம். 'இதைக் காட்டிலும் அதிக வளையல்கள் போட்டுக் கொள்வதால் என்ன பயன்? வீணில் பணம்தான் விரயமாகும்' என்று அவருக்கு எடுத்துச் சொன்னேன். அதைக் கேட்டு அவருக்கு ஏகக் கோபம். வருகிற போகிற பெண்களிடத்தில் எல்லாம் இதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்.

நான் சில சமயம் மினித் தோட்டம் போட முயன்றால், நாகத்தி அதைக் குப்பை–கூளம் போல் பிடுங்கி எறிந்து விடுவாள். ''வெளியிலேதான் தோட்டம் பெரிதாகக் கிடக்கிறதே! வீட்டுக்குள்ளே எதற்காம்? வெளியிலே கிடக்கும் செடிகளை வீட்டுக்குள் கொண்டு வந்து குப்பையாக்குவானேன்?'' என்பாள்.

எனக்குப் பல சமயமும் குற்றம் என்னுடையதுதான் என்று தோன்றுகிறது. என்னால் இந்த உலக வாழ்க்கையோடு ஒத்துப் போக முடியவில்லை. ஆனால் எனது கொழுந்தன் நிபகன் சொல்வது என்ன, தெரியுமா? ''நான் உங்களைப் போன்ற பெண்ணைத்தான் மணந்து கொள்ளுவேன்!'' என்கிறான்.

''வேண்டாம், தம்பி! அப்படிச் செய்து விட்டால் இன்னும் தொந்தரவை வளர்த்துக் கொள்ளாதே!'' என்கிறேன் நான்.

''அண்ணி! திருமணம் என்றால், அது ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது தானே?''


''ஆமாம். திருமணத்துக்கு முன்னால் அப்படி இதுதான் பொருள். திருமணத்துக் குப்பின் அந்த வாழ்க்கைத் துணையின் நிலை சுதந்திரமற்ற ஒரு சொந்த வேலைக்காரனை ஒத்ததுதான்!''

'' இல்லை, அண்ணி! எல்லோரையும் அண்ணனாகக் கருதிவிடலாமா?''

நிபகனின் கண்களில் ஒரு கனவு நீந்துகிறது. ஆனால் விஜயனுக்கெதிராக யாராவது ஏதாவது சொன்னால் எனக்குத் தவறாகப்படுகிறது. ''நிபக! நீ ரொம்பவும் விஞ்சிப் போகிறாய்!'' என்று நான் கூச்சலிடுகிறேன்.

அப்புறம் பேச்சுப் போக்கு மாறிவிடுகிறது. அவன் டி. எஸ். எலியட்டையும் ரவீந்திரநாத் டாகூரையும் பற்றிப் பேசத் தொடங்குகிறான்.

''பெண்களின் குரலைப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் தொடர்ந்து கேட்க முடியாது. ஆண்கள் குரல் நீண்ட நேரம் கேட்டாலும் நன்றாக இருக்கும்.''



இதைச் சொல்லி இருப்பவர் ரேடியோவில் ஆங்கிலத்தில் செய்திகள் வாசிக்கும் திருமதி லதிகாரத்னம்.

'பெமினா' — 'முத்து'

நான் அங்கே எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தேனோ, நினைப்பில்லை. அண்ணியே தேநீர் எடுத்து வந்தாள். "கிரண்! வருத்தப்படாதே! குழந்தைகள் பாஸாவதும் ஃபெயிலாவதும் சகஜம்தான். இந்தா, தேநீரை அருந்து!" என்று ஆறுதல் கூறினாள்.

இன்னொரு நாள் நடந்த நிகழ்ச்சி அது. விஜயன் யாருடனோ டெலிபோனில் உரக்கப் பேசிவிட்டு ஏதோ முணுமுணுத்துக் கொண்டே உள்ளே வந்தார்.

"துரைசாணி அம்மையாரே! மிகப் பிரமாதமான காரியம் ஒன்று செய்து வைத்திருக்கிறீர்கள் போல் இருக்கிறதே!"

"ஏன், என்ன ஆயிற்று?"

"ராய் ஸாஹப்பின் போன் வந்தது."



எழுத்தாளர்: நான் இத்தனை வருஷமா எழுத்தாளனா இருந்து என்ன பிரயோசனம்? சொந்தமா வீடோ வாசலோ, சொத்தோ சுகமோ எதுவும் இல்லே.

மனைவி: அது மட்டுமா? சொந்தமாக் கற்பனையும் கிடையாது.

விஜயனின் விழிகளில் அதே பழைய ஏளனம் தாண்டவமாடியது. ராய் ஸாஹப்பின் பெண்ணுக்கும் தீபகனுக்கும் அவர் திருமணம் செய்ய விரும்புகிறார். தீபகனோ அந்தப் பெண்ணை விரும்பவே இல்லை. இரண்டு நாட்கள் முன்பு அவன் சொன்னதன் பேரில் நான் அம்மாவின் சார்பில் ராய்ஸாஹப்புக்குக் கடிதம் எழுதினேன், "இந்தச் சம்பந்தத்தில் எங்களுக்கு விருப்பம் இல்லை. பையனுக்குப் பெண் பிடிக்கவில்லையாம்!" என்று.

"தேவியவர்களே! தாங்கள் எத்தகைய காரியம் செய்திருக்கிறீர்கள் என்பது தெரிகிறதா? லட்சக்கணக்கில் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டீர்கள்!" என்றார் விஜயன்.

நான் பேசாமல் இருந்தேன். அவர் 'வெகண்டை'ப் பேச்சைக் கேட்டு எனக்கு அழுகை வந்தது.

"தீபகனுக்கு வயது இருபத்தைந்து ஆகிவிட்டது. நீங்கள் உங்களைப் போலவே அவனையும் பூஜ்யமாக்க விரும்புகிறீர்களா? எந்த வேலைக்கும் அவன் உருப்படியாகத் தேற மாட்டான். திருமணம் நிச்சயித்த இடம் பசையுள்ள இடம்; லாபம் தரக்கூடிய இடம். அவன் வாழ்நாள் முழுவதும் ஒன்றும் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தாலும் வயிறார உண்டு களித்து வாழலாம். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து அவன் வாழ்வைக் குட்டிச்சுவராக்கி விட்டீர்கள். அறிவு வேண்டாம் உனக்கு? அவனைக் காட்டிலும் வயதில் பெரியவளாயிற்றே! — பெண்ணிடம் என்ன குறையைக் கண்டாயாம்? மற்றப் பெண்களைப் போலவே அவளுக்கும் இரண்டு கைகளும் கால்களும் இருக்கத்தானே செய்கின்றன?" என்று சாடினார்.

என் ஓரகத்திக்கு எப்படித்தான் அந்த வேகம் வந்ததோ, தெரியவில்லை! அவளுடைய சிவந்த முகம் புறுபுறுத்தது. "சீ, விஜயன்! நீயும் ஒரு மனிதனா? காட்டு மிராண்டிக் கணவன்மார்களைக் காட்டிலும் நீ கீழானவன். ராய் ஸாஹப்பினுடைய மகளைத் தீபகனுக்குப் பிடிக்கவில்லை. எங்கள் இருவரையும்தான் வீட்டில் அடைத்துப் போட்டாயிற்று! எப்படியோ வாழ்க்கை ஓடுகிறது! அவள் ராய் ஸாஹப்பின் அருமந்தப் பெண்; ஒரே பெண்! கார்டு—போர்டு தொழிற்சாலையின் எசமானி. தீபகன் அலட்சியப்படுத்தினால் அவள் சகிக்க மாட்டாள். அவள் தானாயிற்று, தன் தொழிற்சாலையாயிற்று என்று போய் விடுவாள்! நீங்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்க வேண்டியதுதான்! கிரணை இருக்கக் கொண்டு வேலைக்காரியின் பேச்சைச் சுமமே பேசாமல் கேட்டுக் கொள்கிறான். கிரணின் அறிவு ஏன்தான் இப்படிப் போயிற்றோ, எனக்குப் புரியவில்லை! இவளும் நினைத்தால் வேலைக்குப் போகலாம். அடிக்கடி உன்னிடம் பூஜ்யப் பட்டமும் கட்டிக் கொள்ளத் தேவையிராது" என்று கொட்டித் தீர்த்துவிட்டாள்.

"அண்ணி! எல்லாம் அறிந்திருந்தும் நீங்களுமா இவனோடு சேருகிறீர்கள்!" என்று 'ஐஸ்' வைத்தார் விஜயன்.

என் ஓரகத்திக்குத் தன்னைப் பற்றிய அந்தப் புகழுரையைக் கேட்டதும் முகம் மலர்ந்தது.

"இல்லை, நான் உண்மையைத்தான் சொல்கிறேன். பட்டப் படிப்பினால் மட்டும் திருமண வாழ்வு இன்பம் பெறுவதில்லை. கார்டு—போர்டு பாக்டரியும் அந்த வாழ்வுக்குப் பயன் பெறாது. இது ஒரு 'சான்ஸ்'; வாய்ப்பு! திருமண வாழ்வு நல்லபடியாகக் குதிர்ந்தால்தான் இன்புற முடியும்!" என்றாள்.

விஜயனின் முகத்திலே அகந்தை உணர்வு மிடுக்கேறி மெருகிட்டு ஒளி வீசியது.

"இத்திருமணம் கட்டாயம் நடைபெறும்; நடைபெற்றே தீரும்!" என்று கூறிக் கொண்டு கால் ஒலி எழுப்பியவாறு அலுவலகத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

அண்ணி வீட்டுக்குள் போய் விட்டாள். நான் கையில் இருந்த 'ஜீரோ' பூஜ்யத்தை விட்டு விட்டு, பத்திரிகையில் தேவைப் பகுதியைப் படிக்கலானேன். உண்மையில் நான் மற்ற காரியங்களில் எல்லாம் 'பூஜ்யம்' தான் என்றாலும் ஏதாவது ஒரு காரியம் செய்யலாம் அல்லவா? கொஞ்சம் பணமாவது சேர்க்கலாம் அல்லவா? பூஜ்யத்துக்கும் பூஜ்யத்துக்கும் முன்னால் மூன்று, நான்கு ஐந்து என்று ஏதாவது ஓர் எண்ணைச் சேர்த்தால்..... அந்தப் பூஜ்யத்தின் மதிப்பு உயரத்தானே செய்யும்? அந்த எண்ணுக்கும் விஜயனின் கண்களில் உள்ள ஏளனத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது! அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே!....

மழை மீண்டும் வலுத்தது. —ரா. வீ


COCOA MALTINE
PERFECT TONIC FOOD
இலவசம்
ஒவ்வொரு 450 கிராம் டப்பியினுடன்
ஒரு நூதன குவளே
கைவசம் உள்ள வரையில்
கோகோ மால்டீன்
முழுமையான ஆரோக்கிய உணவு
COCOA MALTINE
வேலே செய்யவோ
விளேயாடவோ
கோகோ மால்டீன்
ஆரோக்கியமாகவும்
மகிழ்ச்சியாகவும்
இருக்கச் செய்யும்
கோகோ மால்டீன் லாபரேடரீஸ்
புரொப்: ட்ரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்.,
46, பூசா ரோட், நியூ டில்லி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

பாருங்கள்...வித்தியாசத்தை!

வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது டினோபால்



விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள் சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள் ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.



டினோபால் என்ற பெயர் ஜெ.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பாஸல் ஸ்விட்சர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.

Shilpi HPMA 12A/70 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon